WWW.AKARAM.EU

இலவச தமிழ் மாத இதழ்

AKARAM

# அகரம்

14. சித்திரை - 13. வைகாசி 2012

சுவடி: 12 திருவள்ளுவர் ஆண்டு 2043 நந்தன வருடம்




## அவர்களின் ஆசைகள் நிறைவேற்றப்படுமா?

FREE CIRCULATION:
GERMANY, SWITZERLAND, FRANCE, ENGLAND, DENMARK, NORWAY, HOLLAND, SWEDEN, ITALY, CANADA

# வெளி நாட்டு அழைப்புகள் 1öre யில் இருந்து

# Lycamobile டென்மார்க்



| | வீட்டு தொலைபேசி | கைத் தொலைபேசி |
|---|---|---|
| அவுஸ்ரேலியா | 0.06Kr /min | 0.94Kr /min |
| இலங்கை | 0.58Kr /min | 0.78Kr /min |
| இந்தியா | 0.06Kr /min | 0.06Kr /min |

| | வீட்டு தொலைபேசி | கைத் தொலைபேசி |
|---|---|---|
| கனடா | 0.06Kr /min | 0.06Kr /min |
| ஐக்கிய ராஜ்ஜியம் | 0.06Kr /min | 0.69Kr /min |
| சுவிட்ஸர்லாந்து | 0.06Kr /min | 2.29Kr /min |

வெளி நாட்டு குறுந்தகவல் (SMS) Kr 0.99

உள் நாட்டு குறுந்தகவல்(SMS) Kr 0.19

## தங்களது தற்போதைய கைத்தொலைபேசி எண்ணை Lycamobile க்கு மாற்றி 200Kr பெறுமதியான நிமிடங்களை இலவசமாக பெற்றிடுங்கள்!

**Lycamobile லில் இருந்து Lycamobile க்கு**

***இலவச அழைப்புகளை பெற்றிடுங்கள்**

மேலதிக விபரங்களுக்கு

**www.lycamobile.dk 70 14 55 56**

*லைக்காமொபைலில் இருந்து லைக்காமொபைலுக்கு 30 நிமிடங்கள் இலவசமாக பேசி மகிழலாம். அடுத்து வரும் ஒவ்வொரு நிமிடங்களுக்கும் வழமையான கட்டணம் அறவிடப்படும். இணைப்புக் கட்டணமாக 0.99Kr அறவிடப்படும்.

*சலுகை கட்டணங்கள் கால வரையறைக்குட்பட்டவை. மேலதிக விபரங்களுக்கு www.lycamobile.dk

Lyca mobile
Call the world for less

Lycamobile வாங்கக்கூடிய இடங்கள்:

Fleggaard, Super Brugsen, Dagli'Brugsen, Kvickly, POST, Blockbuster, KWIK SPAR, SUPER SPAR, Q8, 7-Eleven, extra, OK+, Super Best, Shell, Brugsen, Kvickly xtra, WHSmith, LØVBJERG, SPAR, EUROSPAR

★ வங்கிக்கடன் (5.9% இலிருந்து)

★ நிறுவன வங்கிக்கடன் (9.1% இலிருந்து)

★ வீட்டுக்கடன் (1.1% இலிருந்து)

★ வாகனக்காப்புறுதி (30% இலிருந்து)

★ ஆயுட் காப்புறுதி

★ குழந்தைகளுக்கான காப்புறுதி

★ மருத்துவக் காப்புறுதி

★ பிரையாணக் காப்புறுதி

★ வீட்டுக்காப்புறுதி

★ இலவச சட்டத்தரணிக்கான காப்புறுதி

★ நிறுவனங்களுக்கான காப்புறுதி









**SHELVAZUG**

**KREDIT & VERSICHERUNG & IMMOBILIEN**

SHELVAZUG GmbH (P.T.THURAIRAJAH), BIRKENMATT 23, 6343 ROTKREUZ

TEL 041 790 64 63 FAX 041 790 64 68 NAT 079 514 64 28

www.shelvazug.com shelvazuggmbh@bluewin.ch

tMedia Network

நிறுவனத்தின்



அகரம்

மாதாந்த இதழ் - Monthly Magazine

14. சித்திரை - 13. வைகாசி 14. Apr. - 13. May 2012

சுவடி 12 Issue 12



தலைமை ஆசிரியர்:
திரு. த. இரவீந்திரன்

உதவி ஆசிரியர்:
திரு. வன்னித்தம்பி

ஆசிரியர் குழு:
திரு. பவித்திரன் (இலங்கை)
திரு. தயாபரன் (இலங்கை)
திரு. வண்ணை தெய்வம் (பிரான்ஸ்)
திரு. எதிர்மன்னசிங்கம் (சுவிஸ்)
திரு. சண் தவராஜா (சுவிஸ்)
திரு. அறிவழகன் (ஜேர்மனி)

சிறுகதை ஆசிரியர்:
திரு. இரா. அருணாச்சலம்

நிழற்படப்பிரிவு:
திரு. வியாசன்
செல்வி. கயல்விழி

ஒப்பு நோக்குனர்:
திருமதி. தாமரைச்செல்வி (ஜேர்மனி)
திரு. அர்ஜுன் (ஜேர்மனி)



தொடர்புகளுக்கு:
tMedia Network
PO. BOX 4153, 59037 Hamm
Germany
Tel: 00 49 23 81 98 77 897
Fax: 00 49 23 81 97 25 556
Email: *editor@akaram.eu*

www.akaram.eu



No part of this publication may be reproduced, copied or transited in any form or by any means or stored in any information storage or retrieval system without the publisher's written permission.

©tMedia Network 2011.
All rights reserved.


# நுழைவாயில்...

அகரம் வாசகர்களுக்கு வணக்கம்,

உங்கள் கரங்களில் காட்சி தரும் அகரம் தனது ஒரு வருட நிறைவை பிறக்கின்ற இத் தமிழரின் சித்திரைப் புது வருடத்தில் காண்கிறது. எல்லாப் பெருமை-யும் வாசகராகிய உங்களுக்கும் விளம்பர ஆதரவு வழங்கி நிற்கும் வணிகப் பெருமக்களுக்குமே உரியது. வரலாற்றுத் தேவையின் கருவியாக அகரக் குழுமமும் ஆக்கதாரரும் வடிவமைப்பு அச்சகம் மற்றும் விநி-யோக பிரிவினரின் பங்களிப்பும் இந்தச் சாதனைக்கு உரமிட்டுள்ளன.

தை மாத முதல் நாளே தமிழரின் புது வருடம் என ஒரு சாரார் மிக ஆக்குரோசமாக வாதிட்டு வரும் வேளையில் அகரம் தனது முதலாவது வருட நிறைவைக் காணுகி-றது. அகரத்தின் தொடக்க இதழ் முதலே சித்திரை மாதம் தொடக்கமாக உள்ள மாதங்களின் பெயர்களின் அடிப்படையில் வெளியாக்கம் பெற்றுள்ளதை கவனிக்கலாம்.

தமிழரின் பண்பாட்டு கலாச்சார விழுமியங்களைப் போற்றுவதும் பேணுவதும் எமது கொள்கையாக வைத்திருக்கிறோம். எனவே எத்தகைய மாற்றம் ஆனாலும் அறிவுடையோரின் ஆலோசனையுடனும் அறிவு பூர்வமான ஆதாரங்களின் அடிப்படையிலும் அமைய வேண்டும் என்பதிலும் அவற்றையே அகரமும் கடைப்பிடிக்கும் என்பதிலும் நாம் தெளிவான எண்ணம் கொண்டுள்ளோம்.

பகுத்தறிவு அரசியல் எமக்குள் நுழையும் வரை சித்திரைப் புதுவருட தினத்தில் மருத்து நீர் தலையில் வைத்து காலையில் நீராடிப் புத்தாடை புனைந்து கோ-யில் சென்று வணங்கி கை விசேடம் எனப்படும் பணப் பரிசை வெற்றிலையில் வைத்து ஒருவருக்கு ஒருவர் கொடுத்து வாங்கி புதுவருட விழாவை ஒருவாரம் வரை போர்த் தேங்காய் அடித்து மகிழ்ந்து கொண்டாடினோம். பலகாரங்கள் செய்து கொண்டு கொடுத்து வாங்கி உண்டு மகிழ்ந்தோம். அவை எமது பாரம்பரிய பண்பாட்டு அடையாளம்.

திராவிடப் பகுத்தறிவு வாத அரசியல் தமிழரா-கிய எம்மை மூட நம்பிக்கையாளர் என எம்மக்களே எள்ளி நகையாட வைத்து பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்களை பகுத்தறிவு என்றும் ஆரிய திராவிட கோட்பாடுகளைப் புகுத்தி சித்திரை வருடம் தமிழரது அல்ல எனப் புது தத்துவம் பேசும் தலை முறையை காண்கிறோம். ஆனால் அதே தமிழகப் பகுத்தறிவு அரசி-யல் தமிழினத்தின் அழிவுக்கு முழுமையான பங்களிப்பு வழங்கி அழியாப் பழியைத் தேடிக் கொண்டிருக்கிறது.

திராவிடம் என்று முன்பு பேசிய கலைஞர் இப்போது திராவிடமும் தமிழும் ஒன்றே எனப் புதிய தத்துவார்த்த விளக்கம் தருகிறார். அப்படி அவர் கூறுவதற்கு முள்ளிவாய்க்கால் அழிவுக்குப் பின்னர் தமிழர் பற்றி அவர் எதுவும் பேசும் தார்மீகத்தை இழந்து விட்டார் என்ற உண்மை அல்லாது வேறு எதுவும் இருக்க முடியாது.

எனவேதான் தமிழும் திராவிடமும் ஒன்றுதான் என்ற புதிய விளக்கத்தைத் தருகிறார். அப்படியான ஒருவரின் அரச ஆணையில் எழுந்ததே தை முதல் நாள் தமிழர் புத்தாண்டு என்ற பிரகடனம். இன்று நம்மில் யாரும் புதுவருடம் தீபாவளி தைப் பொங்கல் என மகிழ்ச்சி யோடு கொண்டாடும் மன நிலையில் இல்லை. பாதிப் பேருக்கு இவற்றின் உண்மையான விளக்கமோ பண்பாட்டுப் பரி-மாணமோ தெரியாத காரணத்தால் இவற்றைக் கொண்டாடுவதும் விடுவதும் ஒன்றாகவே தெரிகிறது.

நமது அறியாமை காரணமாகப பகுத்தறிவு என்ற பகட்டு பேச்சால் எமது பண்பாட்டு விழுமியங்களை கைவிடுவோம் என்றால், எமது இனத்தின் அடையாளமும் சிறப்புகளும் இல்லாதவர்களாக எமது தாயக இலட்சியத்தில் பிடிமானம் இழந்து இனஅழிப்புக்கு இலகுவில் பலியாகி விடுவோம். எனவே இத்தகைய ஆபத்தைத் தரும் பகுத்தறிவு அரசியல் எமக்குத் தேவையா என நாம் முடிவு செய்தாக வேண்டும்.

எமது இனத்தின், தமிழ் மொழியின், தமிழ் பண்பாட்டின் அருமை பெருமைகளை நாம் அறியாத வரை எம் இனத்தின் விடுதலை நோக்கிய போராட்டத்தின் வெற்றிகளும் கிட்டாமலே போய்விடும். இதற்குச் சான்றாக எம் இன விடுதலை இயக்கங்களின் வரலாறே போதுமானது. தொடங்கிய இயக்கங்கள் எல்லாமே தமிழ் ஈழ விடுதலை என்ற இலட்சியத்துக்காகவே தொடங்கப்பட்டன. அவற்றின் தலைவர்கள் இன்னமும் களத்தில் அரசியல் நடத்துகிறார்கள். ஆனால் எவருமே இப்போது தமிழ் ஈழ விடுதலை பற்றிப் பேசுவதே இல்லை.

சிலர் தமிழ் ஈழத்துக்கு எதிராக சிங்கள மேலாதிக்கை வரவேற்று தமிழ் மக்களிடையே அடாவடி அரசியல் நடத்துகிறார்கள். அவர்களின் அமைப்புகளின் பெயரில் அநாதரவாக தமிழ் ஈழம் என்ற சொல் மட்டும் இன்னமும் ஒட்டித் தொங்குகிறது. இதுதான் தமிழ் ஈழம் பற்றிய இவர்களின் புரி-தலின் அழகு என்றால் அந்த நிலையை நீடிக்க நாம் அனுமதிக்கலாமா? இதற்கான எதிர் நீச்சலே அகரம் வரித்துக் கொண்டுள்ள இலட்சியம்.

இதனை உணர்ந்து ஏன் வேண்டும் தனித் தமிழ் ஈழம் என்ற புதிய கட்டுரைத் தொடரை அன்புச் செல்வன் வழங்கி வருகிறார். வாசகரிடையே அதற்குப் பெருகி வரும் செல்வாக்கு எமக்குப் புது நம்பிக்கை தருகிறது. ஒரு வலுவான புதிய தலைமுறையை புகலிடத்தில் களமிறக்க வேண்டும். அதற்கு அவரது கட்டுரை உதவும் என்றால் அவரோடு அகரமும் அதிகம் திருப்தி கொள்ளும்.

இப்போது ஒரு மிகக் குறைந்த சிலரே பல்வேறு அமைப்புகளின் பெயரால் இயங்கி வருகின்றனர். இந்த எண்ணிக்கை அனைத்து மட்டங்களிலும் பெருக வேண்டும். வேற்று இன மக்களின் இன விடுதலை மனித உரிமை, அரசியல், சுற்றுச் சூழல் அமைப்புகளில் இணைந்து ஒரு உலகம் அறியப்படும் சமுதாயமாக நாம் மாற வேண்டும். அப்போதுதான் அமெரிக்காவும் இந்தியாவும் ஐ.நா.வில் எம்மை வைத்து நடத்திய நாடகம் போன்ற நாடகங்களுக்கு நாம் தொடர்ந்தும் பலியா-காமல் இருக்கலாம். இவர்களுக்கு எதிரான போராட்டத்தின் அவசியத்தை முள்ளிவாய்க்காலுக்கு மூன்றாந்தர மத்தியஸ்தம் அல்ல முதல்தர தீர்வே தேவை என்ற தலைப்பில் உள்ள கட்டுரை சுட்டிக் காட்டுகிறது.

பிறக்கின்ற புதுவருடம் உங்கள் அனைவருக்கும் இன்பம் கொழிக்கும் ஆண்டாக மலர வாழ்த்தி விடைபெறுகிறோம்.

நன்றியோடு மீண்டும் இணைவோம்,
*அகரம் குழுமம்!...*



அகரம் இதழ் காணும் முதலாண்டு

# அகலுள் விழா!

## 26.05.2012

புலம்பெயர்ந்த மண்வாழும் தமிழ்ப்பற்றுமிக்க உறவுகளின்
அயராத உழைப்பின் வடிவமாய் உருவாகி, தமிழினவிடுதலையின்
அடையாளப்பதிப்பாய் வலம்வந்து, குறுகிய காலப்பகுதிக்குள்
தமிழர்கள் வாழும் தேசமெங்கும் பரந்து விரிந்து கிளைபரப்பி,
ஆல் போல் அகன்று நிற்கும் அகரம்இதழ் தனது வளர்ச்சிக்கு
உறுதுணையாய் நின்ற அனைவருடனும்
இணைந்து மகிழ்வுறும் இன்பத்திருவிழா!...

**நிகழ்வுகள்:**

சிறப்புரைகள் நடனங்கள்
ஆய்வுரைகள் பட்டிமன்றம்
தமிழிசை கவியரங்கம்

**சனிக்கிழமை மாலை 14:30 முதல் 21:00 வரை**

00 49 (0) 2381 98 77 897
00 49 (0) 151 11 55 78 90
www.akaram.eu

Freizeitstätte icklack
Höher Weg 12
40233 Düsseldorf

# முள்ளிவாய்க்காலுக்கு முதந்திர தீர்வுதான் தேவை மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் அல்ல!

த. எதிர்மன்னசிங்கம்



ஐ.நா. மனித உரிமைச் சபையில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானமும் அதற்கு இந்தியா செய்த திருத்தமும் குழந்தைக்குக் குச்சி ஐஸ்பழத்தைக் காட்டி முடிவில் குச்சியை மட்டும் வாயில் திணிப்பது போன்ற நாடகம் என்பது தெளிவாகி விட்டது. இனிமேலும் எமக்கு இழைக்கப் பட்ட கொடுமைகளுக்கும் எம் மண்ணுக்கும் மக்களுக்கும் ஏற்பட்ட அழிவுகளுக்கு ஒரு நீதி கிடைக்கும் கிடைக்கும் என நினைக்கும் பேதமை எம் இனத்துக்கு இருக்கக் கூடாது.

இந்த உலகம் ஒரு சமரசமான கண்ணியமான மனித உரிமைகளோடு கூடிய ஒரு அரசியல் தீர்வை எமக்குப் பெற்றுத் தரும் என நினைப்பதை விடக் கேவலமான அறிவீனம் இருக்க முடியாது. இப்படியான கொடுமையான கீழ்த்தரமான அனுபவங்களுக்குப் பிறகும் அரசியல் தீர்வு என்பதும் அமைதித் தீர்வு என்பதும் அப்படியான ஒன்றைப் பேச்சு வார்த்தை மூலம் பெற நினைப்பதும் மண்டைக்குள் எந்த மண்ணும் இல்லாதவரின் மேதாவித்தனம் என்றே கூற முடியும்.

முள்ளி வாய்க்கால் கொடுமைகளுக்கு முன்னரும் பின்னரும் நடந்த, நடந்து கொண்டிருக்கின்ற இரகசிய நாடகங்கள் கண்டறியப்பட வேண்டும். மூன்றாந்தர மத்தியஸ்தத்துடன் உலகத் தலைநகர்களில் நடத்திய பேச்சுகள் அதே மூன்றாந்தரம் நடத்தி முடித்த வன்னிப்போர் தந்த அழிவுகள் இத்தனை விரைவில் எங்கள் தேசியத் தலைவர்களின் நினைவில் அழிந்தது எப்படி? மூன்று வருடம் முடியாத நிலையில் மீண்டும் மூன்றாந் தரப்பு மத்தியஸ்தம் கேட்கும் மர்மம் என்ன? அரசியல் பாடமா அல்லது அண்மித்து வரும் வட மாகாண சபைத் தேர்தலா காரணம்?

உலகம் நம்மை இன அழிப்பு என்ற சொல்லைப் பயன்படுத்தக் கூடாது என உண்மைகளைக் குழி தோண்டிப் புதைக்க எம்மை வற்புறுத்துகிறது. அரசியல் உரிமை பற்றி அப்புறம் பேசலாம் இப்போ அரிசிக்கும், கஞ்சிக்கும் வழியைத் தேடு என்கின்றனர். அவசரமாக ரோடு போட்டு விமானத் தளங்கள் அமைத்துக் கடற்கரைத் துறைமுகங்களை விரிவு படுத்தி உடற் பசியும் திமிரும் போக்க வந்து போகும் பரதேசிகளுக்கு விபச்சார விடுதிகள், சூதாட்டக் களங்கள் அமைத்து நாட்டை முன்னேற்றுவோம் எனக் கூறும் மகிந்த அரசுக்கு ஆதரவு கொடுக்கச் சொல்கின்றனர்.

கோலைகாரச் சிங்கள அரசையே அது இழைத்த மனித உரிமை மீறல் மற்றும் போர்க் குற்றங்களை விசாரணை செய்ய அமைத்த கற்றுக் கொண்ட பாடங்களும் நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரைத்த கபடமான யோசனைகளை நிறைவேற்றக் கோரிக்கை விடுக்கிறது ஐ.நா.தீர்மானம். அதனை நிறைவேற்றக் கொலைகார அரசிடம் அனுமதி பெற்று உதவிகளை வழங்கச் சொல்கிறது இந்தியத் தீர்மானம். கோழியைக் கேட்டு அதனை அறுத்து ஆணம் சமைத்துப் பந்தி போடு எனச் சொல்லிவிட்டு ஆகா அன்னதானம் போட்டு விட்டோம் என்றால் அதுவே உண்மையாகி விடுமா?

இந்த நிலையில் நாம் கேட்க வேண்டியது மூன்றாந்தர

மத்தியஸ்தம் அல்ல எமக்கு ஒரு முதல் தர முடிவு ஒன்றுதான் தேவை. எமது தலைவர்கள் இனியாவது தமது மூன்றாந்தர சிந்தனைகளை மூட்டைகட்டி வைத்துவிட்டு முதல்தரச் சிந்தனையோடு வெளிவர வேண்டும். அவர்கள் மட்டும் அல்ல அனைத்துக்கும் பின்னால் நடந்த உண்மைகளும் வெளிவர வேண்டும்.

அப்போதுதான் யார் பயங்கரவாதி யார் அப்பாவி என அறிந்து குற்றவாளிகளை நீதிக் கூண்டில் நிறுத்தி நியாயம் தேடி நீதி பெற முடியும். நாம் கேட்கப் போவதும் கேட்க வேண்டியதும் ஜனநாயக அரசுகளிடம் உலக மக்களிடம். எம்மோடு நட்போடு நடந்து நம்பிக்கை மோசம் செய்த பயங்கரவாதிகளிடம் அல்ல. அதற்கு முதலில் உண்மையான பயங்கரவாதிகள் முகத்திரை கிழிக்கப் பட்டு மக்கள் முன் நிறுத்தப்பட வேண்டும்.

அப்படி முதன் முதலில் முகத்திரை கிழிக்கப்பட வேண்டியவர் இந்திய மத்திய அரசைத் தன் முந்தானைக்குள் முடிச்சுப் போட்டு முள்ளிவாய்க்கால் கொலைகளை நடத்திவிட்டு நல்ல பூனைபோல் உலகில் வலம் வரும் சோனியா காந்தியும் அவரது சகாக்களும் எமக்குப் பதில் கூறக் கடமைப் பட்டுள்ளனர்.

இது வெறும் காழ்ப்பு உணர்ச்சியாலோ ஊகத்தினாலோ எழுப்பப்படும் குற்றச் சாட்டு அல்ல. 11.11.2011ல் நோர்வேயில் நடந்த கற்றுக் கொண்ட பாடங்கள் அறிக்கை வெளியீட்டில் அமெரிக்க அதிகாரி ஆமித்ரேஜ், எரிக் சொல்கைம் மற்றும் இந்திய ஊடகவாளர் வெளியிட்ட தகவல்கள் அடிப்படையிலும் இந்திய பத்திரிகையாளர் சாம் ராயப்பா தமது கட்டுரையில் வெளியிட்ட தகவல்களின் அடிப்படையில் அமைந்தவை.

அமெரிக்காவின் புரிதலில் குளறு படிகள் நடந்து விட்டன என்றார் ஆமித்ரேஜ். எனவே அமெரிக்கா குற்றங்களுக்குத் துணைபோனதும் அதனால் நாம் பாதிக்கப் பட்டதும் நீதிக்கு அப்பாற்பட்ட குளறுபடிகள் எனக் கைவிட முடியுமா? அமெரிக்கா கொண்டு வந்த ஐ.நா.தீர்மானத்திலும் தனது தவறைத் திருத்த முற்படவில்லையே? இவற்றுக்கான பதிலைத் தருகின்ற வரையில் பல உயிர்களின் அழிவுக்குக் காரணமான அமெரிக்கா பயங்கரவாதிதான். தனிமனித உயிர்களுக்கும் உடலுக்கும் உடமைக்கும் இழைக்கப்பட்ட அழிவுகளுக்குப் பதில் கூற வேண்டியவர்கள் கட்டுப்பாட்டிலிருந்து அமெரிக்கா விலகமுடியாது.

தொடக்கத்தில் பேச்சின் அனுசரணையாளர் எனத் தம்மைக் கூறிவந்த எரிக் சொல்கைம் பேச்சுகளின் இரகசியத் தன்மையைப் பேணாமல் தமிழர் தரப்பின் பல்வேறு தோல்விகளுக்கும் இழப்புகளுக்கும் வழி செய்தார். போர் நிறுத்த உடன்படிக்கையைச் சரிவரச் செயற்படுத்த இரு தரப்புகளையும் நிர்பந்திக்கத் தவறினார். மீண்டும் போர் தொடங்குவதை நிறுத்த முற்படாது தமிழர் தரப்பை மட்டுமே விமர்சித்து நடுநிலையாளர் அல்லது அனுசரணையாளர் என்ற நிலையில் செயற்படத் தவறினார்.

இப்போது 13வது திருத்தச் சட்டம் பற்றியும் இலங்கையின் இறைமை ஒருமைப்பாடு பற்றிப் பேசும் இவரது செயற்பாடு வேண்டும் என்றே எமக்கு நம்பிக்கைத் துரோகம் இழைத்தார் என்ற குற்றத்துக்கு அவரது பேச்சே ஒப்புதல் வாக்கு மூலமாக உள்ளது. எனவே அவரும் கூண்டில் ஏற்றப்பட வேண்டியவரே.

இந்திய அரச விவகாரங்களில் அதிக தொடர்புகளும் செல்வாக்கும் படைத்தவரான ஊடகவாளர் சாம் ராசப்பா ஸ்ரேட்ஸ்மன் பத்திரிகையில் ஜூலை 2011ல் மிகத் துணிச்சலாக வெளியிட்ட செய்திகள் கொடுமையானவை. இது வரை எவராலும் அவை மறுக்கப் படாமல் இருப்பது அவற்றின் உண்மைத் தன்மையை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன. எனவே பாதிப்புக்கு உள்ளான எமது இனம் அந்த உண்மைகளைப் பயன்படுத்தி எமக்கான நீதிக்கும் நிவாரணத்துக்கும் போராட வேண்டும்.

அவருடைய கட்டுரையின் சில முக்கிய பகுதிகளின் தமிழாக்கம் தரப்படுகிறது. *"புது டில்லி 2005 அரச அதிபர் தேர்தலில் ரணில் வெற்றிக்கு ஆசைப்பட்டது. அதனால் ராஜபக்ஷவை ஒரு கழுகைப் பார்ப்பது போல் பார்த்து ஒதுக்கியது. இதனால் கவலையடைந்த ராஜபக்ஷ தமிழ் நாட்டில் உள்ள குடிசார் சமூகம் மூலம் தமது நாட்டின் இனப் பிரச்சினைக்கு சுமூகத் தீர்வைக் காண முடியும் என நம்பினார். இதற்கென ஒரு குழுவை நியமித்துத் தமக்காகத் தமிழ் நாட்டில் ஒரு பிரமுகர்கள் வட்டத்தைத் தேடிப் பிடிக்க ஏற்பாடு செய்தார்.*

*மிகுந்த பிரயாசையின் பலனாய் அவரது ஆட்கள் 4 பேர் அடங்கிய குழுவைத் தேடிப் பிடித்தது. அந்தக் குழுவில் முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரியும் ஜெயப்பிரகாஷ் நாராயண், அன்னை திரேசா ஆகியோருடன் நெருங்கிப் பழகியவரான எம்.ஜீ.தேவசகாயம் என்பவரைத் தலைவராகவும்,*

தமிழ் நாடு உட்துறைச் செயலரும் மத்திய அரசின் செயலருமாக இருந்து ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி எஸ்.பி. அம்புறோஸ், ஒரு பிரபல தேசிய நாளிதழின் மூத்த பத்திரிகையாளர் மற்றும் இலங்கை விடையங்களில் அனுபவம் நிறைந்த ஒரு முன்னாள் இராணுவ அதிகாரி ஆகியோர் உறுப்பினராக இருந்தனர்.

இக்குழுவின் முதற் கூட்டம் சென்னையில் 2007 மே 10ந் திகதி மகிந்தரின் ஆலோசகராக இருந்த சுனிமால் பர்னாண்டோவுடன் இடம் பெற்றது. அப்போது தமிழ் மக்களின் குறைகளுக்குத் தீர்வு தராத ஒரு தரப்பின் இராணுவ வெற்றி ஒரு நிலையான இனப் பிரச்சினைக்கான தீர்வை ஏற்படுத்தாது என ஒரு மனதாக முடிவு செய்யப்பட்டது.

கொழும்பில் இக்குழு மகிந்தருடனும் அதிபரின் ஆலோசகர் லலித் வீரதுங்க, துணைச் செயலர் ஸ்ரீ தனபால, மற்றும் ஆலோசகர் பர்னாண்டோ அடங்கிய குழுவுடன் 17 ஜுலை 2007ல் 2 மணி நேரம் உரையாடியது. உரையாடலின் போது தாம் சர்வதேசங்களின் கண்டனம் பற்றிக் கவலைப் படவில்லை எனவும் ஆனால் இந்தியாவின் கருத்துப் பற்றியே பெரிதும் அக்கறை கொண்டுள்ளதான கருத்தை ராஜபக்ஷவின் நிலை ஏற்படுத்தியது.

இரண்டு நாட்கள் நடந்த உரையாடலின் பின்னர் ஒரு பொது நிகழ்வில ராஜபக்ஷ, நாம் உணர்வு பூர்வமாகவும் பொறுப்புணர்வுடனும் இலங்கையின் வட கிழக்குத் தமிழர்களின் தாயகம் பற்றிய உண்மையான குறைகளைப் பார்க்க வேண்டும் என்றார். தொடர்ச்சியாக இலங்கை அரசமைப்பு மற்றும் தேசிய நல்லிணக்க அமைச்சர் டியூ குணசேகரா, அரச மொழி ஆணையகத் தலைவர் ராஜ கொலுர மற்றும் பலருடன் பேசிய பின்னர் 2008 மார்ச் 25ல் ஒரு முக்கிய மாநாடு அரச அதிபரோடு இடம்பெற்றது. அதன்படி ஒரு வேலைத் திட்டமும் வரையப்பட்டது.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்துக்கு விஷயம் எட்டியதும் பதில் தூதர் ஏ. மாணிக்கம் திரு தேவசகாயத்திடம் ஒரு நேர்காணலுக்கான அழைப்பு வந்தது. மாலை 5 மணிக்கு மாணிக்கத்தின் அலுவலகத்துக்கு அருகில் உள்ள அவர் தங்கி இருக்கும் ஹோட்டலில் நடக்க ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் மாணிக்கம் அந்த அழைப்பை என்றுமே செயற்படுத்தவில்லை.

அதே நேரத்தில் இந்தியத் தூதரகம் இலங்கை அதிபரின் குழுவைத் தொடர்பு கொண்டு அரச அங்கீகாரம் இல்லாத பேர்களுடன் எப்படி அமைதிப் பேச்சுகளை நடத்தலாம் எனக் கண்டித்தது. குடிசார் குழுவின் முன்னெடுப்பைத் தமிழ் நாட்டில் உள்ள காங்கிரஸ் கட்சி லோக் சபா உறுப்பினர் ஒருவர் பஞ்சாயத்து ராஜ் முறையாக மடை திருப்பி சோனியா காந்தி மூலம் ராஜபக்ஷவை இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண முயன்றார்.

இவற்றை அறிந்திராத தேவசகாயம் மன்மோகன் சிங்கின் தலைமைச் செயலரான தமது பழைய நண்பரான ரி.கே.நாயருடன் ஏப்ரல் 1.2008ல் கடிதம் மூலம் தொடர்பு கொண்டார். அக்கடிதம் அதுகால வரை நடந்த பேச்சுகளும் எடுக்கப்பட்ட முடிவுகளும், மறுபுறத்தில் இந்திய அரசு இலங்கை அரசுக்கு ஆயுதங்களும் பயிற்சியும் வழங்குவதைக் கவலையோடும் தெரிவித்தது. இந்தக் கடிதம் இன்றுவரை பதில் அழிக்கப்படாமலே உள்ளது.

இக்குழுவின் இத்தகைய வெற்றிகரமான தொடக்கத்தின் பின்னரே இந்திய அரசு இலங்கை அரசுக்கு இனப் பிரச்சனைக்கு அரசியல் தீர்வைத் தேடாது தமிழீழ விடுதலைப் புலிகளை முழுமையாக அழித்தொழிக்கும் பணியில் ஈடுபடத் தூண்டியது. சோனியா காந்தி தமிழீழ விடுதலைப் புலகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும் உளவுத் துறைத் தலைவர் பொட்டு அம்மானும் கொல்லப்படும் வரை அனைத்து இராணுவ வளங்களும் வழங்க உறுதி கொடுத்துள்ளார் என்கின்றன கொழும்பில் உள்ள தரப்புகள்.

பின்னர் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் எம். கே.நாராயணனும் வெளி உறவுச் செயலர் விவ்ஷங்கர் மேனனும் மற்றும் பிரதமர் அலுவலகத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் குழுவினரும் தேசிய நலனுக்கும் மேலாக சோனியா காந்தியின் விருப்பத்தை ஆர்வத்தோடு இலங்கை அரசின் மிருகத்தனமான இன அழிப்புக்கு உதவினர். சனல் 4 ஆவணப்படம் ஸ்ரீலங்கா அரசு உருவாக்கிய சகதியில் அது சிக்கிக் கிடக்கிறது.

முழு உலகமும் ஆவணப் படக் காட்சிகளால் அழுது புலம்பும் போது இந்திய அரசு மயான அமைதியில் செவிடாகி நிற்கிறது. ராஜபக்ஷவும் கூட்டாளிகளும் ஹேக்கில் உள்ள சர்வ தேச நீதிமன்றத்தில் குண்டுக் கட்டாகத் தூக்கிச் சென்று போர்க் குற்றம் மற்றும் இனஅழிப்புக் குற்றங்களுக்காக விசாரணைக்கு உள்ளாக்கப்படுவதற்கான அனைத்து சாத்தியங்களும் உள்ளன. இந்த

மோசமான காட்டுமிராண்டிக் குற்றங்களுக்கான பொறுப்புகளில் இருந்து புது டில்லி தப்பிக்க முடியாது. சாவு மணி ஒலிக்கிறது."

இந்திய அரசும் சோனியா காந்தியும் ராஜீவ் காந்தியின் படுகொலை விசாரணையை நேர்மையாக நீதியாக நாட்டின் பொது நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தாது இரகசிய சிறப்பு நீதி மன்றத்தில் சந்தேக நபர்களை விசாரிக்காமலே தண்டனை வழங்கித் தமி-ழீழ விடுதலை அமைப்பையும் பயங்கரவாத இயக்கமாகத் தன்னிச்சையாகப் பிரகடனப் படுத்தியது.

வழக்கின் முக்கிய ஆவணச் சாட்சியமான காணொளிப் பதிவை சிறப்பு நீதி மன்றமோ விசார-ணைக் குழுவோ பரிசீலிக்க அனுமதியாது அதனை எம்.கே.நாராயண் தம்மோடு மறைத்து வைத்து நீதிக்கு ஊறு செய்துள்ளார். இன்னும் பல முக்கிய சந்தேக நபர்கள் விசாரிக்கப் படாமலும் சாட்சியங்கள் மிரட்டப்பட்டும் உள்ள விடயங்கள் வெளியாகி உள்ள நிலையில் காரணமின்றி சோனியா காந்தி தனது செல்வாக்கைப் பயன்படுத்தி மிகப் பெரும் இனப் படு-கொலையை நடத்தினார் எனவே அவரும் அவரது உதவியாளரும் நீதி முன் நிறுத்தப்பட வேண்டியவர்களே.

முள்ளி வாய்க்காலுக்கு முடிவு மூன்றாந்தரப்பு நீதி நியாயம் அல்ல. முதல்தர நீதி நியா-யமே எமக்கு வேண்டும். நமக்கு ஒரு உண்மை தெரிந்தாக வேண்டும். மற்றவர்களின் தவறான ஊகங்களுக்கும் அனுமானங்களுக்கும் ஒரு இனப்படு கொலையே நியாயம் என்றாகி விடுமா? எமக்கு இந்த உண்மை தெரிந்தாக வேண்டும். அதைத் தெரியும் வரை எமது இனம் உறங்காது உறங்கவும் கூடாது.



Ihr persönlicher Finanzoptimierer

சுவிஸ் நாட்டில் உங்கள் காப்புறுதித் தேவைகளுக்காக
கணக்கற்ற முகவர்கள் பணியாற்றுகிறார்கள். ஆனால்,
காப்புறுதி விபரங்களை முறையாகப் பயின்று,
மனச்சாட்சிக்கு வீரோதமில்லாமல் பணியாற்றுவோர்
ஒரு சிலரே. அவர்களுள் ஒருவர் உங்கள் திலீபன்.



Herr Krishnasamy THILEEPAN
Dipl.Finanzberater IAF
















சுவிசில் சொந்த வீடு வாங்க விரும்பும்
உறவுகளே, அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்கக் கூடும்.
எனவே, சரியான வங்கியையும், வட்டி
வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும்
உங்களோடு கரங் கோர்க்கும்
ஒரேயொரு நிறுவனம் AWD.

அறிவு. நேர்மை. நாணயம்.

தனியொரு காப்புறுதி நிறுவனத்தின்
முகவரல்ல நாம். உங்கள் தேவைக்கு ஏற்ப
தகுந்த நிறுவனத்தில் நாம் காப்புறுதி செய்து
தருகிறோம்.

Allgemeiner Wirtschaftsdienst AG
Zweigniederlassung Bern-Köniz
Sägestrasse 79
3098 Köniz
**Telefon: 031 915 00 50**
**Telefax: 031 915 00 60**
**Handy: 079 889 60 65**
eMail: krishnasamy.thileepan@awd.ch
Internet: www.awd.ch



# மறுவாசிப்புக்கு ஆளாகும் சிவராம்?

சண் தவராஜா

தராக்கி டி.சிவராமின் ஏழாவது ஞாபகார்த்த தினம் அண்மித்துக் கொண்டிருக்கின்றது. தராக்கி தமிழினத்துக்கு ஆற்றிய சேவைகளை மதிப்போரும், அவரது ஊடகப் பணியை முன்னுதாரணமாகக் கொண்டு தமிழ்ச் சமூகத்திற்கும், ஒட்டுமொத்த மானுடத்திற்கும் தொடர்ச்சியாகப் பணியாற்றிவரும் ஊடக நண்பர்களும், ஊடக அமைப்புக்களும் அவரது ஏழாவது நினைவு தினத்தை அனுட்டிக்க பல்வேறு முனைப்புக்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். ஈழத்துத் தமிழ் ஊடகப் பரப்பில் நிஜமான ஜாம்பவானாகத் திகழ்ந்த சிவராமின் நினைவுகளை மறக்காமல் இருப்பதுடன், ஊடகவியலாளர்கள் சமூகத்தின் ஒரு பிரிக்க முடியாத அங்கமாக தாம் சார்ந்த சமூகத்திற்கு எத்தகைய பணிகளை ஆற்ற வேண்டுமென்பதற்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தாரோ, அந்த வழித் தடத்தில் ஓரளவேனும் பயணிப்பவன் என்ற அடிப்படையிலும் அவரது நினைவுகளைப் பகிர்ந்து கொள்வதில் நான் பெருமை கொள்கிறேன்.

துரதிஷ்டவசமாக, அண்மைக் காலமாக சிவராமின் வரலாற்றுப் பாத்திரம் தொடர்பில் மாறுபட்ட கருத்துக்கள் ஒருசிலரால் முன்வைக்கப்பட்டு வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது. சிவராமைப் பற்றிப் பொதுவில் நாம் அறிந்து வைத்துள்ள விடயங்களுக்கு மாறாக வெளியிடப்படும் கருத்துக்கள் சில வேளைகளில் மனதுக்கு வேதனை அளிப்பவையாக இருந்து வருகின்றன.

தமிழ் மக்களின் அரசியல் போராட்டத்தில் பங்கெடுத்துக் கொண்ட ஒரு விடுதலைப் போராளி, போராட்டக் குழுவாக இருந்து பின்னாளில் அரசியல் கட்சியாக மாறிய ஒரு அமைப்பின் செயலாளர், அக் கட்சியின் சார்பில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட ஒரு தலைமை வேட்பாளர், அனைத்துக்கும் மேலாக ஒரு ஊடகப் போராளி என்ற வகையில் சிவராம் விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டவர் அல்ல. ஒரு இலக்கியவாதியாக சிவராம் பொது வாழ்விற்குள் அறிமுகமாகியதே ஒரு விமர்சகராகவே என்ற அடிப்படையில் பார்க்கும் போது தன்னைப் பற்றிய விமர்சனங்களை ஏற்றுக் கொள்ளும் ஒருவராகவே சிவராம் விளங்கினார். அந்த வகையில், உயிரோடு இருந்திருந்தால் அவர் தன் மீதான விமர்சனங்களை நிச்சயம் வரவேற்றிருப்பார் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

ஆனால், விமர்சனம் என்ற பெயரில் ஒருசில ஊடக நண்பர்களால் அண்மைக் காலமாக சிவராமைப் பற்றித் தெரிவிக்கப்பட்டுவரும் கருத்துக்கள் சகிக்கவோ, ரசிக்கவோ முடியாதவையாக இருந்து வருகின்றன.

ஏனைய அனைவரையும் விட சிவராமை விமர்சிக்கும் தகுதியும், உரிமையும் ஊடக நண்பர்களுக்கே அதிகம் உள்ளது என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால், சிவராம் தொடர்பில் அண்மைக் காலங்களில் வெளிவந்த ஒருசில கருத்துக்கள் மோசமான விமர்சனங்களாகவும், சேறு பூசும் தன்மையினதாகவும் அமைந்திருந்ததாகப் பலராலும் உணரப் பட்டமையை மறைப்பதற்கில்லை.

ஒருவர் சம்பந்தப்பட்ட விடயத்தில் அவர் வாழ்வில் நடைபெற்ற சம்பவங்களைக் குறிப்பிடுவதில் தவறேதும் இருக்க முடியாது. அதேவேளை, சம்பந்தப்பட்ட நபர் தனது தரப்பு நியாயத்தைக் கூறுவதற்கு வாய்ப்புத் தரப்படாத ஒரு களத்தில் ஒருவரைப் பற்றி நாம் கருதுவதாக ஒருசில விடயங்களைக் கூறுகின்ற பொழுதில் அது ஊடக தர்மத்தை மீறுகின்ற ஒன்றாக மாறிவிடக் கூடிய அபாயமுள்ளது. அது மட்டுமன்றி அத்தகைய செயற்பாடு ஒரு தனிமனிதன் தொடர்பான படிமத்தைக் கொலை செய்வதற்கும் (character assassination) ஒப்பானதாகும்.

சிவராமின் ஆலோசனை வழிகாட்டலில் அவரைப் பின்பற்றிச் செயற்பட்ட, இன்றும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற எம் போன்றோரின் பணிகளை இத்தகைய கருத்துக்கள் மேலும் கடினமான-வையாக ஆக்குகின்றன.

சிவராம் கனவு கண்டதைப் போன்று தமிழ்ச் சமூகமானது தாயகத்திலும், புலம்பெயர் தேசங்களிலும் ஒரு அறிவார்ந்த சமூகமாக, உலக ஒழுங்கைப் புரிந்து கொண்டு, அதற்கேற்பத் தமது அரசியற் செயற்பாடுகளைக் கட்டமைத்துக் கொண்டு இலட்சியத்தை வென்றெடுக்க வேண்டும் என்கின்ற அடிப்படையிலான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கும் சிவராமைப் பற்றித் தெரிவிக்கப்படும் அண்மைக்காலக் கருத்துக்கள் தடையாக இருந்து வருகின்றன.

தனிமனித வாழ்வில் அரசியல் அங்கிங்கெனாதபடி எங்கும் வியாபித்து நிற்கும் ஒரு அம்சம். அந்த வகையில் போராட்டக் காலத்தில் ஊடக வாழ்வினுள் பிரவேசித்த சிவராம் (அவருக்கு ஏற்கனவே அரசியல் பின்புலம் இருந்தமை வேறு விடயம்) அரசியல் செய்ய வேண்டி ஏற்பட்டமை தவிர்க்க முடியாதது. அரசியல் சார்பற்றவனாக இருப்பது என்பதே ஒரு அரசியலாக விளங்குகின்ற சூழலில் சிவராம் ஊடக தர்மத்தை மீறிய ஒரு-வராக சிலரால் விமர்சிக்கப் படுகின்றார். நடுநிலை என்ற ஒன்றே இல்லாத ஒரு யதார்த்த நிலையில் ஊடகவியலாளர் மாத்திரம் அரசியலைத் தவிர்த்து நடத்தல் சாத்தியமா என்பது சிந்தனைக்குரியது. இத்தகையை பார்வையைக் கொண்டு சிவராமை விமர்சிப்போர் அது பற்றி ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

ஒரு வகையில் பார்க்கும் போது சிவராமைப் பற்றி வெளிவரும் கருத்துக்கள் சிவரா-மின் வரலாற்றுப் பாத்திரத்தை மறுவாசிப்புக்கு உட்படுத்த உதவியுள்ளன என்ற அடிப்படையில் வரவேற்கப்பட வேண்டியவையே. ஆனால், அத-னால் விளையும் நன்மையை விடவும் தீமையே தூக்கலாக உள்ளதை மறுப்பதற்கில்லை.

"பகுத்தறிவு" என்ற தந்தை பெரியாரின் ஆயுதத்தை ஈழத் தமிழர்களும் தமது கரங்களில் ஏந்த வேண்டும் என்பதில் விடாப்பிடியான கருத்தைக் கொண்டிருந்தவர் சிவராம். "எந்தவொரு விடயத்தையும் இலேசாக எடுத்துக் கொள்ளும் ஒரு உல்லாசப் பிரியர்" என்ற தோற்றப்பாட்டைக் கொண்டிருந்த போதிலும் அவரது தேடல் மிகவும் ஆழமானது என்பதை அவரது நண்பர்களும், அவரது கருத்துக்களை ஊன்றிக் கிரகிப்போரும் அறிவர்.

எந்தவொரு காரியமாயினும் சொந்தக்காலில் நின்று சாதிப்பதற்கே அவர் முன்னுரிமை வழங்குவார். அவரை, "விலைகொடுத்து" வாங்கிவிடவும் "வளைத்துப் போடவும்" பலரும் பல தடவைக-ளிலும் பல வழிகள் ஊடாகவும் முயன்ற வே-ளைகளில் எல்லாம் அவர்களுக்குத் தோல்வியே கிட்டியது.

இலங்கைத் தீவை விட்டு வெளியேறி ஏதோ ஒரு வெளிநாட்டில் தனது உயிரைக் காப்பாற்றிக் கொள்ளப் பல வாய்ப்புக்கள் இருந்த போதிலும் அவர் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ள முன்வரவில்லை. தந்திரோபாய ரீதி-யில் கூட அவ்வாறு செய்வதற்கு அவரது மனம் ஒப்பவில்லை. தனது உயிருக்குப் பேராபத்து உள்ளது எனத் தெரிந்திருந்தும் அதனை ஒரு பொருட்டாக மதிக்காமல் இலக்கை அடைவதே இலட்சியம் என இறுதிவரை செயற்பட்டவர் அவர்.

இன்று உலக அரங்கில் பல்வேறு பன்னாட்டு ஊடகங்களும் ஈழத் தமிழரைப் பற்றிப் பேசி வருகின்றன என்றால் அதற்குக் கால்கோள் இட்டோரில் சிவராமுக்கும் முக்கிய பங்கு உள்ளது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. பல்வேறு வெளிநாட்டு ஊடகர்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்தி, அவற்றைப் பேணி வந்த அவர், அவர்களுக்குத் தேவையான தகவல்கள் கிடைக்கச் செய்வதிலும் கூடிய அக்கறை செலுத்தினார்.

ஏழு வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் கூட அவர் விட்டுச் சென்ற இடத்தை நிரப்புவதற்குத் தமிழ் கூறும் நல்லுலகில் இதுவரை எவரும் உருவாகவில்லையே என்ற ஏக்கம் இன்றுவரை நீடிக்கின்றது. புலம்பெயர்ந்த நாடுகளில் ஈழத் தமிழர்கள் பல்வேறு சாதனைகளை நிகழ்த்தி வருகின்ற போதிலும் சிவராமின் இடம் இன்னமும் வெற்றிடமாகவே இருந்து வருகின்றமை சி-வராமின் பணிகளுக்குப் பெருமை தருவதாக உள்ள போதிலும், தமிழ் இனத்துக்கு அது தீங்கானதாகவே தென்படுகின்றது.

ஆண்டுகள் ஏழு கடந்தும் அவரின் பணியை இன்றும் ஈழத் தமிழினம் அறுவடை செய்து கொண்டிருக்கின்றது என்றால் அது மிகையில்லை.



# உலகை ஆட்டிப் படைக்கும் யூத இனத்தின் வெற்றியின் இரகசியம்!

**1948** வெறும் வனாந்தர பூமியை இன்று பொன் கொழிக்கும் பூஞ்சோலையாக்கி சுற்றி உள்ள பகைவரை எல்லாம் அடிபணியச் செய்து உலகை ஆட்டிப் படைப்பதன் இரகசிம் என்ன? 8 வருடங்களுக்கு மேலாக அவர்களோடு பேசி பழகி வாழ்ந்து தெரிந்து கொண்ட உண்மைகளை இப்படி தருகிறார் டாக்டர் ஸ்ரீவன் கார்ள் லியோன் என்ற அமெரிக்கர். யுதர்களின் வாழ்வியல் எமது தமிழ் சித்தர்கள் காட்டிய வழியை பெரிதும் ஒத்து இருப்பதை கவனிக்கலாம். எமது இனம் திரும்பவும் உயிர் பெற்று எமக்கு வேண்டும் என்றால் அவர்களின் இரகசியத்தை நாமும் பின்பற்றுவது அவசியம். இதோ அந்த இரகசிய உண்மைகள்.

உலகில் 70 வீதமான வர்த்தகம் யூதர்களின் ஆதிக்கத்தில் உள்ளது. அணு குண்டு முதலாக ஆயுதத் தயாரிப்பு விற்பனை, உணவு, அழகு சாதனப் பொருடகள் ,சினிமா என பெரும் பணம் புரளும் தொழில்கள் அரசுகளுடனான தொடர்பு அனைத்தும் அவர்கள் வசம். எப்படி?

முதலில் அவர்களின் கருவுறல் பேறு கால கவனிப்புகள் ஆச்சரியமானவை. கருவுற்ற தாய் எந்நேரமும் பாடுவதிலும் பியானோ வாசிப்பதிலும் கணக்குப் புதிர்களை விடுவிப்பதிலுமே செலவிடுகிறாள். ஏந்நேரமும் புத்தகங்களும் கையுமாகவே இருப்பாள். சில நேரங்களில் நானே அவளுடைய கணக்குப் புதிர்களுக்கு விடைகளைச் சொல்லிக் கொடுத்துள்ளேன். இவை எல்லாம் எதற்காக உன் கருவில் உள்ள பிள்ளைக்காகவா எனக் கேட்டேன். ஆம் பிற்காலத்தில் அந்தப் பிள்ளை ஒரு மேதாவியாக வருவான் அதற்கான பயிற்சியை கருவில் உள்ளபோதே கொடுக்கிறேன் என்றாள். பிள்ளை பிறக்கும் வரை அவள் அந்தப் பயிற்சியை கை விடுவதில்லை.

அடுத்ததாக உணவு. அவள் அதிகளவு பாதாம் கொட்டை பேரீச்சம் பழம் பாலுடன் சாப்பிடுவாள். மதிய போசனத்துக்கு ரொட்டியும் தலை அகற்றிய மீனும் கொட் லிவர் மீன் எண்ணை. மீன் உணவு பிறக்கும் குழந்தையின் மூளை வளர்ச்சிக்கு நல்லது ஆனால் மீனின்தலை குழந்தையின் மூளைக்கு கூடாது என நம்புகிறார்கள். மீனையும் இறைச்சியையும் ஒன்றாகச் சாப்பிட மாட்டார்கள். இரண்டும் ஒன்றாக உண்ணும் பொழுது உடம்புக்கு எதுவித நன்மையும் இல்லை என நம்புகிறார்கள்.

எப்பொழுதும் பழங்களை அவர்கள் முக்கிய உணவுக்கு முன்னதாகவே உண்கின்றனர். உணவுக்குப் பின்னர் பழங்களைச் சாப்பிட்டால் சோம்பலும் தூக்கமும் பள்ளிப் படிப்பை கெடுக்கும் என்கிறார்கள். குழந்தைக்கு உணவு எப்போதும் பெற்றோர் ஒருவரின் வழிகாட்டலில்தான் நடக்கும். முதலில் பழங்களும் பாதாம் கொட்டைகளும் ,பின்னர் மீன் எண்ணெய். நான் அறிந்த வரை யூதக் குழந்தைகள் ஹீபுறு, அரபு, ஆங்கிலம் என 3 மொழிகளை தெரிந்துள்ளனர். குழந்தைப் பருவத்திலிருந்த கட்டாயமாக வயலின் பியானோ இரண்டிலும் பயிற்சி பெற்றுவிடுவர்.

இந்த முறையில் அவர்களின் நினைவுத் திறன் பெருகி ஒரு மேதாவியாக செய்துவிடும். ஒரு யூத விஞ்ஞானியின் கூற்றுப்படி இசை ஏற்படுத்தும் அதிர்வலைகள் மூளையை தூண்டும் தன்மை கொண்டவை அதனால் அதிக எண்ணிக்கையில் அவர்களிடையே மேதாவிகள் உள்ளனர்.

1 முதல் 6ம் வகுப்பு வரை வர்த்தக கணி-தமும் விஞ்ஞான பாடங்களும் கற்பிக்கப் படுகின்றன. அவர்கள் வில் வித்தையிலும் விளையாட்டிலும் துப்பாக்கி சுடுவதிலும் ஈடுபடுத்தப் படுகின்றனர். இவை அவர்களின் மூளையின் குறிபார்த்தல் மற்றும் தீர்மானித்தல் ஆற்றலைப் வளர்க்கும் என நம்புகின்றனர்.

உயர்தர வகுப்புகளில் அவர்களை விஞ்ஞானக் கல்வி, கண்டு பிடிப்புகள் ஆய்வுகள் என எல்லாத் துறைகளிலும் ஊக்குவிக்கப் படுகின்றனர். ஆனால் பொறியியல் மருத்துவம் ஆயுதங்கள் போன்றவற்றில் அதிகளவு அக்கறை செலுத்த ஊக்கம் கொடுக்கப்படுகிறது. பல்கலைக்கழக இறுதி ஆண்டில் வணிகத் துறைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு 10 பேர் அடங்கிய குழுக்களாக திட்டமிட விடப்படுவர். 1 மில்லியன் அமெரிக்க டொலர் இலாபம் ஈட்டும் திட்டம் இடும் குழுவே சித்தி பெற்றதாக கொள்ளப்படுவர். இப்படியென்றால் உலகில் அரைவாசி வர்த்தகம் யூதர் வசம் இருப்பதில் என்ன அதிசயம் இருக்க முடியும்?

இஸ்ரவேலில் புகைத்தல் வெறுக்கப்படும் ஒன்றாக உள்ளது. விருந்தாளியாக இருந்தாலும் அவர்களின் வீடுகளில் புகைக்க முடியாது. ஆனால் மிகப் பெரிய சிகரட் கம்பனிகள் யூதருடையனவே என்றால் அதிசயம் அல்லவா?

மிகச் சிறந்த மருத்துவர் எல்லாரும் உள்ளனர் ஆனால் அவர்களைப் பொது மருத்துவ மனைகளில் காணமுடியாது. மருத்துவ கலா-நிதகளானதும் அவர்களைத் தனியாகத் தொழில் நடத்த யூத அமைப்புகள் வட்டி இல்லாக் கடன் கொடுக்கின்றன.

எனது ஆய்வுகளின்படி சாதியோ மதமோ முக்கியம் அல்ல. யூதரைப் போன்றே நம்மாலும் ஒரு சிறந்த சமுதாயத்தை உருவாக்க முடியும். மாற்றம் எங்கே தேவை என்றால் தினசரி உண்ணும் உணவுப் பழக்கத்திலும் பிள்ளை வளர்ப்பதிலுமே. 3தலைமுறையில் ஒரு முழுமையான மாற்றத்தைக் காணலாம். ஈழத் தமிழர் ஆகிய எமக்கு அவசரமும் அவசியமும் தேவையான மாற்றம் இது அல்லவா?






Orient
Textiles and Jewellery
2012 ம் ஆண்டுக்கான புத்தம்
புதிய வர்ணங்களில் குந்தம்
வேலை செய்த கோலம்.
காஞ்சி காஞ்சிபுரம்.
கோலம் மற்றும் பல வகையான
முகூர்த்தப் பட்டுச் சேலைகள்.
உத்தரவாத முத்திரை பதித்த
தரமான தங்கமான தங்க
ஆபரணங்கள் தரமான தேர்வில்,
சிங்கப்பூர் விலையில்
விற்பனையானகின்றது.
எமது
வாடிக்கையாளர்களுக்கு
இனிய சித்திரைப்
புத்தாண்டு
வாழ்த்துக்கள்
உரிமையாளர்: S.ஜெகதீஸ்
Königswall 16 (Am HBF)
44137 Dortmund, Germany
Tel: 0231 16 23 77
Fax: 0231 14 78 36
165, Upper Tooting Road
Tooting, London SW177TJ, UK
Tel: 0208 6823958
சிறுவர்களுக்கான
ஆடைவகைகளையும்
பெற்றுக்கொள்ளலாம்.



# பகுத்தறிவு பேசுவோரே பண்பாடு பாரம்பரியம் வேண்டாமா?

ஜெகன்

இந்த வருடம் ஏப்ரல் 13ம் திகதி இந்துக்களின் வருடம் பிறக்கிறது. ஆந்திரா கர்நாடகா மகாராஷ்டிரா மகாணங்களில் வாழ்வோரும் இந்துக்களே, ஆனாலும் அங்கெல்லாம் புது வருடம் மாநிலங்களுக்கு மாநிலம் வெவ்வேறு பெயர்களால் அழைக்கப் படுகிறது. வெவ்வேறு நாட்களிலும் பெயர்களுடனும் கொண்டாடப் படுகின்றன. உதாரணமாக ஆந்திரப் பிரதேசத்தில் உகாதி எனவும், கர்நாடகாவில் ஹோஷ வர்ஷ எனவும் அழைக்கப் படுகின்றன. ஆனால் மேற்கு வங்கம், பஞ்சாப், அசாம், தமிழ் நாடு, நேபாளம் மற்றும் கர்நாடகாவின் சில கரையோரப் பகுதிகளிலும் இதே நாளில் புது வருடம் கொண்டாடப் படுகிறது.

இலங்கையில் இந்துக்களும் பௌத்தர்களும் இதே நாளில்தான் புது வருடத்தைக் கொண்டாடுகிறார்கள். ஆக இது இந்துக்களின் புது வருடம் என்றால் இந்தியாவின் எல்லா மாநிலங்களிலும் உள்ள இந்துக்களால் இதே நாளில்தான் புது வருடத்தைக் கொண்டாட வேண்டும். ஆனால் அவ்வாறு கொண்டாடப் படுவதில்லை. எனவே இதனை இந்துக்களின் புதுவருடம் என்பதை விட இன மக்களின் புதுவருட தினமாகவே பார்க்கப் படவேண்டும்.

அதே நேரத்தில் இலங்கையில் பௌத்தர்களான சிங்களவரும் இதே நாளில் இதே முறையில் புதுவருடத்தைக் கொண்டாடுவதால் இதனை ஒரு இந்துக்களின் கொண்டாட்டம் எனக் கூற முற்படுவது உண்மைக்குப் புறம்பானதாகும். மேலும் இலங்கையின் அரச அறிவித்தல்கள் அனைத்தும் இதனை சிங்கள தமிழர் வருடம் என்றே குறிப்பிட்டு வருகின்றன. சிங்களம் தனது வருடக் கணக்கைப் புத்தரின் ஆண்டோடு இணைத்துள்ளது. எனவே நியாயமாகவே இது தமிழர் புது வருடமாகவே பார்க்கப்பட்டு வருகிறது.

இத்தகைய பின்னணியில் தி.மு.க. அரசு தைப் பொங்கல் தினத்தைத் தமிழர் புதுவருடமாகப் பிரகடனப் படுத்தித் திருவள்ளுவர் ஆண்டோடு இணைத்துக் கொண்டதால் இலங்கையில் தமிழரின் வரலாறு சிங்கள இனத்தின் வரலாற்றுக்குப் பிற்பட்ட ஒன்றாக மாற்றம் அடைகிறது. தமிழர் ஆண்டு வள்ளுவரின் பிறந்த ஆண்டு எனக் கூறும் பொழுது தமிழரின் வரலாறு சிங்கள இனத்துக்கு முற்பட்ட வரலாறு என்ற உண்மையைத் தமிழர் ஆகிய நாமே குழி தோண்டிப் புதைத்து விடுகிறோம்.

சிங்களத்தால் நீண்ட காலமாக இன அழிப்புக்கு உள்ளாகி இராணுவ ஆட்சிக்குள் அவதிப்படும் இனத்துக்கு இப்படியான செயற்பாடு பகுத்தறிவு எனலாமா? மேலும் திருவள்ளுவருடன் தமிழரின் வரலாற்றைத் தொடர்பு படுத்துவதோ அல்லது சோதிடத்தோடு எந்தவகையிலும் தொடர்பே இல்லாத திருவள்ளுவரைக் குறிப்பிடுவது எந்த வகையிலும் நியாயமோ ஏற்புடமையோ இருக்காது என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

வானியல் சோதிடம் இரண்டும் தமிழர்களின் கண்டுபிடிப்பும் அறிவியலும் என்பதற்கு நிறையவே சங்க இலக்கியம் மற்றும் சைவ வைணவ பக்தி இலக்கியங்களிலும் ஆதாரங்கள் உண்டு. அப்படியான தமிழ் இனத்துக்கே சொந்தமான எமது முன்னோரின் சாதனைகளை அவற்றின் சிறப்புகளை உரிமையோடு பாராட்டிப் பெருமைப்படாது எடுத்தோம் கவிழ்த்தோம் என்பதுபோல் ஒரு கலாச்சாரப் பண்பாட்டு வரலாற்றுத் தற்கொலையை ஊக்கப்படுத்தலாமா?

இந்த மோசமான செயற்பாட்டுக்கு அடிகோலியவர் ஒரு பெரும் தமிழ் மொழி ஆர்வலர் என்பது மறுக்க முடியாத கவலைதரும் உண்மை. அவர் அப்படியான முடிவை எடுக்கக் காரணமாக இருந்த கருத்தியலாகத் திராவிடம் ஆரியம் என்ற பிரிவினை ஆர்ப்பரிப்பு என்பதை நாம் மறந்து விடலாகாது. அதே நேரத்தில் ஹிட்லர் தொடக்கிய ஆரிய மேலாதிக்க போர் இலங்கையிலும் அநகாரிக தர்மபாலா என்ற சிங்களவரால் முன்னெடுக்கப் பட்டு வந்ததை அவர் கவனிக்கத் தவறி விட்டார். அல்லது அதற்குப் பரிகாரமே திராவிட அரசியல் என அவர் கணக்குப் போட்டிருக்கலாம்.

காரணம் எதுவாயினும் கண்ணை விற்றுச் சித்திரம் வாங்கும் செயலே தைப் பொங்கல் தினத்தைத் தமிழர் புது வருடமாக அவர் வலிந்து பிரகடனப் படுத்தியமை. அதுவும் சுமார் 500 தமிழ் மற்றும் சோதிட வல்லுனர்கள் இரண்டு நாட்களாக வாதிட்டு அவர் விரும்பிய முடிவை எடுக்க மறுத்த காரணத்தால் மறைமலையடிகள் தாமே பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுத்து தமது எதேச்சாதிகாரமான முடிவை அறிவித்தார்.

1920 முதல் 80 வருடமாக எவரும் அதனை ஏற்காத நிலையில் கிடப்பில் இருந்த மறைமலை அடிகளின் அறிக்கை தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி தயவால் உயிர் பெற்று விட்டது. மறைமலை அடிகள் செய்த அதே தவறை மீண்டும் கலைஞர் செய்து விட்டார். மறைமலை அடிகளிடம் ஆட்சி அதிகாரம் இல்லாததால் அவரது அறிக்கை உயிரற்ற சடலமாகக் கிடந்தது. கலைஞரிடம் ஆட்சி அதிகாரம் இருந்ததால் ஈழத் தமிழின அழிவுக்குச் சிங்களத்துக்கு உதவிய கலைஞர் தமிழின வரலாற்றுக் கொலையைச் செய்யும் விதத்தில் இதையும் செய்துள்ளார்.

எல்லாம் செய்து முடித்த கலைஞர் இப்போ தமிழரே கிடையாது திராவிடம்தான் இருக்கிறது என்பதுபோல் திராவிடமும் தமிழும் ஒன்றே என்கிறார். திராவிடக் கட்சிகளின் ஆட்சியில் கன்னட நாட்டுக்காரன் தமிழகத்துக்கு காவிரி நீரை வர விடாது தடுக்கிறான். ஆந்திரா நாட்டுக்காரன் முல்லைப் பெரியாற்று அணையை உடைக்க முனைகிறான். கேரளா நாட்டுக்காரன் தமிழனுக்குப் பல்வேறு அரசியல் தொல்லைகளுக்கு மூலமாக விளங்குகிறான்.

இவற்றை எல்லாம் பார்த்து மனம் சலித்த தமிழ் ஆர்வலர் திராவிடம் என்ற பேச்சே கூடாது அப்படிப் பேசிப் பேசித் தமிழகம் இழந்தது போதும் இனியும் இழக்க முடியாது என்ற நிலைக்கு வந்து விட்டனர். சீமான் போன்ற இளம் தலைமுறையினர் தமிழ் நாட்டை ஆள இனி ஒரு தமிழன் அல்லாத எவரையும் அனுமதிக்கப் போவதில்லை எனப் பகிரங்கமாகக் கூட்டங்களில் பேசி வருகின்றனர். பா.ம.க. நிறுவனர் இராமதாஸ் திராவிடம் பேசும் எந்த ஒரு கட்சியும் தமிழகத்துக்குத் தேவையில்லை எனப் பேசிவருகிறார்.

இத்தகைய நிலையில் ஈழத் தமிழர் திராவிடக் கருத்துக்களை ஏற்று வரலாற்றுத் தவறுகளை விடவேண்டுமா? தமிழர் ஒரு நாளை 6 சிறு பொழுதுகளாகவும் வருடத்தை 6 பருவங்களாகவும் வகுத்துள்ளனர். பூமி சூரியனைச் சுற்றி வருகிறது என்ற வானியல் உண்மையை இன்றைய விஞ்ஞான உலகம் கண்டு அறிய முன் பல்லாயிரம் வருடங்களுக்கு முன்பே எமது முன்னோர் அறிந்து சொல்லி விட்டனர்.

வாரத்தின் நாட்களை ஏனைய மொழி பேசும் மக்கள் மனம் போன போக்கில் பெயரிட்டு அழைத்து வரும் பொழுது தமிழன் மட்டும் தினமும் ஒரு கிரகத்தின் ஆதிக்க காலத்தில் நாள் தொடங்குகிறது எனக் கண்டு தெளிந்து அந்தக் கிரகத்தின் பெயரையே அந்த நாளுக்குப் பெயராக வைத்துப் பல்லாயிரம் வருடங்களாக அழைத்து வருகிறான். சங்கத் தமிழ் பாடல்களில் தமிழ் மாதங்களின் பெயரும் திருமூலரின் நூலில் வானில் சூரியன் இராசிகளைக் கடக்கும் சேதிகளும் காணப்படுகின்றன.

12 மாதங்களுக்கும் தமிழ்ப் பெயரிட்டு அழைக்கும் தமிழனுக்குச் சூரியக் குடும்பம் தனது சுற்றில் வரும் 60 வருட காலத்துக்குத் தமிழ் பெயர் வைக்கும் அறிவு இல்லாமலா போயிருக்கும்? சந்திரன் முழுமதியாக வரும் பௌர்ணமி தினத்தை அடிப்படையாகக் கொண்டு மாதத்தை அறிந்து வந்த ஆரியருக்கு சூரியனை அடிப்படையாக மாதம் கணித்தறியும் அறிவு எங்கே இருக்க முடியும்?

தமிழரின் அறிவியல் நூல்களை எல்லாம் தமது மொழிக்கு மாற்றித் தாமே அறிவாளிகள் எனக் காண்பித்த ஆரியர் 60 வருடத்தின் தமிழ் பெயரை அழித்து மாற்றவா தெரியாது போயிருக்கும்? ஈ அடிச்சான் கொப்பி அடிப்பவனுக்கு சரியான விளக்கம் எப்படிக் கிடைக்கும்? எனவே பொய்யான கற்பனைகளை கட்டவிழ்த்து விட்டு நாரதரும் விஷ்ணுவும் பெற்ற பிள்ளைகள் எனக் கதை சொல்கிறான்.

ஆணும் ஆணும் சேர்ந்து பிள்ளை பெறமுடியாது என்ற அடிப்படை உண்மை கூடத் தெரியாத ஆரியன் அப்படி ஒரு கதையைச் சொன்னால் அதையே நம்பி எதிர்வினை ஆற்றும் எமது பகுத்தறிவு எங்கே போயிற்று? வருடங்களின் பெயர் தமிழில் இல்லை என்பதற்காகத் தமிழரின் அரிய அறிவியல் களஞ்சியமான சோதிடத்தைத் தூக்கி எறிய நினைக்கும் பகுத்தறிவு வாதிகளில் எத்தனை பேருக்குத் தூய தமிழில் பெயர் இருக்கிறது? தமிழ்ப் பெயர் இல்லாத அனைவரும் தமிழர் அல்ல எனச் சொல்லி ஒதுக்கிவிட முடியுமா? எனவே சித்திரை மாத முதல் தேதியே தமிழரின் புதுவருடம் என உறுதிபட உலகறியச் சொல்லுவோம், கொண்டாடுவோம்.

சுவிஸ் நாட்டின் மாபெரும் ஜுவலரி சாம்ராஜ்யம்

# NS Jewellery & Textiles

## என்.எஸ். ஜுவலரி

உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்
நவீன உயர்தர டிசைன்களில்
நகைகளும், திருமண ஆபரணங்கள்,
ஓடர்நகைகள், திருத்த வேலைகள்
யாவும் செய்து கொடுக்கப்படும்.

தாலிக்குப் பொன்னுருக்குதல், காது,
மூக்குக்குத்துதல் போன்ற நல்ல
காரியங்கள் செய்து கொடுக்கப்படும்.




தாலி மற்றும்
பொன்னுருக்குதல்
இவையாவும் இங்கு
செய்து தரப்படும்!

**Neugasse 58**
**8005 Zürich**
**Switzerland**

Tel: 044 440 60 50
Fax: 044 440 60 52
info@nsjewellery.com

ஒவ்வொரு வருடமும் தை மாதம் எமது ஸ்தாபனத்தால் தங்கநகை சேமிப்புத்திட்டம் ஆரம்பிக்கப்படுகின்றது. மாதம் 100CHF என 12 மாதம் 1200CHF. இணைய விரும்புவோர் உங்களது பெயர்களை முன்கூட்டியே பதிவுசெய்யலாம்.




# அவர்களின் ஆசைகள் நிறைவேற்றப்படுமா?

மனித இனத்தின் ஆசைகள் எங்கு ஒடுக்கப்படுகிறதோ அங்குதான் புரட்சியும், போராட்டமும் ஆரம்பிக்கின்றன. தமிழின விடுதலைக்கான போராட்டம் ஆரம்பித்தது தொட்டு, அது உக்கிரம் பெற்றதுவரையான ஒவ்வொரு காலப்பகுதிகளிலும், குறிப்பாக தமிழீழத்தின் இளம் சமுதாயமே அடைக்குமுறையின் கொடூரங்களை அதிகளவில் அனுபவித்திருக்கிறது . போர்ச்சூழல் காரணமாகத் தொடர்ச்சியான இடப்பெயர்வுகள், கல்விக்கான அடிப்படை வசதிகள் கூட இன்றிய பாடசாலைகள், இடப்பற்றாக்குறை காரணமாக இடம் பெயர்ந்தோர் நலன்புரி முகாம்களாக மாற்றப்படுகின்ற பாடசாலைகள், சத்தூட்டம் குறைந்த உணவு, சிறிலங்கா அரசபயங்கரவாதத்தின் தாக்குதல்கள் காரணமாகத் தொடர்ச்சியற்ற கற்றல் நிலை, ஆகிய புறத்தாக்கங்களால் தமிழீழத்தின் இளம்சந்ததியினர் தமது இளம்பராயத்தின் இனிமைகளைப் பெரிதும் தொலைத்துவிட்டிருந்தனர் என்றால் அது மிகையில்லை. ஆனாலும் சோர்ந்துவிடாத நம்மவர்கள், மேற்குறிப்பிட்ட நிலைக்கு முகம்கொடுத்த நிலையிலும், சிறந்த கல்விப்பெறுபேறுகளைப் பெற்றுவருகிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆனாலும், இளம்சமுதாயத்தின் எதிர்கால வளர்ச்சிப்பாதைக்கு இது போதாது என்பதே யதார்த்தம்.

ஈழத்துச் சிறார்களின் அவலம் கண்ட தமிழீழத் தேசியத்தலைவரினால் உருவாக்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வந்த, காந்தரூபன் அறிவுச்சோலை, செந்தளிர் இல்லம், செஞ்சோலை போன்ற பல சிறுவர் பராமரிப்பு இல்லங்கள் சிறப்பாக இயங்கி வந்தபோதிலும், சுனாமிப் பேரழிவுக்குப் பின்னதாகவும், இறுதிப்போர் நடைபெற்ற காலப்பகுதிகளிலும், இவற்றின் செயற்பாடுகள் சிறிது சிறிதாக அழிந்துபோயின. இன்றைய நாட்களில் முற்றுமுழுதான அவல வாழ்வில் சிக்கித்தவிக்கும் நமது இனம், அடிப்படை வசதிகளான உடை, சிறந்த உணவு, தங்குமிடம் ஆகியன அற்றநிலையில், இளம்பராயத்தினரின் வாழ்வு பற்றிச்சிந்திக்க வழியற்றநிலையில், அவர்கள் கைவிடப்பட்டவர்களாக நிர்க்கதி நிலையில் வாழ்ந்துவருகிறார்கள்.

ஒரு இனத்தின் இளம்சமுதாயமே அந்த இனத்தின் எதிர்கால வாழ்வைக் கட்டிநிறுத்துபவர்கள் என்ற உண்மை யாவருமறிந்தஒன்று. சிறிலங்கா அரசபயங்கரவாதமும் இதனைத் தமிழர்கள் விடயத்தில் நன்கு அறிந்துவைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை. குறிப்பாக, ஈழச்சிறார்களாக இருப்பினும், புலம்பெயர்ந்து வாழும் ஈழச்சிறார்களாக இருப்பினும், கல்வியின் அவசியத்தை நன்கு உணர்ந்தவர்களாக இருப்பது நாம் கண்கூடாகக்காணக்கூடியதொன்று. எனவேதான் ஈழத்தின் இளம்கல்விச் சமுதாயத்தைச் சிதைப்பதில் சிறிலங்கா அரசு குறியாக இருக்கிறது. அவர்களின் ஆசைகள் நிராசைகளாக்கப்பட்டு, அவர்களின் மனோபலத்தைச் சிதறடித்து, அவர்களை



முன்னேற விடாது தடுப்பதையே இதுவரை நாட்களும் சிங்கள அரசு செய்துவந்துள்ளது. அதனால்தான் வெளிநாட்டு உதவிகள் எதுவும், நேரடியாக எமது சிறார்களின் கைகளில் சென்று சேர்வதை, சிறிலங்கா அரசு விரும்புவதில்லை. வாழத்துடிக்கும் எமது ஈழச்சிறார்களுக்கான கல்வியின் நிலை, வாழ்வியல் முறைமை, சிங்கள அரசபயங்கரவாதத்தின் அடக்குமுறை, திரிபுபடுத்தப்பட்ட வரலாற்றுக் கல்வி, என்பன அவர்களை எதிர்காலச் சிற்பிகளாக உருவெடுக்க இனி வழிவிடுமா என்பது சந்தேகமே..!

போர் உக்கிரம் பெற்ற காலப்பகுதிகளில், எவ்வளோ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும், புலம்பெயர் உறவுகளின் உதவி எதுவும் ஈழத்துச் சிறார்களின் கைகளிற்கு எட்டியிருக்கவில்லை, அல்லது எட்டுவதற்கு சிறிலங்கா அரசாங்கம் அனுமதிக்கவில்லை.. ஜெனீவாவின் முடிவுகளிற்குப்பின், சற்றுக்கலங்கியிருக்கும் இலங்கை அரசு தடாலடியாகப் போராளி-களை விடுவிக்கிறது, மீள்குடியேற்றம் செய்ய முயற்சிக்கிறது, யாழ் மண்ணில் புதிது புதிதாகக் கட்டடங்கள் முளைக்கின்றன. ஏதோ தமிழர்களில் தான் அக்கறை கொண்டு விட்டதாகக் காட்டிக்கொள்ள சிறிலங்கா அரசு முனைகிறது. ஆனால் சிறிது காலப்பகுதிக்குள், சிறிலங்கா அரசாங்கம், மீண்டும் முருங்கை மரத்தில் ஏறும் என்றுதான் எண்ணத்தோன்றுகிறது. ஏனெனில் கடந்தகாலக் கசப்புக்களை மறப்பதற்கு எவராலும் முடியாது என்பதுவே உண்மை.

இவ்வருட ஆரம்பித்திலேயே, நெடுந்தீவின் அப்பாவிச் சிறுமி மிகவும் கொடூரமான முறையில், வன்புணர்விற்கு உட்படுத்தப்பட்டுக் கொலைசெய்யப்பட்டாள். கொலைக்குற்றவாளி இதுவரை தண்டிக்கப்பட்டதாய்த் தெரியவில்லை. அண்மையில் சண்டே லீடர் பத்திரிகை வெளியிட்ட விவரங்களின் படி, வருடந்தோறும் பதியப்படும் 15,000 வன்புணர்வுக் குற்றங்களில் 4, குற்றங்கள் சிறுவர் வன்புணர்வுச் சம்பவங்கள் எனவும், இதில் 52 சதவிகிதம் வட மற்றும் கிழக்கு மாகாணங்களில் நடைபெறுவதாகவும் தெரிவித்திருந்தது. கடந்த வருடத்தில் மட்டும், சிறுவர் கடத்தல் சம்பவங்களில் பத்து வயதிற்குக் கீழ்ப்பட்ட 206 சிறுவர்களும், 10 - 16 வயதுப்பிரிவில் 878 சிறுவர்களும் கடத்தப்பட்டிருப்பதாகவும் அவ்வறிக்கை மேலும் தெரிவித்திருந்தது.

வடக்கு கிழக்கு சிறுவர்களின் நல்வாழ்விற்காக கரிதாஸ் நிறுவனம், அமெரிக்க அரசிடமும் ஏனைய நாடுகளிடமும் 2,441,426.99 அமெரிக்க டொலர் (யூரோ € 1,811,728.95), தொகையைக் கோரியிருந்தது. ஆனால் சிங்கள அடக்குமுறை அரசு,தமிழ்ச் சிறார்களுக்கான வசதிகளைத் தாம் செய்து கொடுக்க இருப்பதாகவும், அதற்கான பணத்தைத் தம்மிடமே வழங்க வேண்டுமென்றும் கோரியிருந்த வேளையில், ஜெனீவாப் பிரேரணையின் பின், அவ்வுதவி பற்றிச் சிந்திக்க அமெரிக்கா தயக்கம் காட்டி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஏனெனில், நிச்சயமாக

அவ்வுதவி தமிழ்ச்சிறார்களைச் சென்று சேராது என்ற உண்மையை அமெரிக்காவும் கரிதாஸ் நிறுவனமும் உணர்ந்திருக்கக்கூடும்.

புலம்பெயர் தேசங்களில் வாழும் தமிழ்ச் சிறார்களின் நிலைக்கும், ஈழத்துச் சிறார்களின் வாழ்வு நிலைக்கும் மிகப்பெரிய இடைவெளி இருப்பதை யாவரும் அறிவோம். ஆனால் உணவு ,உடை , கல்வி, விளையாட்டு, மருத்துவம், பொழுதுபோக்கு, ஆகிய சாதாரண வாழ்வியல் அம்சங்களில், 5 விகிதம் கூட ஈழத்துத் தமிழ்ச் சிறார்கள் ஒருபோதும் அனுபவித்ததில்லை. புலம்பெயர்த்தேசத்துத் தமிழ்ச் சிறுவர் கணணி-யோடு விளையாட, ஈழத்துச் சிறுவர்கள் சாதாரண எழுதுகோல் வாங்குவதற்கே அல்லாடுகிறார்கள். நாற்புறமும் பொம்மைகளால் அலங்கரிக்கப்பட்ட படுக்கையில் புலம்பெயர்ச் சிறுவன் உறங்குகையில், சாதாரண பாய் வாங்குவதற்கே வசதியின்றி அல்லாடுகிறது நமது இளம்சமுதாயம். காடு களனியும், கண்ணிவெடியும், புழுதி வீதிகளுமே நமது ஈழத்துச் சிறுமலர்களின் வாழ்வு. மின்சாரத் தொடருந்துகள் சீறிப்பறக்கும் வாழ்வியலிற்குள் இருக்கும் நாம், சாதாரண புகைவண்டியைக் கூட இதுவரை கண்டிராத அந்தச்சிறுவர்கள் பற்றி எப்போது சிந்திக்கப்போகிறோம்...?!

வெறும் அரசியல் சகதிக்குள் மட்டுமே மாட்டிக்கொண்டு அல்லாடும் தமிழி-னம், எதிர்காலச்சிற்பிகளை வாழ்விக்கப் போதுமான முயற்சிகளை இதுவரை சரியாக மேற்கொள்ளவில்லை என்பது மாபெ-ரும் பரிதாபம். நடைபெற்று முடிந்த முள்ளிவாய்க்கால் அவலத்தின்பின், 680 சிறார்கள் தவறவிடப்பட்டுள்ளதாக, அவர்களது பெற்றோர்களின் முறைப்பாடுகள் மூலம் தெரியவந்திருக்கிறது. அவர்கள் கொல்லப்பட்டார்களா, அல்லது எங்கேனும் அநாதரவாக வாழ்ந்துவருகிறார்களா என்பது கூடத்தெரியாது வாடியிருக்கும் பெற்றோர்களின் நிலை பற்றி எவரும் சிந்திப்பதில்லை. இவற்றைவிடப் போரின் கொடூரங்களைக் கண்கூடாகக்கண்ட நிலையில், மனம்பேதலித்த சிறுவர்களின் நிலையை எண்ணிப்பாருங்கள். சாதாரண வன்முறைத்திரைப்படங்களையே பார்த்து நடுங்கும் இளம்பராயத்தினர் மத்தியில் தலைவேறு, உடல்வேறாகச் சிதைந்த மனித உடலங்களோடு வாழ்ந்திருந்த தமிழ்ச்சிறார்கள், எவ்வளவு தூரம் மனரீதியாகச் சிதைக்கப்படிருப்பார்கள் என்பது சொல்லித்தெரியவேண்டிய விடயமல்ல. முள்ளிவாய்க்கால் அவலத்தில் சிக்கித்தவித்த சிறுவர்கள் ஏறக்குறைய 70 000 பேர் என UNICEF புள்ளிவிவரம் தெரிவிக்கிறது. இத்தொகை சதவிகிதத்தில் குறைந்த எம்மினத்திற்கு ஒரு பெரும் தொகையே. இந்தச்சிறுவர்கள் போரின்கொடுமையை நன்கு அறிந்தவர்கள். இவர்களைத் தேற்ற, எம்மைவிட வேறு எவரும் பொருத்தமானவர்களாக இருக்க முடியாது. இவர்களை ஆசுவாசப்படுத்தி, துணிவூட்டி, நவநாகரீக உலகின் வாழ்வியலிற்குள் பொருந்திவர, சிங்களம் கைகொடுக்கும் என நாம் நினைப்போமானால் நாம் தான் எதிர்காலத்தின் தலைசிறந்த முட்டாள்கள் என, பிரகடனம் செய்து கொள்ளலாம்.

இலங்கையில் உருவாகும் எந்த ஆட்சியாலும், இனிஒருபோதும் தமிழ்ச்சிறார்களை வாழ்விக்க முடியாது. சிறிதுசிறிதாக எமது அடையாளங்களை அழித்துவரும் சிங்கள அரசு உருவாகப்போகும் தமிழ்ச்சமுதாயத்திற்கு, ஒரு திரிபுபடுத்தப்பட்ட வாழ்வியலையே பரிசளிக்கபோகிறது. அடி முடி தெரியாதவர்களாக, தமிழர்களுக்குரிய பண்புகளைத் தொலைத்தவர்களாக, குட்டக் குட்டக் குனிபவர்களாக எமது இளம் சமுதாயம் தமிழீழ மண்ணில் உருவாக்கப்படப்போகிறது என்பதை, சிங்களம் உருவாக்கி நடைமுறைப்-படுத்திவரும் கல்வி முறைமையில் ஐயந்திரிபுறக் கண்டுகொள்ளலாம்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆட்சிக்காலப்-பகுதியில் கூட, தமிழீழ மாணவர்களின் பாடத்தித்திட்டங்கள், சிங்கள ஆட்சியாளர்களால் உருவாக்கப்பட்டவையாகவே அமைந்திருந்தன. அப்பாடத்திட்டங்கள், வரலாற்றைத் திரிவுபடுத்தி உருவாக்கப்பட்டிருந்தன, சாதாரணமான கணி-தம், விஞ்ஞானம், வாழ்க்கைத்திறன், விவசாயம், வர்த்தகம் ஆகிய பாடத்திட்டங்களில் அவ்வளவாக வரலாற்றைத் திரிபுபடுத்தி எழுதிடமுடியாது, ஆனால் சமூகக்கல்வி,வரலாறு, சமயம், புவியி-யல் ஆகிய பாடத்திட்டங்களில் முற்று முழுதாக சிங்கள வரலாறே முதன்மைப்படுத்தப்பட்டது. உதாரணமாக இலங்கையை ஆண்ட குவே-னி என்ற தமிழ்ப்பெண்ணை, வந்தேறு குடியான விஜயன் என்ற ஆரியன் திருமணம் புரிந்து, பின் அவளைக் கல்லால் அடித்துக்கொன்றுவிட்டு, அரசனானது வரலாறு. ஆனால், குவேனி என்ற தமிழ்ப்பெண்ணின் வரலாறு அண்மைய பாடத்திட்டங்களில் மறைக்கப்பட்டுவருகிறது. அதேபோல யாழ்ப்பாணத்தை ஆண்ட தமிழ்மன்னர்களின் வீரவரலாறும், இப்போதைய இலங்கையின் வரலாற்றுப் பாடத்திட்டங்களில் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

எல்லாளன் தொடங்கி, கிழக்கு மாகாணத்தின் மாபெரும் நீர்த்தேக்கமான கந்தாளாய்க் குளத்தைக் கட்டிய குளக்கோட்டன் வரையிலான தமிழ்மன்னர்களின் வரலாறு முற்றுமுழுதாக மறைக்கப்பட்டுவிட்டது. இனிவரும் தமிழ்ச்சமுதாயம் வரலாற்றுக்கல்வியில் உள்ள சிங்கள மன்னர்களின் திரிபுபடுத்தப்பட்ட கதைகளே உண்மையான வரலாறு என நம்பக்கூடும். இதனால் தாம் இரண்டாந்தரக்குடிமக்கள் என்ற ஒரு தவறான எண்ணத்தை அவர்கள் மனதில் தாமாகவே விதைத்துக்கொள்ளக்கூடிய அவல நிலை இனிவரும்நாட்களில் உருவாகலாம். ஒரு புறம் சிங்களக்குடியேற்றங்களால் தமிழர் நிலங்கள் பறிக்கப்பட்டு, கலாச்சாரம் அழிக்கப்பட்டு, சிங்களவரலாறு விதைக்கப்பட்டு வருகின்ற அதேவேளை, இனிவரும் தமிழ்ச் சமுதாயம், விடுதலை என்ற சொல்லையே நினைக்காத வகையில் சிங்கள அரசாங்கம் மிகவும் வேகமாகச் செயற்பட்டுவருகிறது. இச்சமுதாயத்திற்கு உண்மை நிலையை விளம்புதற்கு, ஈழமண்ணில் உள்ள எவராலும் இனிவரும் நாட்களில் முடியாமல் போகலாம். ஏனெனில், கோமாளிகளின் கையில் அகப்பட்டிருக்கும், தமிழர்களின் அடையாளமான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மகிந்தவிற்கு "ஆமாம் கச்சாமி" போடும் கூட்டமாக மாறிய நிலையில், தமிழ்ச் சிறார்கள் பற்றி சிந்திக்கவோ, தமிழ்ச்சிறார்கள் மீதான வன்முறையைக் கண்டிக்கவோ, அவர்களுக்கு நேரமிருக்க வாய்ப்பேதுமில்லை.

எவ்வளவுதான் புலம்பெயர்ந்த தமிழ்ச்சிறார்கள் எல்லாவிடயங்களிலும் கொடிகட்டிப்பறக்கும் நிலைவரினும், எமது மண்ணில் வாழும் உறவுகள் அவலப்பட்டு வாழ்வார்களாயின், புலம்பெயர்ந்த சிறப்பினால் பெருமைகிடைக்கப்போவதில்லை. எந்த மனிதன் எப்போது எமது தாய்மண்ணையும், அங்கு வாழும் உறவுகளையும்,அடுத்து வரப்போகும் சமுதாயத்தைச் சிறப்பாக உருவாக்கவும் உறுதி கொள்கிறானோ, அவனே தமிழன் என்ற பெருமையைப் பெறுவான். எம்மால் முடிந்தது என்று அல்லாது, எவ்வளவு முடியுமோ அவ்வளவிற்கு எமது இளம்சமுதாயத்தின் அமைதி நிறைந்த வாழ்விற்கு நாம் உழைக்கத் தயாராக வேண்டும். அதுவும் புலம்பெயர்ந்து வாழும் இளம்சமுதாயத்தின் மூலம் அவ்வுதவிகள் நிகழ்த்தப்படவேண்டும். வெறுமனே வாய்ப்பேச்சும், அறிக்கைகளும் எந்தவிதத்திலும் எமது உறவுகளிற்கு உதவப்போவதில்லை. "சொல்லுக்கு முன் செயல்" எப்போது நிகழ்த்தப்படுகிறதோ, அன்றுதான் தமிழினம் தலைநிமிரும்.






# நாடு நகரத் திட்டமிடல் திருத்தச் சட்ட மூலம் தமிழரின் தாயகக் கோட்பாட்டைச் சிதைக்கும் சதி!

- இலட்சுமணன் -

இனப் பிரச்சினைக்குத் தீர்வாக அரசியலமைப்பின் பதின்மூன்றாம் திருத்தத்திற்கு அப்பால் அதிகாரப் பரவலாக்கம் வழங்கப்படவுள்ளதாக இந்தியாவிற்கும், உலகிற்கும் கூறிவரும் அரசாங்கம், மாகாண சபைகளில் "நாடு நகரத் திட்டமிடல் திருத்தச் சட்டம்" என்ற ஒரு மசோதாவைக் கொண்டு வந்து அவசர அவசரமாகச் சட்டமாக்குவதன் மூலம் பதின்மூன்றாம் திருத்தத்திலேயே ஓட்டை போட முயற்சி செய்கிறது.

ஏற்கனவே செயற்பாட்டில் உள்ள மாகாண சபைகள், உள்ளூராட்சிச் சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அங்கீகாரங்களை மீளப்பெறும் ஒரு நடவடிக்கையே இது எனினும், இது குறித்து வடக்கு கிழக்கில் காணி, அதிகாரங்கள் பற்றிச் சிந்திப்பவர்கள் பெரிதாகக் கரிசனை கொண்டுள்ளதாகத் தெரியவில்லை.

இத்திருத்தச் சட்டத்தின் மூலம் மாகாண சபைகளுக்குக் கீழ் வரும் காணிகளை தேசிய பௌதீகத் திட்டத்தின் பாதுகாப்புக்காகவும், கட்டிடக்கலை அல்லது வரலாற்று முறையான இடப்பரப்புக்கள், பேணல் இடப்பரப்புக்கள் என்ற வகையிலும், புனித இடம் என்ற வகையிலும் பௌத்த சாசன அமைச்சு சுவீகரிக்க முடியும்.

பௌத்த சாசன அமைச்சர் ஏதேனும் மாநகர இடப்பரப்பினுள் நகர அபிவிருத்தி இடப்பரப்பினுள் அல்லது தெருவழி வீதி அபிவிருத்தி இடப்பரப்பினுள் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம், கட்டளைச்சட்டத்தின் குறிக்கோள்களுக்குப் பயன்படுத்துவதற்காக வரையறுக்கப்பட்ட ஏதேனும் காணிகளை சுவீகரிக்க முடியும் என்றும் சட்டத் திருத்தம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள வர்த்தமாணி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தேச சட்டமூலம், மாகாண சபைகளுக்குச் சட்டப்படி பரவலாக்கப்பட்டுள்ள காணி அதிகாரங்களைக் களவாடும் முயற்சி என்பதுடன், அப்பட்டமாக அதிகாரப் பரவலாக்கலுக்கு எதிரானது என்பதே உண்மை. அந்த வகையில் தமிழர்கள் பெரும்பான்மையாக, அல்லது பிரதி நிதித்துவப்படுத்தும் பல சபைகளில் இந்தப் பிரேரணை நிராகரிக்கப்பட்டோ அல்லது பிற்போடப்பட்டோ வந்த வண்ணமிருக்கிறது.

பாராளுமன்றத்தில் அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில், நகர மற்றும் கிராமியத் திட்டமிடல் கட்டளைத் திருத்தச் சட்டமூலத்தை வாபஸ் பெறுவதாக அரசாங்கம் நாடாளுமன்றத்தில் மார்ச் 7ஆம் திகதி அறிவித்தது. இச்சட்டமூலம் மாகாண சபைகளின் பரிசீலனைக்கு அனுப்பப்பட வேண்டுமென உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளமையே இதன் காரணமாகும்.

பொருளாதார, சமூக, வரலாற்று, சுற்றாடல் மற்றும் சமயக் காரணங்களுக்காக மாநகர மற்றும் நகரப் பிரதேசங்களுக்குட்பட்ட காணிகளை அரசாங்கம் சுவீகரிப்பதற்கு வழிவகுக்கும் வகையிலே-யே இச்சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்திருந்தது. இருப்பினும் இச்சட்டமூலம் மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட விடயங்கள் பலவற்றைக் கொண்டிருப்பதனால் அது ஜனாதிபதியினால் அனைத்து மாகாண சபைகளின் பார்வைக்கும் அனுப்பப்பட்டு, மாகாண சபைகளின் அனுமதி-யுடனேயே அது நடைமுறைப்படுத்தப்பட முடியும் எனவும் உயர் நீதிமன்றம் தெரிவித்திருந்தது.

அரசியலமைப்பின் 154 (ஜி) (3) ஷரத்தில் குறிப்பிட்டவாறு இச்சட்டமூலம் ஜனாதிபதி-யினால் மாகாண சபைகளின் பார்வைக்கு அனுப்பப்பட்டமை தொடர்பில் பிரதி சொலிசிற்றர் ஜெனரலினால் அறிவிக்கப்படவில்லை என்பதை பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க, மற்றும் கே.ஸ்ரீபவன், சந்திரா ஏக்கநாயக்க ஆகிய 3 நீதிபதிகள் கொண்ட குழாம் கடந்த டிசம்பர் மாத ஆரம்பத்தில் நாடாளுமன்றத்திற்கு அறிவித்திருந்தது.

அதனாலேயே உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தையடுத்து இச்சட்டமூலத்தை வாபஸ் பெறுவதாக அரசாங்கத் தரப்புப் பிரதம கொ-றடாவான அமைச்சர் தினேஷ் குணவர்தன அறிவித்திருந்தார். அதனையடுத்து மாகாண சபைகளில் அது குறித்து சபைத் தீர்மானங்கள் நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டிருந்தன.

அந்த வகையில் ஜனவரி 31ஆம் திகதி கிழக்கு மாகாண சபைக்கு இத்திருத்தச் சட்டம் சமர்ப்பிக்கப் பட்டது. அப்போது, சட்டமூலத்தை சபையில் அங்கீகாரத்துக்கென அன்றைய தினம் எடுக்க முடியாது என்ற வகையில் கட்சித்தலைவர்களால் முதல் கட்ட எதிர்ப்புக் காண்பிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பான திருத்தச் சட்டமூலம் குறித்து ஆராய்வதற்காக மாகாண சபைகள் விரைவாகக் கூடி அங்கீகாரத்தைப் பெற்று எதிர்வரும் ஏப்ரல் 8 ஆம் திகதிக்கு முன்பாக அந்தத் தீர்மானங்களை மாகாண ஆளுநர்களிடம் சமர்ப்பிக்க வேண்டுமென அரசாங்கம் சகல முதலமைச்சர்களையும் கேட்டிருந்தது.

இத்திருத்தச் சட்டமூலம் குறித்து அனைத்து மா-காகண சபைகளிலும் வாதப்பிரதிவாதங்கள் நடைபெற்று மத்திய மாகாண சபை உட்பட சில மாகாண சபைகள் அதனை நிராகரித்துள்ளன. இந்த நிலையில் கிழக்கு மாகாணசபையும் அதனை நிராகரித்திருக்கிறது.

"கிழக்கைப் பொறுத்தவரையில், மீண்டும் மீண்டும் மத்திய அரசு அதிகாரத்தைச் சட்டரீதியாகப் பெற்று சிறுபான்மையினராகிய தமிழ் பேசும் எம்மைப் பலவீனப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் சதித் திட்டத்திற்கும், எமக்குத் தேவையென இருக்கும் ஒருசிலவற்றையுமே மத்திய அரசிற்குத் தாரைவார்த்துக் கொடுக்கத் துணைபோவதா? கிழக்கு மாகாணசபையில் இதற்கு எதிராக வாக்களித்துச் சிறுபான்மை மக்களுக்கான அதிகாரத்தைப் பெறுவதற்குக் கிழக்கு மா-காணசபை பின்நிற்காது என்னும் செய்தியை உலகறியச்செய்ய வாக்களிக்க வேண்டும்" எனக் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா. துரைரெத்தினம் சகல கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களிடமும் கோரிக்கை விடுத்திருந்தார்.

எனினும் முதலமைச்சர் இதில் நழுவல்ப் போக்கையே கொண்டிருந்தார் என்பது அவரது ஆரம்பக் கட்ட நடவடிக்கைகளில் இருந்து புலனாகின்றது.

அரசாங்கத்திற்கு எப்போதும் ஆதரவாளராகக் காட்டிக் கொண்டு, வடக்கு கிழக்குப் பிரிப்புப் பற்றியே சதா பேசிக் கொண்டும் இருக்கும் கிழக்கு மாகாண முதலமைச்சர் தனது கட்சியின் தேசிய மாநாட்டை சிவானந்தா விளையாட்டு மைதானத்தில் நடத்தி அங்கு ஜனாதிபதி-யின் சகோதரரும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான பசில் ராஜபக்சவைப் பிரதம அதிதியாக அழைத்து அவர்முன் கொள்கைப் பிரகடனமாக வடக்கு கிழக்குப் பிரிப்பை மீண்டும் ஒரு முறை கூறிவிட்டு மறுநாள் இந்தத் திருத்தச் சட்டத்தினையும் நிராகரித்திருக்கிறார்.

இந்த விடயத்தில் கிழக்கு மாகாண முதலமைச்சரும் அவரது கட்சியும் தாமே இந்த நிராகரிப்புக்குக் காரணம் என மார் தட்டிக்கொள்ளும் முயற்சியும் நடைபெறுகிறது. ஆனால், தமிழ் முஸ்லிம் பெரும்பான்மை எதிர்க்கட்சி உறுப்பினர்களின் உறுதியான முயற்சியினாலேயே இந்த நிராகரிப்பு நடைபெற்றிருக்கிறது என்ற உண்மையும் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

முடிந்தவரைக்கும் தன்னை அரசிடம் நல்லவராகக் காட்டிக்கொண்டு, அரசின் ஆதரவுக் கட்சியாகக் காட்டிக்கொண்டு, அரசின் நடவடிக்கைகளுக்கு எதிராகத் தான் செயற்படாதவர் போன்ற

தோற்றப்பாட்டுடன் செயற்பட்டு வரும் முதலமைச்சரின் செயற்பாடுகளை மக்கள் உணராதவர்கள் அல்லர்.

"நாடு நகரத் திருத்தச் சட்டம் என்ற ஒன்றைக் கொண்டுவந்தார்கள். அந்தச் சட்டத்தைக் கிழக்கு மாகாணசபை அனைத்தும் முடிந்த பிறகு இப்போதுதான் நிராகரித்துள்ளது. அந்தச் சட்டம் வந்த போது சட்டத்தின் படி இங்கு உள்ள காணி அனைத்தும் பௌத்த மதத்திற்கு உட்படுத்தப் படும் நிலை உருவாக்கப்பட்டது கிழக்குமாகாண சபை முதலில் தடுமாறியது. அதில் சில திருத்தங்களைக் கொடுத்துவிட்டு அமைச்சர் பசில் ராஜபக்ஸவின் ஆலோசனையில் நாடகம் ஆட கிழக்கு மாகாண முதலமைச்சர் முற்பட்டார். வேறிரெண்டு மாகாண சபைகள் அதை நிராகரித்ததனால் இப்போது தானும் அதனை நிராகரிப்பதாக முதலமைச்சர் கூறியுள்ளார்" எனத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் அண்மையில் கூட்டமொன்றில் பேசும்போது கூறியிருந்தார்.

இவ்வாறான செயற்பாடுகள் குறித்து கிழக்கின் அரசியல் தலைவர்கள் எத்தனைபேர் முழுமையான விளிப்புடன் இருக்கிறார்கள் என்பது கேள்விக்குரியதாகும். அதே நேரம் நாட்டின் அபிவிருத்தி சார்ந்து அரசாங்கம் எடுக்கின்ற முயற்சிகளுக்கு இவ்வாறான எதிர்ப்புகள், தடைகள் பரவலாக ஏற்படுவதானது அரசின் செயற்பாடுகளைத் திறம்படக் கொண்டு செல்வதற்குத் தடைகளையே ஏற்படுத்தும். ஜெனிவாவில் அரசாங்கத்திற்கு எதிரான பிரேரணை நிறைவேற்றப்பட்ட காலகட்டத்தில் உள்நாட்டிலும் தமக்கு ஆதரவான ஒரு மாகாண சபையில் அரசாங்கத்தால் பிரேரிக்கப்பட்ட ஒரு சட்டமூலம் நிராகரிக்கப் பட்டுள்ளமை ஒரு பாரிய பின்னடைவாகவே கருதப்பட வேண்டும்.

மாகாண சபை குறித்த தீவிரமான சிந்தனையுடன் கிழக்கின் அரசியல் செயற்பாடுகளில் ஸ்திரமான கொள்கையுடன் கிழக்கின் அரசியல்வாதிகள் செயற்படவேண்டிய தேவையொன்று உருவாகியுள்ளதையே இந்தத் திருத்தச் சட்டமூலத்திற்குக் கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டிருந்த எதிர்ப்பு காட்டி நின்றது.

எது எவ்வாறானாலும், வடக்கு கிழக்கில் பௌத்த மதத்தின் பெயரால் நடைபெற்று வருகின்ற பல்வேறு தமிழர் பாரம்பரிய இருப்பு பறிப்பு சார் முயற்சிகளில் ஒன்றான நாடு நகரத்திட்டமிடல் திருத்தச் சட்டமூலம் மற்றைய மாகாண சபைகளில் அதற்கு எவ்வாறு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது என்பதற்கு அப்பால் கிழக்கின் பெரும்பான்மையான அரசியல்வாதிகளின் முயற்சிகளால் நிராகரிக்கப்பட்டிருப்பது பாராட்டத்தக்கது.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு 13 பிளஸ் என்ற வார்த்தைப் பிரயோகங்களை வீசிவிட்டு தமிழ் மக்களின் உரிமைகளை, பாரம்பரியங்களை அழிக்கும், அவற்றினைத் தமக்குள் கையகப்படுத்தும் முயற்சிகளை சுற்றுலாத்துறை, புகையிரதத் திணைக்களம், மகாவலி அபிவிருத்திச் சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை, வனவளப் பிரிவு என்பவற்றின் ஊடாக மேற்கொள்ளும் அரசாங்கத்திற்கு விழுந்திருக்கும் முதல் அடியாக இந்த நாடுநகரத் திருத்தச் சட்டமூலத்தின் மீதான கிழக்கு மாகாணசபையின் நிராகரிப்பினைக் கொள்ள முடியும்.

ஆனால், இதனால் சிங்களப் பேரினவாதம் தனது முயற்சிகளைக் கைவிட்டுவிடும் என எதிர்பார்க்க முடியாது. அது வேறு மார்க்கங்கள் ஊடாகத் தனது இலக்கை அடையத் தொடர்ந்து முயற்சிக்கவே செய்யும். தொடர்ந்தும் விழிப்போடு இருப்பதன் ஊடாகவே தமிழ் மக்களால் இது போன்ற விடயங்களைத் தடுக்க முடியும்.


மீண்டும் Dortmund நகரில்

புதிய அமுதசுரபி

இலங்கை இந்திய தமிழர் உணவகம்

U-Towerக்கு முன்பாக வட இந்திய, இலங்கை உணவு வகைகளைச் சுவைத்து மகிழ ஓர் உணவகம்!

Rheinische Str,20
44137 Dortmund
Tel: 0231 91098947 - Fax:0231 530 176 82




Mittag Buffet: Mo-bis Sa-11.00.15.00 Uhr
Nur 5,50€

Tel:0231/ 91 09 89 47

உங்கள் தேவை அனைத்தும் ஒரே குடையின் கீழ்

# AKM

## Asian Supermarket

**மாபெரும் மலிவு விற்பனை**

அனைத்து மீன் மரக்கறி வகைகளும்
தாயகத்திலிருந்து மிகத் தரமாக
இறக்குமதி செய்யப்பட்டவை!

50% விலைக்கழிவு



**தரத்துடன் கூடிய இலாபம் கிடைக்கும் ஒரே இடம்**

# AKM

மலிவு! மலிவு! மட்டும் தான். மலிவு! மலிவு!



**AKM** முத்திரை பதித்த பொருட்கள்
அனைத்தும் **50%** விலைக்கழிவு

Basel str 80
6003 Luzern
Tel. 041 2405400

Talgut-Zentrum 7
3063 Ittigen (Bern)
Tel.031 9222318

Alpenstrasse 1
3072 Ostermundigen
(Bern NILAVANI)
Tel. 031 9312525

# KB intercom

**CyberCafe,**
**Carte téléphonique,**
**Alimentation générale,**
**Kiosque, Cigarette,**
**Western Union,**
**Ticket Booking**

WESTERN UNION
MONEY TRANSFER

மிகக் குறைந்த
விலையில் அனைத்து
நாடுகளுக்குமான
தொலைபேசி
அட்டைகள்!

iEasyTravels
www.ieasytravels.com



**தொடர்புகளுக்கு:**

உரிமையாளர்: U. KARTHIGESU

Av des Alpes 40, 1820 Montreux, Switzerland

Tel.: 021 961 27 16 Fax: 021 961 27 19 Natel: 079 681 56 44

சங்கத் தமிழன்
www.sangatamilan.com



# புலம்பெயர் தமிழர்களை அச்சுறுத்த முனையும் சிங்கள தேசம்?

பூமிபுத்திரன்

சுவிஸ் நாட்டில் வாழும் ஈழத் தமிழ் மக்களை அச்சுறுத்தும் வகையிலான துண்டுப் பிரசுரம் ஒன்று அண்மையில் தபாலில் அனுப்பப் பட்டிருந்தது. சிறி லங்கா அரசாங்கத்துக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபடும் நபர்களைப் பயமுறுத்தும் நோக்கிலான இந்தப் பிரசுரம் நாட்டைக் காக்கும் தமிழ்க் கூட்டமைப்பு, நாம் இலங்கையர் பாதுகாப்புப் படை என்ற பெயரில் அமைந்திருந்தது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களை அச்சுறுத்தும் நோக்கில் கடந்த வருடத்தில் விநியோகிக்கப்பட்ட பிரசுரத்தின் நகலே பேர்ண் மாநிலத்தில் வசிக்கும் தமிழர்களுக்கு அனுப்பப் பட்டிருந்தது. ஜெனீவாவுக்கு அண்மையில் உள்ள வோ மாநிலத்தின் பேர்சின்ஸ் என்ற கிராமத் தபாலகத்தின் முத்திரையை இந்தக் கடிதங்கள் தாங்கியிருந்தன. கடந்த ஜனவரி மாதத்திலும் பேர்ண் நகரை அண்டிய இற்றிகன் கிராமத்தில் ஒரு சில தமிழர்களின் வீட்டுத் தபால் பெட்டிகளில் இதே பிரசுரம் போடப்பட்டிருந்தது. தற்போதும் அந்தப் பிரதேசத்தில் வசிப்பவர்களின் வீடுகளுக்கே தபால்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், பேர்ண் மாநிலத்தில் வசிக்கும் ஒருசில தமிழர்களின் கரங்களும் இதன் பின்னணியில் இருக்கலாம் என நினைக்கத் தோன்றுகின்றது.

சுவிஸ் நாட்டு ஊடகங்களின் அதீத கவன ஈர்ப்பைப் பெற்றுள்ள இந்த மிரட்டல் பிரசுரம் ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் 19 ஆவது கூட்டத் தொடரில் சிறி லங்கா அரசாங்கத்திற்கு எதிரான தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட அன்றைய தினத்திலேயே தபாலில் இடப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத் தக்கது. இது புலம்பெயர் தமிழர்களை அச்சுறுத்தி சிறி லங்கா அரசாங்கத்திற்கு எதிரான செயற்பாடுகளில் இருந்து விலகி இருக்கச் செய்யும் பாங்கிலானதே அன்றி வேறில்லை. தமிழ் மக்களின் ஆதரவு தனக்கே இருக்கின்றது என்பதை நிரூபிப்பதற்காகப் பல முயற்சிகளிலும் ஈடுபட்டு வரும் சிங்கள அரசாங்கம், புலம்பெயர் தமிழர்களை அச்சுறுத்துவதன் ஊடாக வெளிநாடுகளில் அரசாங்கத்துக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபடுவோரின் எண்ணிக்கையைக் குறைக்க நினைக்கின்றது.

ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் 19 ஆவது கூட்டத் தொடர் பெப்ரவரி 27 ஆம் திகதி ஆரம்பமான அன்றைய தினமும் ஒரு வாரத்தின் பின்னர் மார்ச் 5 ஆம் திகதியும் இரண்டு கவன ஈர்ப்பு நிகழ்வுகள் ஈழத் தமிழ் மக்களால் ஜெனீவா நகரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இரண்டாவது நிகழ்வில் சுவிஸ் வாழ் தமிழர்கள் மட்டுமன்றி ஏனைய ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழர்களும் கணிசமான எண்ணிக்கையில் கலந்து கொண்டிருந்தனர். இது சிறி லங்கா அரசாங்கத்துக்கு எதிரான தீர்மானத்தை நிறைவேற்ற நினைக்கும் சக்திகளுக்கு உற்சாகத்தைத் தருவதாக அமையும் என்பதால் சிறி லங்கா அரசாங்கம் ஆத்திரம் கொண்டிருந்தது.
மனித உரிமை ஆணைக்குழுத் தீர்மானம் சிங்கள தேசத்துக்குப் பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்தும் அதேவேளை, ஈழத் தமிழர்களுக்குப் பலத்தையும், உற்சாகத்தையும் அளிப்பதாக அமைந்துவிடும் என அஞ்சிய சிறி லங்கா அரசாங்கம் தீர்மானம் நிறைவேற்றப்படுவதைத் தடுத்துவிடப் படாதபாடு பட்டது. அது முடியாமற் போகிறதே என்ற ஆதங்கத்தின் வெளிப்பாடாகத் தனது ஆத்திரத்தை சுவிஸ் வாழ் ஈழத் தமிழர்கள் மீது காட்டியது. அதன் வெளிப்பாடே இந்தக் கடித மிரட்டல்.

சிறி லங்கா அரசாங்கத்திற்கு எதிரான ஐ.நா. மனித உரிமைக் குழுத் தீர்மானம் பன்னாட்டு ஊடகங்களின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்த நிலையில், சுவிஸ் நாட்டில் தமிழர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட அச்சுறுத்தல் கடிதங்கள் உள்நாட்டு ஊடகங்களின் கவனத்துக்கு இலக்காகியுள்ளன. இது தொடர்பான செய்திகள் பிரதான ஊடகங்களில் தலைப்புச் செய்தியாக மாறிய அதேவே-ளை, காவல்துறையினருக்குச் செய்யப்பட்ட முறைப்பாடுகளின் அடிப்படையில் விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சுவிஸ் நாட்டில் வாழும் ஈழத் தமிழர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுவது இதுவே முதன்முறையல்ல. பல தடவைகளில் இதுபோன்ற அச்சுறுத்தல்கள் முன்னரும் விடுக்கப்பட்டுள்ளன. பிரசுரங்கள் மூலமும், தொலைபேசி வாயிலாகவும், நேரடியாகவும் கூட கடந்த காலங்களில் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தாலும், யுத்தம் முடிவுற்றதாக அறிவிக்கப்பட்ட நிலையில் ஒரே தடவையில் பெருந்தொகையானோருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை இதுவே முதன்முறையாகும். அதிலும், சிறிலங்கா அரசுக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னணியில் இந்தக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டமை மிகுந்த கவன ஈர்ப்பைப் பெற்றுள்ளது.

2009 மே மாதத்துக்குப் பிந்திய காலகட்டத்தில் ‘சிறிலங்காவில் புலிகளை ஒடுக்கி விட்டோம். அடுத்து புலம்பெயர் செயற்பாட்டாளர்களே எமது இலக்கு’ என சிறிலங்கா பாதுகாப்புத் துறைச் செ-யலர் கோத்தாபய ராஜபக்ஷ அறிவித்திருந்தமை நினைவிருக்கலாம்.

இந்தத் திட்டத்தை இலகுவாக்குவதற்கு ஏதுவாகவே பாதுகாப்புத் துறையில் பணியாற்றிய படையதி-காரிகள் பலர் சிறிலங்காத் தூதரக அதிகாரிகளாகப் புலம் பெயர் தமிழர்கள் அதிகம் வாழும் நாடுக-ளில் பணிக்கமர்த்தப் பட்டார்கள். அவர்களும் புலம்பெயர் நாட்டில் வசிக்கும் தமது கைக்கூலிகளின் உதவியுடன் பல சீர்குலைவு நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள்.

போரின் இறுதி நாட்களில் நடைபெற்ற சம்பவங்கள் காரணமாகப் பாரிய மனச் சஞ்சலத்துக்கு ஆளாகியிருந்த புலம்பெயர் ஈழத் தமிழர்கள் பலர் அரசியற் செயற்பாடுகளில் இருந்து ஒதுங்கியிருக்கத் தீர்மானித்தமை, சிறிலங்காவின் செயற்பாடுகளுக்கு ஆரம்பத்தில் வெற்றி கிட்டியது போன்ற தோற்றப்பாட்டைக் காட்டிய போதிலும், தொடர்ந்து வந்த நாட்கள் அரசாங்கத்தின் திட்டத்திற்கு உவப்பானதாக இருக்கவில்லை.

□கலங்கித் தெளிதல்’ என்ற தத்துவத்தின் அடிப்படையில் மக்களிடையே ஏற்பட்ட தெளிவானது, புலம்பெயர் தமிழ் மக்களின் அரசியல் செயற்பாடுகளுக்குப் புதிய உத்வேகத்தை வழங்கியது. இதன் விளைவாகவே, சிறிலங்கா அரசாங்கம் உலக மன்றங்களில் மண் கவ்வும் நிலை உருவானது.

இன்று புலம்பெயர் ஈழத் தமிழ் மக்கள் மத்தியில் உருவாகியுள்ள உற்சாகம் அவர்கள் எந்தவொரு அச்சுறுத்தலுக்கும் அடி பணியாத நிலையை உருவாக்கியுள்ளது. ஆனால், விடுமுறைக்காக சிறிலங்காவுக்குப் பயணமாக உத்தேசித்துள்ள தமிழ் மக்களுக்கு எத்தகைய வரவேற்புக் காத்திருக்கின்றதோ தெரியவில்லை.

இங்கிலாந்துக்குப் பயணம் மேற்கொண்ட நிலையில் ஈழத் தமிழர்களின் எழுச்சி காரணமாக ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் உரையாற்ற முடியாமற் போய் மகிந்த ராஜபக்ஷ கடந்த வருடத்தில் திரும்பிச் சென்ற பிற்பாடு இங்கிலாந்திலிருந்து கொழும்பு சென்ற தமிழர்கள் பலர் கசப்பான அனுபவங்களைச் சந்திக்க வேண்டி ஏற்பட்டமை தெரிந்ததே. அது போன்றதொரு நிலை இம்முறை சுவிஸ் நாட்டிலிருந்து செல்வோருக்கும் ஏற்படுமா என்பதே இன்றைய கேள்வியாக உள்ளது.

விடுதலைத் தாகம் கொண்ட மக்களை அற்ப அச்சுறுத்தல்களால் பணிய வைக்க முடியாது என்பதே யதார்த்தம். மிரட்டல் கடிதங்களை அனுப்புதல் போன்ற மலிவான தந்திரோபாயங்கள் தமிழ் மக்களின் மனோவுறுதியை மேலும் பலப்படுத்தவே செய்யும் என்பதைச் சம்பந்தப் பட்டவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். அது மட்டுமன்றி ஐ.நா. மனித உரிமைச் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் விளைவாக உலகில் இன்று தனிமைப்பட்ட நிலையில் உள்ள சிங்கள அரசாங்கம் இதுபோன்ற செயற்பாடுகளால் மேலும் தனிமைப்படுத்தப்படும் அபாயம் உள்ளது என்பதையும் புரிந்து கொள்ளுதல் நல்லது.



வாகனங்கள், வீடு, காணி, வியாபார ஸ்தாபனங்கள்

பழைய, புதிய பொருட்கள் (New & used)

# வாங்குதல்
# விற்றல்
# வாடகைக்கு விடுதல்...

# இலவசமாக

விளம்பரம் செய்திட ஒரே இடம்!

Tamil Media 24 .com

**மரண அறிவித்தல், அஞ்சலிகள்...**

மேலும் அன்றாட செய்திகள் மற்றும் நிகழ்வுப்படங்கள்

வேறு பல சேவைகளையும் தருகிற

"One-Stop Website" தான்

Tamil Media 24 .com

### அன்பு...?

ஆண்டவனின் அர்ச்சனைக்காய்
அறுக்கப்படுகின்றன மலர்கள்..!
"அன்பே சிவம்"...???

### அநியாயம்!

தனது கன்றிற்காய்
பசு சுரக்கும் பாலை
பறித்தெடுத்துப் பருகிவிட்டு
மனிதன் எழுதுகிறான்...
"பசு பால் தரும்"

### அரசியல்வாதி

வாக்குறுதிகளோடு ஏறுகிறார்கள்
அரியாசனம்..
ஏறியபின் எமக்கேதுமில்லை
பிரயோசனம்..!

### சாபம்

நவீன உலகம் காற்றிலேறி
நிலவைத்தொடுகிறது
நமது இனமோ வாழ்வுதேடி
உலகில் அலைகிறது..!


### நிச்சயம்

திருமணம்
சொர்க்கத்தில் நிச்சயம்...
விவாகரத்து
தர்க்கத்தில் நிச்சயம்..!

# விழியோரம் வலி!...

தொகுப்பு: தமிழ்விழி

# அகரக் கவிதைகள்...



## ஏது கவலை

இங்கு...
வேலை செய்யினும் பணம்
வெட்டியாயிருப்பினும் பணம்
பின்பு ,
நாதியில்லையே என
நமக்கேது கவலை..!

## கடவுள்...?

கடவுளை நம்பியோர்
கைவிடப் "ப(ட்)டார்"
இராமாயணத்திலும்,
இயேசு காவியத்திலும்
ஈழ மண்ணிலும்...!

## எப்படிச் சம்மதம்..?

குருக்கள் கையில்
குர் ஆன் இல்லை,
பாவா கையில்
பைபிள் இல்லை
கிறிஸ்த்தவர் கையில்
கீதை இல்லை
எப்படி ஆகும்
எம்மதமும் சம்மதம்..?!!!

## புழுகு

தனியொருவனுக்கு உணவில்லையெனில்
ஜெகத்தினை அழிப்பார்களாம்..!
தமிழினத்துக்கே உணவில்லையெனில்...?!!

அன்பிற்கினிய அகரம் வாசகர்களே...!
உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை, 3 - 6 வரிகளுக்கு
மேற்படாமல் எழுதி அனுப்புங்கள்..!
சிறந்தவையாகத் தெரிவுசெய்யப்படும்
கவிதைகள் அகரத்தின்
கவிதைத்தொடரில் பிரசுரிக்கப்படும்.

tMedia Network
PO BOX 4153, 59037 Hamm
Germany

eMail: poems@akaram.com

# இந்தியில் பாட்சா!..



வி. சபேசன்

நடிகர் ரஜினிகாந்தின் வாழ்க்கையில் பாட்சா படத்திற்கு முக்கிய இடம் உண்டு. மிகப் பெரிய வெற்றியைப் பெற்ற படம் அது. நடிகர் ரஜினிகாந்தின் "சுப்பர் ஸ்டார்" பட்டத்தை மேலும் வலுவாக்கிய படம். ரஜினிகாந்திற்கு என்றே உருவாக்கப்பட்ட பாத்திரம் மற்றும் திரைக்கதையை கொண்டிருந்த படம். வேறு யார் நடித்திருந்தாலும் இந்தப் படம் அவ்வளவிற்கு எடுபட்டிருக்காது.

படம் வெற்றி பெற்றதோடு மட்டும் அல்லாது ரஜினிகாந்தை அரசியலில் குரல் கொடுக்கவும் செய்த படம் அது. பாட்சா படத்தின் வெற்றி விழாவில் ரஜினிகாந்த் தமிழ் நாட்டில் நடக்கும் குண்டு வெடிப்புக்களை கண்டித்துப் பேச அரசியலில் பரபரப்பு தொற்றிக் கொண்டது.

அதன் பிறகு "ஜெயலலிதா மீண்டும் ஆட்சிக்கு வந்தால் தமிழ்நாட்டை ஆண்டவனாலும் காப்பாற்ற முடியாது" என்கின்ற புகழ் பெற்ற பஞ்ச் டயலாக்கை எல்லாம் ரஜினிகாந்த் பேசினார். ஆனால் பின்பு சில ஆண்டுகள் கழித்து "அம்மா என்று அழைக்காத உயிரில்லையே" அணியில் அவரும் சேர்ந்து ஜெயலலிதாவை "தைரிய லட்சுமி" என்று எல்லாம் புகழ்ந்தது தனிக்கதை.

இப்படி சினிமாவிலும் அரசியலிலும் தவிர்க்க முடியாத இடத்தை பிடித்துள்ள "பாட்சா" படத்தை இப்பொழுது இந்தியில் மொழிமாற்றம் செய்து வெளியிடுகிறார்கள். படம் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மெருகூட்டப்பட்டுள்ளதாக சொல்லப்படுகிறது. ஏறக்குறைய ஆயிரம் திரையிரங்குகளில் படம் வெளியிடப்படுகிறது.

உண்மையில் "பாட்சா" திரைப்படம் ஒரு இந்திப் படத்தின் பாதிப்பில் எடுக்கப்பட்டதுதான். அமிதாப்பச்சன் நடித்த "ஹம்" என்கின்ற திரைப்படம் அது. அந்தப் படத்தில் அமிதாப்பச்சனின் தம்பிகளில் ஒருவராக ரஜினிகாந்தும் நடித்திருப்பார். பாட்சாவில் வருவது போலவே அமிதாப்பச்சனின் தந்தையின் இரண்டாவது மனைவியின் மகன்களில் ஒருவராகவே ரஜினிகாந்த் இருப்பார்.

எண்பது மற்றும் தொண்ணூறுகளில் ரஜினிகாந்த் குறிப்பிடத்தக்களவு இந்திப் படங்களில் நடித்திருந்தாலும் அவரால் வட இந்தியாவில் ஒரு உச்ச நடிகராக மாற முடியவில்லை. ஓரிரு படங்களிலேயே தனிக் கதாநாகயகனாக நடித்தார். "கங்வா" (இந்தியில் எடுக்கப்பட்ட மலையூர் மம்பட்டியான்) போன்ற படங்களை குறிப்பாகச் சொல்லலாம்.

மற்றையபடி இரண்டு மூன்று கதாநாயகர்களில் ஒருவராக, அல்லது கதநாயகனுக்கு தோழனாகவே இந்திப் படங்களில் ரஜினிகாந்த் நடித்தார். இப்படி நடித்த சில படங்கள் தமிழிலும் மொழிமாற்றம் செய்யப்பட்டு வெளிவந்தன.

ரஜினிகாந்தும் சிறிதேவியும் நடித்த படம் என்று விளம்பரம் செய்யப்பட்டிருக்கும். ஆர்வமாக போய் பார்த்தால் யாரோ ஒரு வட இந்திய நாயகனும் சிறிதேவியும் டூயட் பாடிக் கொண்டிருப்பார்கள்.

ரஜினிகாந்த் வேறு ஒரு குரலில் பேசிக் கொண்டு கதநாயகனுக்கு தோழனாக நடித்துக் கொண்டிருப்பார். அதன் பிறகுதான் தாம் ஒரு மொழிமாற்றுப் படத்திற்கு வந்திருக்கிறோம் என்பது ரசிகர்களுக்கு புரியத் தொடங்கும். இப்படி எண்பதுகளின் கடைசியிலும் தொண்ணூறுகளின் தொடக்கத்திலும் பலமுறை நடந்திருக்கிறது.

ரஜினிகாந்தும் தான் நடிக்கின்ற இந்திப் படங்கள் தமிழில் வெளியாகாமல் பார்த்துக் கொள்வதில் கவனமாகத்தான் இருப்பார். அப்படியிருந்தும் யாராவது அதை தமிழில் வெளியிட்டு விடுவார்கள்.

இதில் இன்னும் சோகம் என்னவென்றால் அனேகமான இந்திப்படங்களில் ரஜினிகாந்தை இடையிலோ அல்லது முடிவிலோ சாகடித்து விடுவார்கள்.

ஆனால் என்னதான் சொன்னாலும் ரஜினிகாந்தின் ஸ்டைலுக்கு என்று வட இந்தியாவில் ரசிகர்கள் இருக்கத்தான் செய்தார்கள். இதனால்தான் இரண்டாவது, மூன்றாவது கதநாயகனாக என்றாலும் ரஜினிகாந்த்தால் பல இந்திப் படங்களில் நடிக்க முடிந்தது.

"கிராவ்தார்" என்று ஒரு இந்திப் படம் 1985இல் வெளிவந்தது. இந்தப் படத்திற்கு இந்திய திரைப்பட வரலாற்றில் நிச்சயமாக ஒரு இடம் இருக்கும். இந்தியத் திரையுலகின் உச்ச நட்சத்திரங்களாக விளங்குகின்ற அமிதாப்பச்சன், கமல்ஹாசன், ரஜினிகாந்த் ஆகிய மூவரும் இணைந்து நடித்திருந்தார்கள்.

ஆயினும் ரஜினிகாந்திற்கு படத்தில் மூன்றாம் இடம்தான். இந்தப் படத்திலும் ரஜினிகாந்த் வில்லன்களிடம் சூடு வாங்கி இறந்து போவார். ஆனால் சூடு வாங்கிய பின்னரும் ஸ்டைலாக சிகரெட் பிடித்தபடி வில்லன்களை அடித்து விட்டு, அதே சிகரட்டோடு இறப்பார்.

ஆனால் ஒரு கட்டத்திற்கு மேல் ரஜினிகாந்தால் இந்திப் பட உலகில் தாக்குப் பிடிக்க முடியவில்லை. கமல்ஹாசனாலும் அது முடியவில்லை. இருவருமே தொண்ணூறுகளில் இந்திப் படங்களில் நடிப்பதை மிகவும் குறைத்துக் கொண்டோ, அல்லது முற்றாகக் கைவிட்டு விட்டோ தமிழ் படங்களில் அதிகமாக நடிக்கத் தொடங்கினார்கள்.

வட இந்தியாவில் தென்னிந்திய நடிகர்களை வளர விடக் கூடாது என்று இந்தி நடிகர்கள் பல சதிகளை செய்ததாக கமல்ஹாசன் கூறியதாகக் கூட ஒரு செய்தி உண்டு.

இன்றைக்கு ரஜினிகாந்த் மிகப் பெரிய உச்சத்தை தொட்டுவிட்டார். ஆசியாவிலேயே அதிக சம்பளம் வாங்கும் நடிகர்களில் ஒருவர் ஆகி விட்டார். இந்தியாவிலேயே அதிக பொருட்செலவில் எடுக்கப்பட்டு, அதிக வசூலை குவித்த படமாக ரஜினிகாந்தின் எந்திரன் படம்தான் விளங்குகிறது.

அப்படி என்னதான் இந்த மனிதரிடம் இருக்கிறது என்று பலரும் ஆர்வமாக ரஜினியை பார்க்கிறார்கள். அமிதாப்பச்சனோடு சம வயது உள்ள நண்பனாக நடித்த ரஜினிகாந்த் இன்றைக்கு அமிதாப்பச்சனின் மருமகளோடு டுயட் பாடி நடிப்பதை வட இந்திய ரசிகர்கள் ஆச்சரியமாகத்தான் பார்க்கிறார்கள்.

இன்றைக்கு வளர்ந்திருக்கின்ற சந்தைப்படுத்தல் சாந்த தொழில்நுட்பம் ரஜினிகாந்தின் விம்பத்தை மேலும் பல மடங்கு பெருக்கச் செய்திருக்கிறது.

இதை வைத்து இப்பொழுது பாட்சா படத்தை இந்தியில் மொழிமாற்றம் செய்து வெளியிடுகிறார்கள். இந்தப் படம் இலாபத்தைக் கொடுத்தால் இந்தியில் ரஜினிகாந்தின் பழைய படங்களை மொழிமாற்றம் செய்வதற்கு பலர் போட்டி போடுவார்கள்.

MEDIA ASIA
Another Home of Southasian Channels
For satellite news, live radios, TV-Guide, Radio-schedules, contact details of Tamil channels in the world etc.
www.mediaasia.in

# தடம் புரளும் இந்திய மாநில மத்திய அரசுகள் அவதியுறும் மக்கள்!



சீதாராமன்

முதலில் தமிழக நிலையைப் பார்ப்பது அவசியமாகிறது. தனுஷ் ஒரு படத்தில் பேசும் டயலக் வரிக்கு வரி பொருந்தும் நிலை தெரிகிறது. அவர் பேசுவார், "அத்தை நீங்கள் எவ்வளவுக்கு என்னை நல்லவன் என்று நினைக்கிறீங்களோ அவ்வளவுக்கு நான் நல்லவன் இல்லை; எவ்வளவுக்கு என்னைக் கெட்டவன் என்று நினைக்கிறீங்களோ அவ்வளவுக்கு நான் கெட்டவன் இல்லை."

தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் அன்றாட அரசியல் இப்படித்தான் இருக்கிறது. இவர் தனது உடன் பிறவாச் சகோதரி சசிகலாவைத் தன்னைப் பதவியிலிருந்து இறக்கும் சதிகலா என அவரே அறிக்கை விட்டார். சசிகலாவோடு அவரது சொந்த பந்தங்கள் அனைவரையும் தமது வீட்டிலிருந்து விரட்டி கட்சியின் அடிப்படை அங்கத்துவத்தையும் பறித்த போது ஆகா நாட்டுக்கு நல்ல காலம் வந்தது என மகிழாத நல்ல மனங்களே இல்லை எனலாம்.

ஜெயலலிதாவின் குணத்தை அறிந்தவர்களோ, எல்லாம் வெறும் நடிப்பு நம்ப முடியாது முன்பும் இப்படித்தான் ஒட்டும் இல்லை உறவும் இல்லை என உலகறியக் கூறி விரட்டி விட்டு மீண்டும் ஒட்டி உறவாடியவர் எனக் கிண்டல் அடித்தனர். அதனை உண்மை ஆக்குவது போல் இப்பொழுது மீண்டும் சசிகலா அம்மாவைச் சந்தித்து இரண்டு பக்க மன்னிப்பு அறிக்கையும் விடுத்துள்ளார். அதனை ஜெயா ஏற்று அவருக்கு மீண்டும் கட்சியில் அடிப்படை உறுப்புரிமை வழங்கிப் பாவ மன்னிப்பும் கொடுத்துள்ளார்.

இவர்கள் மீதான சொத்துக் குவிப்பு வழக்கு பெங்களூர் நீதி மன்றத்தில் நடந்து வருகிறது. அதில் சாட்சியம் அளித்து வரும் சசி ஜெயாவைக் காப்பாற்றும் வகையில் தமது வாக்கு மூலங்களையும் பதில்களையும் அளித்து வந்தார். பல தருணங்களில் வெளிப் படையாகவே அன்றைய அதிகார அரசு இயந்திரங்கள் திட்டமிட்டே சாட்சிகளையும் ஆதாரங்களையும் புகுத்திப் பழிவாங்கும் விதத்தில் வழக்குகள் பதியப் பட்டன என்றும் கூறினார்.

ஜெயாவைச் சிறையில் வைத்து விட்டு அவர் வீட்டில் கிடைத்ததாகக் காட்டிய புடவைகளும் நகைகளும் தன் கண்முன்னால் சேர்க்கப்பட்டன எனவே ஜெயா எப்படிப் பொறுப்பாக முடியும் என நீதி மன்றத்தையே கேள்வி கேட்டார். நீதி மன்றத்திலும் கூட அவர்மீது ஜெயாவின் பலமான கண்காணிப்பும் அழுத்தமும் இருக்கிறது என்றே ஊடகங்கள் கூறின.

அது உண்மை என்றால் இந்த வழக்குகளின் தீர்ப்புகள் வெளியாகும் வரை இருவரின் நடிப்புக்கும் ஒஸ்கார் அவார்டே வழங்கலாம்.

இப்போது நடப்பது நாடகமா ? முன்னர் நடந்தது நாடகமா? அல்லது எப்போதும் எல்லாமே நாடகம்தானா? என்பதைக் காலம்தான் பதில் சொல்லும். ஜெயாவைச் சிறை செல்லாது பாதுகாக்க சசிகலா செய்த இத்தனையும் போதும் என முதல்வர் நினைத்துவிட்டார் போலத் தெரிகிறது.

இது மட்டும் அல்ல அதிசய அதிர்ச்சி, கூடங்குளம் அணு மின் நிலையம் ஆபத்து மிக்கது என்பதற்கான ஆதாரங்கள் உலகளவிலும் இந்தியாவின் நிலவியல் கடலியல் பரப்பிலும் நிறையவே உள்ளன. ஆனால் அதனை மத்திய அரசும் காங்கிரஸ் கட்சியும் அதன் தமிழக ஆதரவாளர்களும் ஆயிரம் பொய் சொல்லியாவது மறைத்துத் தாலியைக் கட்ட வைக்க வேண்டும் என்ற வெறியில் உள்ளனர். அதற்கான அவசரத்தையும் அவசியத்தையும் உருவாக்கும் செயலாகவே அடாவடித்தனமான மின் தடைகளை அமுலாக்கி மத்திய அரசு மக்களுக்குப் பாரிய பொருளாதார இழப்பையும் தினசரி தீராத துன்ப துயரங்களையும் ஏற்படுத்தி வருகிறது.

சங்கரன் கோயில் இடைத் தேர்தல் வாக்களிப்பு தினம் வரை மாநில அரசும் மக்கள் மீது கருணை மழையைப் பொழிந்து குளிரவைத்த காட்சிகள் அடுத்த கணமே தலைகீழான நிலைக்குப் போனது. அமைதியான மக்கள் எதிர்ப்புப் போராட்டத்தைத் தேர்தல் வாக்களிப்பு வரை அனுதாபத்தோடு பார்த்த மாநில அரசு போராடும் மக்களுக்கான பால், தண்ணீர், உணவுப் பொருள் மின்சாரம் போன்ற அத்தியாவசிய சேவைகளை நிறுத்தி 200க்கும் அதிகமான சத்தியாக்கிரகிகளைக் கைது செய்து 144 தடைச் சட்டத்தின் கீழ் சிறை செய்து வழக்குகளைப் பதிவு செய்து நெருக்குதலைக் கொடுக்கிறது.

மீண்டும் மத்தியில் கூட்டணி ஆட்சிதான் சாத்தியம் எனும் நிலையே உள்ளது. ஆனால் ஆட்சியில் உள்ள காங்கிரஸ் தனது தலைமையில் ஒரு கூட்டணியை உருவாக்கவே எல்லா வழிகளையும் பயன்படுத்தும். அதற்கு வசதியாக முக்கிய மாநிலக் கட்சிகளின் தலைவர்களை ஊழல் வழக்குகளில் சிக்க வைத்துத் தன்னிடம் பணிய வைப்பதே அதன் இந்திரா காலத்துத் தந்திரமாகும்.

இந்த வகையில் தமிழக முதல்வர் ஜெயலலிதா முழுமையாக வழக்குகளில் இருந்து விடுபட்டால் அல்லாது அவராலும் காங்கிரஸை மீறிப் பயணிக்க முடியாது போகலாம். எனவே மூன்றாவது அணி என ஒன்று உருவானாலும் அதில் அவரது நிலை பதட்டம் நிறைந்தே காணப்படும். அதற்கேற்றவாறே அவரது தற்போதைய நகர்வுகளையும் பார்க்க வேண்டி உள்ளது. கூடங்குளம் அணுமின் நிலையத்தில் அவரது இரட்டை நிலை காங்கிரஸை முற்றிலுமாகப் புறந்தள்ள முடியாத பலவீனம் எனவே கருத வேண்டும்.

பா.ஜ.க.வில் சாதனையாளன் எனப் பெயர் பெற்று அகில இந்திய அளவில் பாராட்டுக்கு உள்ளாகி இருக்கும் குஜராத் முதல் அமைச்சர் நரேந்திர மோடியை முன்னிறுத்தினால் ஒரு பலமான நிலை கிட்டும் என்பதை கருத்துக் கணிப்புகள் காட்டுகின்றன. அப்படியான ஒரு கட்டத்தில் தமிழக முதல்வர் ஒரு காத்திரமான பங்கை வகிக்க முடியும். அதற்கான அடித்தளத்தை தமிழகம் வந்திருந்த அத்வானி மற்றும் நரேந்திர மோடியிடம் நடிகர் பத்திரிகை அரசியல் விமர்சகர் சோ முன்வைத்திருந்தார்.

ஆனால் மோடிக்குக் கட்சிக்குள்ளும் எதிரிகள் அவரது சாதனைகளால் உருவான பொறாமைத் தீயால் அவர் வெந்து கொண்டிருப்பது ஒரு புறம். மறு புறத்தில் காங்கிரஸ் கட்சியின் திட்டமிட்ட அவதூறுப் பிரச்சாரங்கள் வழக்குகள் போன்ற சதிகளால் மக்களிடமிருந்து அந்நியப் படுத்தப் படுகிறார். சென்னையில் நடந்த துக்லக் சஞ்சிகை 42வது ஆண்டு விழாவில் பங்கு பற்றி ஆற்றிய உரையில் அவரே இவற்றைக் கூறி உள்ளார்.

ஆனால் அத்வானி கட்சியில் உள்ள தமது முதல் நிலையை மோடிக்காக விட்டுக் கொடுப்பாரா? இப்போதுள்ள கருத்துக் கணிப்புகளின் படி மோடி அத்வானியை விட வாக்காளரால் அதிகம் விரும்பப்படும் நபராக இருக்கிறார். கட்சி மற்றும் மக்கள் நலன் கருதி அத்வானியே மோடியை முன்னிறுத்தினால் அல்லாது பா.ஜ.க. தேர்தலில் குறிப்பிடுமளவு வெற்றி பெறமுடியாது.

இலஞ்சம் ஊழலால் இந்தியா மிக மோசமான நிலைக்குள் இருக்கிறது. மக்களுக்கான உணவுத் தானியங்கள் கோடிக் கணக்கான தொன்கள் திறந்த வெளிகளில் நாசமாகி அழிகின்றன. அவற்றைப் பசியால் வாடும் மக்களுக்கு இலவசமாக வழங்க நீதிமன்ற ஆணை கொடுத்தும் வழங்கப்படாது. பசியால் மக்கள் தற்கொலையாலும் பட்டினியாலும் சாகின்றனர். குளிரால் வீடுகளின்றி மடிந்த மக்களின் நிலை கண்டு நீதிமன்றமே மாநில அரசுகள் வீடற்ற மக்கள் உறங்கத் தங்கு மண்டப வசதி செய்து கொடுக்க வேண்டும் எனத் தீர்ப்பளித்தது.

உணவுப் பருப்புவகைத் தானியங்களை வணிகம் செய்யும் பெரிய நிறுவனங்கள் ஆண்டு தோறும் கோடிக்கணக்கில் இலாபம் ஈட்ட அரசின் வரிச் சலுகைகளே காரணமாகின்றன. அதே வேளையில் அரசு ஒருநாளுக்கு 24 இந்திய ரூபாய் செலவு செய்பவன் ஏழை அல்ல என்ற புது வியாக்கியானத்தை வகுத்து வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ள மக்கள் தொகையை குறைத்துப் பிரச்சாரம் செய்து பல கோடி மக்களுக்கான நிவாரணக் கொடுப்பனவுகளை மறுக்கிறது.

ஒரு நாளுக்கு 24 ரூபாயில் நகர்புறத்தில் 2 கப் காப்பி அல்லது கிராமத்தில் 4 சப்பாத்தி கிடைப்பதே அபூர்வம். கறுப்புப் பணத்தை வெளிநாடுகளில் இருந்து திரும்பப் பெற்றாலே நாடும் மக்களும் சொகுசாக வாழமுடியும் எனும் அளவுக்கு இந்திய அரசியல்வாதிகளும் பெரு முதலாளிகளும் வரி ஏய்ப்புச் செய்து பதுக்கிய பணம் போதும் என விடயமறிந்த பேர்களே ஊடகங்களில் தெரிவித்து வருகின்றனர்.

176,000 (ஒரு இலட்சத்து எழுபத்தாறாயிரம்) கோடி இழப்பை ஏற்படுத்திய தொலைத் தொடர்பு 2ஜீ அலைக் கற்றை ஊழலைக் கண்டு திகைத்த பேருக்கு, பத்து இலட்சத்து நாப்பதாயிரம் கோடி 10,40,000 கோடி கனிமச் சுரங்க ஊழல் இப்போது வெளியாகி உள்ளது. ஆட்சியின் அனைத்து மட்டத்திலும் உள்ள பெரிய மனிதர்கள் எல்லாம் கறுப்புப் பணக்காரர்களே. சோனியா குடும்பமும் விலக்கல்ல.

இக்கட்டுரை எழுதப்படும் பொழுது இறுதியாக வெளியான சேதிப்படி இராணுவத் தளபதி தமக்கு 104 கோடி இலஞ்சம் வழங்க முன்னாள் இராணுவ அதிகாரி முயன்றார் என்ற குற்றச்சாட்டும் அது தொடர்பான இந்திய இராணுவத் தளபதி இராணுவத்தின் அவல நிலை பற்றிப் பிரதமருக்கு எழுதிய விபரங்களும் பாராளுமன்ற இரு சபைகளிலும் புயலைக் கிளப்பி வருகிறது. எடுக்க எடுக்கக் குறையாத அட்சய பாத்திரம் போல நாட்டில் ஊழல் பரந்து விரிந்து கிடக்கிறது.

இவற்றுக்கு எதிராகக் குரல் எழுப்பும் வடக்கே அன்னா ஹஸாரே தெற்கே கூடங்குளம் அணுமின் நிலைய எதிர்ப்பாளர் உதயகுமார் போன்ற ஒரு சிலரின் முயற்சியால் நாடு திருந்தி மக்கள் நல்வாழ்வு காண்பர் என எப்படிக் கனவு காண முடியும்? அடுத்த தேர்தல் தெருமுனையில் நிற்கிறது அப்போது பார்க்காலாம் என மக்கள் காத்திருக்கின்றனர்.



# PAGEVISION IT AG

உங்கள் கணனிசார் அனைத்து விதமான தேவைகளுக்கும் தயக்கமின்றி எம்மை நாடுங்கள்.

Tel: 043 317 91 00, Fax: 043 317 91 02

www.pagevision.ch
info@pagevision.ch



CHF 109.- inkl. MwSt.

எம் ஊடாக VOIP TELEFON
இணைப்பை ஏற்படுத்தினால், இலவசமாகவும்
கக் குறைந்த கட்டணத்திலும் தொடர்பினை
ஏற்படுத்திக் கொள்ளலாம்.

Tellstr. 31/ Ecke Militärstr. 106
8004 Zürich

உலக ஓட்டத்திற்கு ஏற்ப
உங்கள் வீடுகளிலும்
நவீன கணனி முக்கியம்
என்பதை நாம்
அறிவோம்.



- Intel Core i5 2400
- 4x 3.10GHz, 6MB Cache
- 4GB DDR-3 Ram, Markenprodukt
- 1000GB Festplatte
- Nvidia GeForce GTX550
  PCI-Express Grafikkarte mit 1GB DDR-5 Ram
- Windows 7 Home Premium

**CHF 1'190.- inkl. MwSt.**

# return'IT

## günstige gebrauchte Computer
## Reparaturen aller Marken

## www.pckaufen.ch



CHF 110.- inkl. MwSt.

**DELL Precision 380**

Intel Pentium IV - 2.80GHz
160GB Festplatte, 7200RpM, S-ATA
RAM 1GB DDR2 RAM
DVD/CD-RW, Floppy
Grafikkarte: Nvidia Quadro FX1400 - 128MB
Windows XP Professional Lizenzkleber

**HP DC7700**

CHF 120.- inkl. MwSt.

Intel Core 2 Duo E6300
2x 1.86GHz
1GB DDR-2 RAM
80GB Festplatte
DVD/CD-Brenner
Integrierte Intel Q965 Grafik
Anschlüsse: 8x USB 2.0
VGA, 5x Audio, GLAN, 2x PS/2
Windows XP Professional Lizenz



**HP Compaq NC8430**

CHF 270.- inkl. MwSt.

15.4" WSXGA+ Display
Intel Core 2 Duo T7200
2x 2.00 GHz
2GB DDR-2 RAM
DVD-RW Laufwerk
ATI Mobility Radeon X1600
120GB Festplatte SATA
54Mbit WLAN
Fingerprint Reader, Bluetooth
Akkulaufzeit: 46-60 Minuten
Windows XP Professionaler



## !! REPARATUREN ALLER MARKEN !!

## für Neuware besuchen Sie
## WWW.PAGEVISION.CH

Tellstr. 31, 8004 Zürich - Tel: 043 317 91 01
Kirchgasse 33, 8302 Kloten - Tel: 044 500 22 22
Züricherstr. 99, 8406 Winterthur - Tel: 052 203 15 50

**HP Compaq 8510W**

CHF 360.- inkl. MwSt.

Intel Core 2 Duo T7500
2x 2.20 GHz
2GB DDR-2 RAM
DVD-RW Laufwerk
Nvidia Quadro FX 570M
250GB Festplatte SATA
300Mbit WLAN
Schweizer Tastatur,
Fingerprint Reader,
Bluetooth
*Windows VISTA Business Lizenz*




பாரிஸ் லாசப்பல் மாநகரில்
ஆடைத்தெரிவுகளின் அழகு மாடம்
தங்கம் ரெக்ஸ்
4, rue perdonnet
75010 Paris
France
மலிவான விலையில் மனம் மகிழ்ந்திடும்
தரமான தெரிவுகள்
அனைத்தும் தங்கத்தின் பெறுமதி!
எமது வாடிக்கையாளர்களுக்கு இனிய சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்
Tel: 01 40 36 00 35
Port: 06 23 54 65 14




# மூன்றாம் தரப்பு தேவையா?

ஆர். தயாபரன்


இனி மேல் இலங்கை அரசு தானாக வந்து கூட்டமைப்புடன் பேச்சுக்களை ஆரம்பிக்கலாமென்பது கேள்விக்குறியே? ஜெனிவா மூக்குடைவின் பின்னர் அரசு அவ்வாறான முடிவெதனையும் எடுக்காதெனவே பலரும் எதிர்பார்க்கிறார்கள். இந்நிலையினில் கூட்டமைப்பு தானாகவே முன்வந்து பேச்சுக்களிற்குத் தாம் தயாராக இருப்பதாக அறிவித்திருக்கின்றமை தெற்கினில் கூர்ந்து அவதானிக்கப்படுகின்றது. அரசிற்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குமிடையே இனி வருங்காலங்களில் பேச்சுக்கள் நடைபெற்றால் அது மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தினில் நடைபெறவேண்டுமெனப் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கருத்து வெளியிட்டுள்ளார். அதிலும் சர்வதேச நாடொன்றே மூன்றாம் தரப்பாக வரவேண்டுமெனவும் அவர் சுட்டிக்காட்டத் தவறவில்லை. கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக எந்தவித பலாபலனும் இன்றிப் பேச்சுக்களை இலங்கை அரசு இழுத்தடித்துச் சென்றிருந்தது. சர்வதேசத்தை ஏமாற்றும் வகையினில் பேசுவதாகக்காட்டிக்கொள்ள அரசிற்குக் கூட்டமைப்பு வழி சமைத்துக் கொடுத்திருந்தது என்பது மட்டுமே சிறு குழந்தைகள் கூடப் புரிந்துகொள்ளும் உண்மையாக இருந்தது.

ஜெனிவாவில் அமெரிக்காவினால் முன்வைக்கப்பட்ட இலங்கைக்கெதிரான பிரேரணை வெற்றிபெற்றுள்ள நிலையினில் அரசு மீண்டும் பேச்சுவார்த்தை என்ற கண்ணாமூச்சி ஆட்டத்தை ஆடத்தான் வேண்டியிருக்கும்.எனினும் இம்முறை பேச்சுக்கள் தொடங்கப்படாதிருப்பதை உறுதிப்படுத்த முதலில் தெரிவுக் குழுவிற்குக் கூட்டமைப்பு பெயர்களைத் தரவேண்டுமென்ற கோரிக்கையை அரசு மீண்டும் முன்வைக்கலாமென்ற எதிர்பார்ப்புக்கள் எழுந்துள்ளன. எனினும் இதுவரை காலமும் தெரிவுக் குழுவிற்குப் பெயர்களை வழங்குவதில்லையென்ற நிலைப்பாட்டிலிருந்த கூட்டமைப்பு வழமை போலவே இவ்விடயத்திலும் அந்தர் பல்டி அடிக்குமா? இல்லையாவென்பது போகப்போகவே தெரியும்

அரச பிரதிநிதிகளுக்கும் கூட்டமைப்பிற்குமிடையே நடத்தப்படும் பேச்சுக்களில் எட்டப்படும் தீர்வையே தெரிவுக்குழுவிற்கு முன் வைக்கப்போவதாகக் கூட்டமைப்பு இது வரை கூறி வந்திருந்தது. ஆனால் இலங்கை அரசோ கடைசிச் சுற்றுப்பேச்சுக்களுக்குத் தங்களது பிரதிநிதிகளைக்கூட அனுப்பி வைக்காதிருந்தது. இறுதிக் காலங்களில் சொல்லிக்கொள்ளாமலேயே கழன்றும் கொண்டது.

ஜெனீவா விவகாரங்களின் பின்னர் கூட இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டமொன்றை முன்வைக்காது இழுத்தடிக்கும் இலங்கை அரசின் உத்தி இனியும் வெற்றிபெறப்போவதில்லை. உடனடியாக ஏதாவதொரு அரைகுறைத்தீர்வையேனும் கட்டியடிக்கும் முயற்சியில் இலங்கை அரசு ஈடுபடப்போகின்றதென்பதே உண்மையாகும். அது 13 ஆவது திருத்தச்சட்டத்தின் கீழான மாகாண சபையாகவோ அல்லது 13 பிளஸ் ஆகவோ மைனஸாகவோ இருக்கக்கூடும். அரசைப்பொறுத்தவரை ஏதாவதொரு தீர்வை வழங்கி விட்டதாக வெளியே காட்டிக்கொள்வது மட்டுமே நோக்கமாகவிருக்கின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தொடரில் இலங்கைக்கெதிரான போர்க்குற்ற விசாரணையெனும் கோசம் வலுவிழந்து தற்போது கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினது அறிக்கையினை அமுல்படுத்துவது எனும் மட்டத்தை வந்தடைந்துவிட்டது அனைவருக்கும் தெரிந்ததே.




கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு என்பது இலங்கை அரசு தானே போர்குற்றங்களிலிருந்து தப்பித்துக் கொள்ளத் திட்டமிட்டு உருவாக்கிக் கொண்ட அமைப்பாகும். அதாவது தனக்குத்தானே வெள்ளையடித்துக் கொள்ளும் வழிமுறையதுவாகும்.

அரசைக் காப்பாற்றிக் கொள்ளும் வகையில் குழுவினர் ஒன்றாகக் கூடியிருந்து நீண்ட கால அவகாசத்தை எடுத்துத் தமது அறிக்கையினைத் தயாரித்திருந்தனர். அதன் பின்னணியிலும் சில தமிழ் தலைகள் இருந்ததாகக் கூறப்படுகின்றது முன்னுரிமைப்படுத்தப்படவேண்டிய விடயங்கள் பலவும் பின்னுக்குத் தள்ளப்பட்டன. தேவையற்றவை பூதாகரப்படுத்தப்பட்டன. மூன்று தசாப்த கால அகிம்சைப் போராட்டம் மற்றும் அதேயளவு காலப்பகுதியிலான ஆயுதப்போராட்டமும் இனப்பிரச்சினையைச் சுற்றியே வளர்ந்திருந்தது. யுத்தத்தினால் ஏற்பட்ட தற்காலிகப் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பிரஸ்தாபித்த ஆணைக்குழு, இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து மேம்போக்காகவே கருத்துக்களை வெளியிட்டிருந்தது.

சர்வதேச அழுத்தங்களிலிருந்து தப்பித்துக்கொள்ள இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டமொன்றை எவ்வாறேனும் முன்வைப்பதற்கான அழுத்தம் இலங்கை அரசிற்கு என்றுமில்லாதவாறு தற்போது அதிகரித்துள்ளது. அத்தகைய சூழலில் கிடைப்பதைப் பேரம்பேசி நிரந்தரம்மிக்கதான தீர்வொன்றை எட்டவேண்டியது கூட்டமைப்பின் கடமையாகின்றது. முதலில் கிடைப்பதைப் பெற்றுக் கொள்வோம். பின்னர் அடுத்த கட்டத்திற்குப் போராடி நகரலாமென்ற சுமந்திரன் போன்றவர்களது வாதம் இனி வருங்காலங்களில் சாத்தியப்படப்போவதில்லை. கிடைக்கப்போவது இலட்சக்கணக்கான உயிர்களைப் பலி கொடுத்துப் பெறப்படுவது. அத்தகைய சூழலில் அரைகுறைகளையெல்லாம் பெற்றுக் கொள்வதென்பது மிகப் பெரிய துரோகமாகிவிடும்.

இத்தகைய சூழலிலேயே இனிவரும பேச்சுக்களில் சர்வதேச மூன்றாந்தரப்பு மத்தியஸ்தம் பற்றி சுரேஷ் பிரேமச்சந்திரன் பிரஸ்தாபித்திருக்கிறார். அவ்வாறான மூன்றாந்தரப்பு மத்தியஸ்தம் முன்னிலையினில் வழங்கப்படும் உறுதிமொழிகளை அமுல்படுத்துவதென்பதிலிருந்து இலங்கை அரசு தப்பித்துக் கொள்ளமுடியாத சூழலையே ஏற்படுத்துமென்பது அனைவரதும் எதிர்பார்ப்பாக இருக்கலாம். ஆனால் இவ்விடயத்திலும் இலங்கை அரசு கூட்டமைப்புடன் இணங்கிப்போகுமாவென்பது மிகப் பெரிய கேள்வியே.

அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே முன்னைய காலங்களில் நடைபெற்ற பல சுற்றுப் பேசசுக்களின் போதும் சர்வதேச மத்தியஸ்தம் மிகமுக்கிய விடயமாகப் பார்க்கப்பட்டது. கடந்த காலங்களில் மாறி மாறி ஆட்சிப் பீடம் ஏறிய சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர் தரப்புக்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களைக் கிழித்தெறிவதென்பது சாதாரணமாகிப் போயிருந்தது.

ஆனாலும் புறநடையாக ரணில் பிரபாகரன் ஒப்பந்தத்தைப் புலிகள் அதாவது தமிழர் தரப்புகள் கிழித்தெறிந்து கொண்டதாக ஆட்சியாளர்கள் கூறி வந்திருந்தனர். ஆனாலும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட எதனையும் நிறைவேற்றாது அதிலிருந்து புலிகள் வெளியேறத்தூண்டியவர்கள் தெற்கு ஆட்சியாளர்களே என்பது அனைவரும் அறிந்ததே.

கடந்த கால பட்டறிவுகளின் பிரகாரம் தமிழ் மக்களது பேரம் பேசும் சக்தியாகவுள்ள கூட்டமைப்பு மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்தின் கீழான பேச்சுக்கள் எனும் விடயத்தை கையிலெடுத்திருப்பது நல்லதற்கே. மீண்டுமொருமுறை ஏமாற்றப்படவோ அல்லது உள்வீட்டு அந்தர் பல்டியினால் எல்லாவற்றையும் குழப்பியடிக்கவோ முடியுமென்பதால் மூன்றாந்தரப்பின் பிரசன்னம் தேவையானதொன்றே.

ஜெனிவாவிற்கு செல்வது எனப் பிரகடனப்படுத்திவிட்டு இறுதி நேரத்தினில் அடித்த அந்த பல்டியும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை நிராகரித்துவிட்டு இறுதி நேரத்தில் வலுவற்ற ஒருசிலர் அறிக்கை வெளியிட்டுக் கொண்டமையும் தமிழ் மக்களிடையே கூட்டமைப்பிற்கு மிக மோசமான பின்னடைவைக் கொடுத்திருக்கின்றது. அதிலிருந்து மீண்டு எழ வேண்டிய தேவை முன்னெப்போதும் இல்லாதது போன்று இப்போது கூட்டமைப்பிற்கு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக உள்ளிருந்து நியாயம் கேட்கும் சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் போன்றோருக்கு மக்களிடமிருந்தும் ஊடகங்களிடமிருந்தும் கிடைத்துவரும் ஆதரவு, கூட்டமைப்புத் தலைமை தம்மைத்தாமே மீளாய்வு செய்ய வழிகோலியிருக்குமென்பது அனைவருக்கும் புரிந்தேயுள்ளது. மறுபுறத்தே வெளியே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தரப்பிற்கு வளர்ந்துவரும் ஆதரவும் முக்கியத்துவம் பெறுகின்றது.

இத்தகைய சூழலில் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வொன்றை காணும் பேச்சினில் சர்வதேச மூன்றாந்தரப்பொன்றைக் கூட்டமைப்புத் தலைமை வலியுறுத்துமானால் அது தற்போது ஏற்பட்டுள்ள பல பின்னடைவுகளிலிருந்தும் கூட்டமைப்பினை மீட்டெடுக்க உதவுமென்பதே உண்மையாகும்.




சமூகம் ▶

# என்ன கொடுமை சரவணா!...



கல்லெறி வேலுப்பிள்ளை

வணக்கம் பாருங்கோ,
எப்பிடிப் போகுது உங்கட வாழ்க்கை...? அகரம் இதழுக்கு இந்த மாதத்தோட ஒரு வயசு ஆகப்போகுது. உங்களின்ர வரவேற்பும் ஆதரவும்தான் பாருங்கோ அகரம் இதழுக்குக் கிடைச்ச வெற்றி. தொடர்ந்தும் இந்த ஆதரவும் அன்பும்தான் அகரத்தை வழிநடத்தப்போகுது பாருங்கோ.

விசயம் என்னெண்டால் தமிழரின்ர ஒவ்வொரு அடையாளங்களையும், தாயகமண்ணில எதிரி அழிச்சுக்கொண்டு போறது மனசுக்கு சரியான வேதனை பாருங்கோ. கையிருந்தும் இயலாதவர்களாக எங்க சனம் அங்க இருந்து உந்தக்கொடுமை எல்லாத்தையும் பார்த்துகொண்டு இருக்குது. ஆனால் இஞ்ச வெளிநாடுகளில எங்கட ஆக்கள், எங்கட அடையாளங்களை வைச்சு, அடிக்கிற கூத்தைப் பார்த்தால், என்ன செய்யுறதெண்டு தெரியாமல் கிடக்கு. எங்கட தேசியச் சின்னங்களையும், தேசியத்தின்ர மதிப்புக்குரிய அடையாளங்களையும் நாங்களெல்லாம் விற்பனைப்பொருளா மட்டும்தான் பாக்குறம். எங்களுக்கு எப்பவும் காசுதானே முக்கியம். பிறப்பிலேயே காசுதேடுற அவா ஊறிக்கிடக்குறதால நாங்களெல்லாம் காசைத்தவிர வேறொண்டையும் பாக்குறதில்ல. அதுதான் மனசுக்குச் சரியான வேதனையாய்க் கிடக்கு.

முள்ளிவாய்க்கால் அவலத்துக்குப்பிறகு, புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழ்ச்சாமானுகள் விக்குற அநேகமான தமிழ்முதலாளிமார் அடிக்குற கூத்தைத்தான் பாருங்கோ நான் இப்பிடிச் சொல்லுறன். விற்பனையை அதிகரிக்க அவைக்கு வழிதெரியாட்டில், அவையின்ர விளையாட்டு இப்பெல்லாம் வேறவிதமாய்க் கிடக்கு. புலம்பெயர் நாடுகளில, தமிழர் உபயோகிக்குற சாப்பாட்டுச் சாமானுகளைக் கொஞ்சம் உத்துப் பாருங்கோ. விசயம் விளங்கும்.

கிட்டடில நல்லெண்ணெய் வாங்குவமெண்டு ஒரு தமிழ்க்கடைக்குப் போயிருந்தன். முந்தி எண்டால் நல்லெண்ணெய் ஏதும் ஊருகளின்ர பெயர்லதானே வாறது. ஆனைக்கோட்டை எண்டு வரும், இல்லாட்டில் யாழ்ப்பாண நல்லெண்ணெய் எண்டு வரும். இப்பெல்லாம் உந்தப்பெயருகளில நல்லெண்ணையைக்காணக் கிடைக்குதில்லை. இப்ப பெயர் என்ன தெரியுமே...? "பாலச்சந்திரன்" நல்லெண்ணெய். எட இழவு விழுந்து போவாங்கள், முள்ளிவாய்க்கால் மண்ணில, சிங்களவன் அந்தப்பெடியனைக் கொடூரமாய்க் கொலைசெய்துபோட்டான், நாங்கள் அந்தச் சின்னனுக்காக ஏதும் சிலையைக் கட்டினாக்கூடப் பரவாயில்லை. அந்தப்பெடின்ர பெயரில் நல்லெண்ணெய் யாவாரமே ஆரம்பிக்குறது...? தலைவரின்ரமகன் எண்ட பெருமை இல்லாமல் சாதாரணமாய்ச் சனத்தோட சனமாய்ப் போய்ச் சிங்களவனிட்ட சரணடைஞ்சு, அந்தப் பிஞ்சு துடிக்கத் துடிக்கச் செத்ததுக்கு, உதே மரியாதை..? இல்லைத் தெரியாமத்தான் கேக்குறன், உங்கட பிள்ளையள் செத்துக்கித்துப் போனால் அந்திரட்டி, தொடக்குக் கழிவெண்டு தடல்புடலா ஏதோ ஒரு நாட்டினர சனாதிபதி செத்த கணக்குல செய்யுறியள். பரவாயில்லை உங்கட மனஅமைதிக்குச் செய்யுறதைக் குற்றமாய்ச் சொல்லேல்லை. ஆனால் தமிழீழ விடுதலைக்காகத் தன்னை முழுமையா அர்ப்பணிச்சு, தன்ர குடும்பத்தையே முழுமையாய்க் குடுத்த மனிசனுக்கு, நல்லெண்ணெய் வியாபாரத்தாலையே நன்றிக்கடன் செலுத்தப்போறியள்..? உங்கட கோதாரித் தனத்தால் அடுத்து வாற தமிழ்ச் சந்ததி, பாலச்சந்திரன் எண்டால் யாரோ பெரிய நல்லெண்ணெய் வியாபாரியாக்கும் எண்டுதான் நினைக்கப்போகுது.

விசயம் உதோட நிக்கேல்லைப் பாருங்கோ, "துவாரகா" எண்ட பெயரில இப்ப சிலநாடுகளில உள்ள தமிழ்க்கடையளில நொறுக்குத்தீனியும் விக்குதாம், விக்குறவன் விக்குறான் எண்டா, தின்னுறவனுக்கு எப்பிடித்தான் தொண்டைக்குள்ளால போகுதோ தெரியேல்லை. சிங்களவனின்ர இறக்குமதியை வாங்காதேங்கோ, வாங்காதேங்கோ எண்டு காதுகிழியக் கத்தியும் எவனும் கேக்குறமாதிரி இல்லை. இப்ப சிங்களவன், கொழும்பில இருந்து, எங்கட மண்ணின்ர அடையாளங்களோடயும், எங்கட விடுதலைக்காக விழுந்த ஆக்களின்ர பெயரிலையும் சாமான் அடிச்சு நமக்கே விக்குறான். ஏனெண்டால், எந்தக் கழிவை எண்டாலும் பையில அடைச்சுப் போட்டு, தூய தமிழ்ப் பெயர் வைச்சு

வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டால், தமிழன் நல்லா வாங்கித்தின்னுவான் எண்டு சிங்களவனுக்கு நல்லாத் தெரியும். இஸ்ரேல்காரன் விக்குற பேரீச்சம்பழத்தை , பாலஸ்தீன நாட்டுக்காரன் சாப்பிடுறதில்லை. இரண்டாம் உலகப்போரில, தன்ர அழிவுக்குக் காரணமாயிருந்த அமெரிக்கன் விக்குற கோதுமை மாவை, ஜப்பான் மக்கள் சாப்பிடுறதில்லை. பிரிட்டிஷ் நாட்டுத் தயாரிப்பு எதையும், ஆர்ஜென்ரீனா மக்கள் வாங்குறதில்லை. ஆனால், சிங்களவன் எவ்வளவு செய்தாலும், அவன் விக்குற கோமணத்தைத்தான் தமிழராகிய நாங்கள் எப்பவும் வாங்கிக் கட்டுவம். இதைத்தான் தன்மானத்தின்ர அடையாளம் எண்டு சொல்லுறதோ...?!, தெரிஞ்சால் சொல்லுங்கோவனப்பா..!

கிட்டடில நடந்த கவனயீர்ப்பு ஊர்வலம் ஒண்டில, ஒரு பெடியன் துண்டுப்பிரசுரம் ஒண்டை எல்லாருக்கும் நீட்டிச்சுது. சரியெண்டு நானும் வாங்கினன். முன்பக்கத்தில தேசியத்தலைவரின்ர படத்தை நடுவில போட்டு அதைச்சுத்திவர வாகை,சிறுத்தை, செண்பகம் எண்டு எல்லாப்படமும் போட்டு, வீர வசனங்களும் எழுதிக்கிடந்திச்சுது. ஆகா, இந்தக்காலத்தில இப்படி ஒரு பெடியனோ எண்டுட்டு, அப்படியே பின்பக்கம் திருப்பினன். பின்னுக்குப் பார்த்தால், ஒரு அச்சகத்தின்ர பெயர், முகவரி எல்லாம் போட்டு அச்சடிக்கிறதுக்கான விலை விபரமும் எழுதி விளம்பரம் போட்டுக் கிடக்குது. எப்பிடி விளையாட்டெண்டு பார்த்தியளோ..? எங்கட ஆக்களின்ர கேவலமான புத்தி, எப்படி எல்லாம் வேலை செய்யுது பாருங்கோவன். தனி விளம்பரம் எண்டால் எவனும் கவனிக்கமாட்டான் எண்டுட்டு, தேசியச் சின்னங்களோட அழகான விளம்பரம். திருப்பிக் கேட்டால் என்ன விளக்கம் தெரியுமே...? தலைவரும், அடையாளங்களும் எல்லாருக்கும் சொந்தமாம். அடியடா சக்கை எண்டானாம்...! உண்மைதான், தலைவரும் அடையாளங்களும் எல்லாத்தமிழனுக்கும் சொந்தம் தான் பாருங்கோ. ஆனால் அதைவைச்சு விளம்பரம் செய்யுறது படுகேவலம். தயவு செய்து மதிப்புக்குரிய அடையாளங்களை, விற்பனைப் பொருளாக்கிக் கேவலப்படுத்தாதேங்கோ. போற வழியில புண்ணியம் கிடைக்கும் கண்டியளோ..!!! எங்கட விடுதலைக்காக, புலம்பெயர்ந்த நாடுகளில நடக்குற ஒவ்வொரு முக்கியமான கவனயீர்ப்பு ஊர்வலங்களிலயும், நடக்குற கொடுமையை எத்தனை பேர் பார்த்தியளோ தெரியாது. ஆனால் நான் பார்த்திருக்கிறன். ஊர்வலம் தொடங்கேக்க, எல்லாரின்ர கையிலயும் தேசியத்தலைவரின்ர படம் இருக்கும். பார்த்தால் அப்பிடியே புல்லரிச்சு, புளங்காகிதமா இருக்கும். ஆனால் ஊர்வலம் முடியேக்க, தலைவரின்ர படம் எல்லா இடத்திலையும், கையுக்கையும் காலுக்கையும் கிடந்து கவனிப்பார் இல்லாமல் இழுபடும். நடைபாதையில கிடக்குற படத்துக்குமேலால, கொஞ்சம் கூடக் கூச்சம் இல்லாமல் எங்கட ஆக்கள் நடந்து போறதைக்கண்டுட்டும் பேசாமல் இருக்கிற ஆக்களையும் நான் பார்த்திருக்கிறன். எப்படித்தான் மனம்வருகுதோ தெரியேல்லை. ஊர்வலங்களில திரியுற கண்காணிப்பளர்கள், அறக்கப் பறக்க அங்கயும் இங்கயும் நடந்து திரிவினம். ஆனால் உதுகளைக் கவனியாயினம். அதோட இன்னுமொண்டு என்னெண்டால் ஏதோ அமெரிக்கன்காரன் மாதிரி, தமிழீழத்தேசியக்கொடியைக் கழுத்தில கட்டிக்கொண்டு திரியுற ஆக்களைக் கண்டிருக்கிறியளே...? ஒவ்வொரு மாவீரரின்ர குருதியிலையும் உருவான கொடியை, உப்படிப் பாவிக்குறது நல்லதில்லைப் பாருங்கோ. உது சரிப்பட்டு வராது கண்டியளோ. தமிழரின்ர ஒவ்வொரு அடையாளத்துக்குப் பின்னாலையும், ஒவ்வொரு வரலாறு இருக்குதுங்கோ. அதை மறந்து, அந்த அடையாளங்களை உதாசீனம் பண்ணகூடாது பாருங்கோ.

அது விளையாட்டாயிருந்தாலும் சரி, வியாபாரமாயிருந்தாலும் சரி...!

கல்லறை மூடியும் கதவைத் திறக்குமே
சில்லறை ஓசைகள் கேட்டுப்புட்டா
வீரம் மானமும் பறந்து போகுமே
பச்சை நோட்டைத்தான் பார்த்துப்புட்டா..!.
அப்ப வரட்டே..!!!

**Tamilmedia24.com**

*வாகனங்கள், வீடுகள், காணிகள், வியாபார ஸ்தாபனங்கள்*
*வாங்குதல், விற்றல் , வாடகைக்கு விடுதல்.......*
*மரண அறிவித்தல்கள், அஞ்சலிகள் போன்றவற்றை*

**இலவசமாக விளம்பரம் செய்திட ...**




யாழ்ப்பாணி எனப் பிற பிரதேசத்தவரால் அழைக்கப் படும் வடபகுதித் தமிழருக்கும் இராவணனுக்கும் பல ஒற்றுமைகள் இருப்பது காணக் கூடியதாக உள்ளது என்பதை ஆழமாகச் சிந்திப்பவர்களுக்குப் புரிய வரும். தமிழரின் அரசியல் தலைமை ஆறுமுகநாவலர் காலம் முதலே யாழ்ப்பாணத்தவரிடம் இருக்க நேர்ந்த காரணத்தாலும் வேறும் சில தனிப்பட்ட காய்தல் உவத்தல் காரணமாக வடபகுதித் தமிழரை யாழ்பாண மேட்டுக்குடி மேலாதிக்கம் அல்லது யாழ்ப்பாணி என ஏளனத்தோடு பார்க்கப்படும் நிலைமை இருப்பதை யாரும் மறுக்க முடியாது.

இதே விமர்சனம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதும் வைக்கப்பட்டு அதன் அழிவுக்குக் காரணமாக யாழ்ப்பாணி என்ற பிரதேசத் துவேசமும் ஒரு முக்கியமான காரணி என்பது பலராலும் வெளியே சொல்லப்படாத ஆனால் கருதப்படும் உண்மைகளில் இதுவும் ஒன்றாகும்.

பேசாப் பொருளாக இருந்த இப்பொருள் பேசு பொருளாகப் பார்ப்பதன் மூலமே எமது இன முரண்களை அறிந்து எம் இனத்தின் சீர்கேட்டுக்கு முடிவு தேட முடியும். இப்படியான தலைப்பில் கட்டுரை அமைவதைப் பலரும் கண்டிக்க முன்வருவர் எனத் தெரிந்தே இக்கட்டுரை வருகிறது.

இன்று வடக்கு கிழக்கு மாகாணங்களின் பிரிப்பு என்பது சிங்களத்தின் இன மேலாதிக்க வெறியின் வெளிப்பாடு என்பதற்கும் அப்பால் கிழக்கில் உள்ள இந்து முஸ்லீம் அரசியல் வாதிகளின் அன்றாட அரசியல் தேவையாகவும் மாறி உள்ளது. இதனைச் சீர் செய்யும் நிலையில் எந்த ஒரு அரசியல் கட்சியும் இல்லை. சீர் செய்ய ஆத்மார்த்தமான முயற்சியில் இறங்கவும் முன்வரார்.

எனவே இது ஒரு சமுதாய மக்கள் சார்ந்த பிரச்சனையாக இருப்பதாலும் சமூக அமைப்புகளால் மட்டுமே இதனை நேர்மையாக அணுகிச் சீர்ப்படுத்த முடியும். 1950களில் அகில இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி வடக்கு கிழக்கு மக்களின் அரசியல் சமூக மொழி மத வேறுபாடுகளுக்கும் அப்பால் நின்று தமிழ் மக்களின் அரசியல் தலைமையை முன்னெடுத்தது. அதன் மூலமே அது சிங்கள இனவெறி இனமேலாதிக்க அரசியலுக்கு வலுவான மாற்று அரசியல் கட்சியாக உருவாக முடிந்தது.

கிழக்கிலே எம். ஏஸ்.காரியப்பர், மௌசூர் மௌலானா போன்ற இஸ்லாமிய அரசியல் தலைவர்களுக்கும் செல்லையா இராசதுரை, இராசமாணிக்கம், இராச வரோதயம், சாம் தம்பிமுத்து போன்ற பல இந்து கிருஸ்தவ தலைவர்களின் அரசியல் வாழ்வுக்கும் அக்கட்சி அடித்தளம் இட்டுக் கொடுத்தது. அந்தக் கட்சியின் தலைமைப் பதவிகூட வடக்குடன் நின்றுவிடாது கிழக்கே இராசமாணிக்கம், இராசவரோதயம் போன்றவர்களின் கீழ் இருந்துள்ளது.

வடக்கே இந்துக்கள் பெரும்பான்மையாக இருந்த காங்கேசன்துறை, நல்லூர், யாழ்ப்பாணத் தொகுதிகளிலும் தந்தை செல்வா, டாக்டர்.ஈ.எம்.வீ.நாகநாதன், அல்பிரட் துரையப்பா, சீ.எக்ஸ். மாட்டின் போன்ற கிருஸ்தவர்களே தொடர்ச்சியாகப் பல முறை மக்களின் பிரதிநிதிகளாகத் தெரிவாகித் திகழ்ந்துள்ளனர்.

விடுதலைப் போராட்டக் காலத்திலும் கூட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இரண்டாம் நிலைத் தளபதியாகக் கிழக்கைச் சேர்ந்த கருணா அம்மான் என அறியப்பட்ட வினாயகமூர்த்தி முரளீதரன் இருந்துள்ளார். ஆனால் இத்தனைக்குப் பின்னரும் கிழக்கைச் சேர்ந்த பெரும்பாலான இதே தலைவர்களே வடக்குக்கு எதிராக மிகக் கடுமையான விமர்சனங்களையும் கண்டனங்களையும் வைத்து மகிழ்ந்தனர். இன்றும் தமிழர் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான திரு.இரா.சம்பந்தன் கிழக்கே திருகோணமலையைச் சேர்ந்தவரே.

கிழக்கின் மாகாண சபை முதலமைச்சராகப் பதவி வகிக்கும் பிள்ளையான் எனும் சந்திரகாந்தன் கிழக்கு வடக்கோடு மீண்டும் இணையக் கூடாது இரண்டு சபைகள் என்றால் இரட்டிப்புப் பதவி-களும் வாய்ப்புகளும் என மிகக் குறுகிய மனப்பான்மை கொண்ட வாதத்தை வைத்து தமிழர் தாயகத்தைச் சிங்களம் கூறுபோடும் கொடுமைக்குத் துணைபோகிறார். இவருடைய வாதம் ஒரு பெண்ணுக்கு இரண்டு புருஷர்கள் இருந்தால் இரட்டிப்பு வருமானமும் மகிழ்ச்சியும் என்பது போன்றே மோசமானதாக உள்ளது.

வடக்கிலும் டக்ளஸ் போன்றவர்களின் மனோ-நிலையும் செயற்பாடும் இத்தகைய அரசியல் சிந்தனை கொண்டே உள்ளது. இவர்களின் அரசி-யல் அரசு ஆதரவு சார்ந்து காணப்படுவதால் அவர்களின் செயற்பாடுகள் தடையின்றித் தமிழ்ப் பேசும் மக்களின் தாயகம் தேசியம் தன்னாட்சி உரிமை என்பவற்றின் அழிவுக்கு உதவுகின்றன.

இவர்களின் வக்கிர அரசியலால் தமிழ் பேசும் மக்களின் அரசியல் புரிதலும் ஆதரவும் காலப்போக்கில் அடியோடு அற்றுப் போய்விடும் ஆபத்தே உள்ளது. சிங்கள அரசின் தந்திரமும் தன்னிடம் இல்லாத அரசியல் தீர்வு என ஒன்றைக் கூறி காலத்தைக் கடத்தி ஆறப்போட்டு நாறடிக்கும் வேலை சுலபமாக நடந்து விடுகிறது.

யாழ்ப்பாணி என்ற பட்டப் பேரால் வடக்குத் தமி-ழரை இழிவு படுத்தி மேலும் பிரதேசப் பிரிவினை-யை ஊக்கப்படுத்தப் பல பகுத்தறிவு வாதிகளும், முற்போக்குச் சமூகச் சிந்தனையாளரும், கட்சி அரசியல் பொதுவுடமை வாதிகளும் இன்றும் நம்மிடையே காணப்படுவது கவலைக்கு உரி-யதே. எமது இனம் இதுபோன்ற பல நூறு பிரிவி-னைச் செயற்பாடுகளால் சிங்கள ஆட்சியாளரின் இன அழிப்பை வெற்றி கொள்ள முடியாது செத்துக் கொண்டிருக்கிறது.

சிங்கள அரசு, இஸ்ரவேலின் மோசாட், இந்தியாவின் றோ உளவு அமைப்புகளின் சதியால் வடக்கும் கிழக்கும், இந்து, முஸ்லீம், கிருஸ்தவ, மலையகத் தமிழ் பேசும் மக்களும் என்றுமே இணைய முடியாத படிக்குப் பிரிந்து போய் உள்ள நிலையே உள்ளது.

எப்படி இராவணனின் அழிவில் அவன் அரசும் இலங்கையும் அதன் மக்களும் கடலால் அள்ளுண்டு பெரும் அழிவைக் காண நேர்ந்ததோ அத்தகைய அழிவைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் அழிவால் ஈழமும் ஈழத் தமிழ் பேசும் மக்களும் அடைந்து விட்டதை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. இதனை இன்று நம்மிடையே வாழும் விபீடணன்களும் கும்பகர்ணன்களும் அனுமான்களும் கூட அறிவர்.

ஒரே நேரத்தில் பத்து விடயங்களைச் சிந்தித்துச் செயலாற்றும் திறன் படைத்தவன் இராவணன் என்பது இலக்கியம் கூறும் சிறப்பு. அவதானிப்பதில் அட்டாவதானி, தசாவதானி என்ற அறிவு சார் தகமைகள் என்பன தமிழ் கூறும் நல்லுலகம் போற்றும் சிறப்புகள். இத்தகைய சிறப்பினை அறிந்திராத ஆரிய இனம் இராவணனின் இச்சிறந்த குணத்தை மூடத்தனமாகப் பத்துத் தலைகள் கொண்ட அரக்கனாக வருணித்துக் காவியம் படைத்தது.

அப்படியான திறமை கொண்டவனை அழித்துவிட விபீடணன் என்ற அவன் தம்பியின் துரோகத்தால் மட்டுமே முடிந்தது. அவனைப் போன்றே தமி-ழீழ விடுதலைப் புலிகளின் தலைமையும் தனது சிறந்த சிந்தனைச் செயலாற்றல்கள் மூலம் உலகம் போற்றும் படியான திறமைகளைக் கொண்டிருந்த போதும் எம் இனம் இப் பேரழி-வைக் கண்டுள்ளது.

எப்படி ஆரியமும் கம்பனும் கம்பவாரிகள் போன்ற சுயநலக்காரர் இராவணனை அரக்கன் என அழிக்க உதவினரோ அது போன்றே தமி-ழீழ விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என்ற பொய்ப் பிரசாரத்தின் மூலம் வஞ்சப் போர் செய்து சுய நலமிகள் அழித்தனர்.

தமிழீழ தேசம் ஒன்றே தன் தணியாத தா-கமாகக் கொண்டு போராடி மடிந்த புலிகளை மனிதப் படுகொலைக் குற்றங்கள் போன்ற படு-பாதகக் குற்றச் சாட்டுகளை எதிரியுடன் சேர்ந்து எம்மினத் துரோகிகளும் சுமத்தி வருகின்றனர். எம்மிடையே இருந்து எமது தலைவர்கள் போன்றே நடித்து எதிரிக்குப் பாவ மன்னிப்புக் கொடுக்கும் விபீடணன்களும் அனுமான்களும் உலகில் தமிழினத் தலைவர்களாக வேடமிட்டு உலா வருவது தற்கொலைக்குச் சமமான இனத் துரோகமாகும்.

ஈழத் தமிழ் மக்கள் இந்தத் துரோகக் கும்பலுக்கு எதிராக எதுவும் பேசவோ செய்யவோ முடியாதவர்களாக உள்ளனர். எனவே உலகத் தமிழரும் புலம் பெயர் தமிழரும் வடக்கு கிழக்கு மலையக மக்களிடையே மத பேதங்களைக் கடந்த அரசியல் விழிப்பை ஏற்படுத்தி எந்த வி-தமான பிரதேச வாதமோ பிரிவினை வாதமோ தலையெடுக்காத வகையில் மக்கள் இயக்கம் ஒன்றினை உருவாக்க வேண்டிய கட்டாயத்தை உணர்ந்து செயற்பட வேண்டுகிறோம்.

Importas
Cash & Carry

Subash Purity of Taste
KFL Kings
Niru BRAND
SURYAA
Maliban
Inspired by goodness...
ELAKKIA
PG tips
TRS ASIAS FINEST FOODS
PATAK'S Original
Rubicon
RENUTÉ

எமது வாடிக்கையாளர்களுக்கு
இனிய சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

SOLO IMPORTERS & DISTRIBUTOR FOR
**SUBASH, KINGS, NIRU, SURYAA, MALIBAN, ELAKKIA AND RUBICON**

**OVER 20 YEARS LEADER IN SWISS ETHNIC MARKET**

**BIGGEST ASIAN SHOP IN ZÜRICH**

***Importas Cash & Carry***
***(80m away From Letzi Park)***
***Baslerstrasse 102***
***8048 Zürich***

***Tel: +41 43 343 03 55***
***Fax:+41 43 343 03 56***
***Email: info@importas.ch***
***Web: www.importas.ch***

# அமெரிக்காவின் பிரேரணையும் த.தே.கூட்டமைப்பின் நிலையும்!




த. பாலன்

இலங்கை தொடர்பில் ஜெனீவாவில் அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட பிரேரணை தமிழ் மக்களுக்கு வெற்றியையா? தோல்வியையா? தந்தித்திருக்கின்றதென்ற கேள்விக்கு இன்னும் பதில் கிட்டியிருக்கவில்லை. ஆனாலும் பிரேரணை வெற்றி பெற்றதற்குத் தாங்கள் தான் காரணமென உரிமை கோர கூட்டமைப்பின் சுமந்திரன் தவறவில்லை. ஆனாலும் அவருக்கு இன்னமும் செருப்பு வீச்சோ கல் வீச்சோ கிட்டியிருக்கவில்லை. ஏனெனில் அவர் மக்களை நேரடியாக இன்னும் சந்தித்திராத அரசியல்வாதியாகவே இருந்து வருகின்றார். பிரேரணை தோல்வி கண்டிருந்தால் பலரையும் சில காலம் தேடித்திரிய வேண்டியிருந்திருக்கும்.

ஜெனீவாவிற்கு அவசரமாகச் சென்று திரும்பிய கூட்டமைப்பின் அந்தப் பாராளுமன்ற உறுப்பினர் மிகவும் நம்பிக்கையுடன் கூறுகின்றார், இனிமேல் நாங்கள் அஞ்சத்தேவையில்லை. புலம் பெயர் தேசத்து இளைய தலைமுறையினரே போதும். இலங்கை அரசின் உயர் மட்ட இராஜதந்திர நகர்வுகளுக்கு ஈடாக அவர்கள் பணியாற்றினார்கள். அவர்களுக்கு மொழிப் பிரச்சினைகளோ தயக்கங்களோ இருந்திருக்கவில்லை. போதிய உலகறிவு அவர்களிடமிருக்கிறது. அவர்களே அனைத்தையும் அடுத்த கட்டத்திற்கு நகர்த்திச் செல்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கின்றது. தலைவர் பிரபாகரன் எவ்வாறு புலம்பெயர் தேசத்து இளம் சந்ததியை நம்பியிருந்தாரென்பது அப்பட்டமாக இப்போது புரிகின்றதென்றார் அவர். இதே கருத்தை தமிழரசுக் கட்சியின் மூத்த பிரமுகரான சீ.வி.கே. சிவஞானமும் வலியுறுத்தியுள்ளார்.

யாழ். மாவட்ட அரச சார்பற்ற அமைப்புக்களது இணைய தலைவரான அவரும் நோர்வே மற்றும் டென்மார்க் நாடுகளுக்கு இருவார சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு திரும்பியுள்ளார். இவ்விரு நாடுகளிலும் செயற்பட்டு வரும் ஈழத் தமிழர் அமைப்புக்களது பிரதிநிதிகளை அவர் சந்தித்துப் பேசியிருந்ததுடன் அவர்களிடையே உரையாற்றியுமிருந்தார்.

இந்தியாவின் நிர்ப்பந்தத்தின் பேரில் ஜெனீவா செல்வதை இறுதி நேரத்தில் கூட்டமைப்பு தவிர்த்திருந்தது. அத்தகைய சூழலில் அமெரிக்கத்தரப்பிற்கு ஒத்துழைப்பை முழுமையாக வழங்கியிருந்தது. புலம் பெயர் தமிழர் அமைப்புக்கள் கொள்கை ரீதியாக அவற்றினுள் பரவலாக ஓரளவிற்குப் பொதுத் தன்மை இல்லாதிருந்த போதும் பொது விடயமொன்றிற்காக அவர்கள் அனைவரும் இணைந்து கொள்ளத் தயாராகவேயுள்ளனர். அவ்வகையில் தமக்குள் கலந்து பேசி நிகழ்ச்சி நிரலைத் தீர்மானித்து சந்திப்புக்களை நடத்தவும் அவர்களால் முடிந்துள்ளது.

ஆனால் தாயகத்தில் தமிழ் மக்களுக்காகவே செயற்படுவதாகக்கூறிக் கொள்ளும் கட்சிகளால் பொது விடயமொன்றிற்கேனும் இணங்கிப்போக முடியாத மனோ நிலை கேள்வியையே எழுப்புகின்றது. பரஸ்பரம் ஆளாளுக்குக் குற்றஞ்சுமத்துவதிலும் பிழை கண்டு பிடிப்பதிலும் அரசியலை நடத்திச்செல்கின்றனர். இன்னும் சிலருக்கு அடுத்த தேர்தலில் ஆசனங்களைப் பெற்றுக் கொள்வது பற்றிய கவனங்களே மையமாகவுள்ளன. அதனால் அவர்கள் அனைத்திற்கும் மௌனம் காக்கின்றனர்.

ஜெனீவா விவகாரம் இலங்கைக்கு வெளியே தமிழர்கள் வாழ்கின்ற தேசங்களெங்கும் பெரும் உணர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது. குறிப்பாக நீண்டதொரு இடைவெளியின் பின்னர் தமிழகத்தினில் ஆளும் அ.தி.மு.க. முதல் தி.மு.க. வரை ஒரே கருத்தை இம்முறை வெளிப்படுத்தி நின்றன. முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் போது எதுவுமே தெரியாதது போன்று மௌனம் காத்த இந்திய ஊடகங்களுள் கணிசமானவை இப்போது வாய் திறந்துள்ளன.

குறிப்பாகத் தமிழகத்தை மையமாகக் கொண்டு இயங்கும் தொலைக்காட்சி நிலையங்கள் இம்முறை ஈழத்தமிழர் தொடர்பான விடயத்தில் மௌனம் கலைந்து கடமைகளைச் செய்தன. தமிழக மக்களைக் குறிப்பாக ஈழத்தமிழர் ஆதரவு அமைப்புக்களை மீண்டும் உசுப்பேத்திவிட அவை உதவியுள்ளன.

ஜெனீவா விவகாரத்தில் முக்கிய தாக்கத்தைச் செலுத்தவல்லதாக சனல் 4 தொலைக்காட்சியின் இரண்டாவது தொகுப்பான "தண்டிக்கப்படாத போர் குற்றங்கள்" வீடியோ ஆவணமும் வெளி வந்துள்ளது. ஏற்கனவே சனல் 4 இன் முதலாவது ஆவணப் படம் உலகை உலுக்கிப் போட்டிருந்தது. ஐ.நா. மனித உரிமைகள் சபை வரை சென்று, அனைவரது இதயங்களிலும் ஓர் முறை ஓங்கி அறைந்தேயிருந்தது. இப்போது விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 12 வயது மகன் பாலச் சந்திரனின் மரணம், போர் நடவடிக்கைகளுடன் எந்தவித தொடர்புமற்ற சிறார்களது கோர மரணங்களென நெஞ்சங்களை உறைய வைத்திருக்கின்றது.

விடுதலைப் புலிகள் அமைப்பு, பலம் வாய்ந்த போராட்ட சக்தியாக இருந்த காலப்பகுதிகளில் சிறுவர் போராளிகள் பற்றி வாய் கிழியக் கத்தியவர்களிடம் பதிலை எதிர்பார்த்த சனல் - 4 இன் இரண்டாவது தொகுப்பு விடை தேடி நிற்கின்றது. சிறுவர் போராளிகள் தொடர்பில் காத்திரமாக செயற்பட்ட யுனிசெவ் நிறுவனம் மற்றும் பல்வேறு சிறுவர் நலன் சார்ந்த அமைப்புக்கள் இப்போது காட்டிவரும் மௌனம் அவர்களது நடு நிலைமையான செயற்பாடுகளைப் பற்றி சந்தேகம் கொள்ள வைத்துள்ளது.

எது எவ்வாறாக இருப்பினும் ஜெனீவா பிரேரணையூடாக சர்வதேசம் இலங்கை விவகாரத்தில் தனது மூக்கை நுழைத்துக் கொண்டுவிட்டது என்பது உண்மையாகும். விரும்பியோ விரும்பாமலோ இலங்கை அரசிற்கு அடுத்துவரும் நாட்களில் தர்ம சங்கடங்களை ஏற்படுத்தப் போகும் விவகாரமாக இதுவே இருக்கப் போகின்றது. எமது பிரச்சினைகளை நாமே பேசித்தீர்த்துக் கொள்வோமென்ற நாட்டின் தலைவரதும் அவரது சக பாடிகளதும் உரைகள் இனி நாட்டு மக்கள் மத்தியிலும் சர்வதேச மட்டத்திலும் எடுபடமாட்டாதென்பதே உண்மையாகும்.

ஆனாலும் இந்த ஜெனீவா விவகாரத்தால் தமிழ் மக்களுக்குக் கிட்டிய பலாபலன்களெனச் சொல்லிக் கொள்ளத்தக்கதாக எதுவுமே இருக்கப்போவதில்லை. இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் மொழி ரீதியாகத் தனித்துவமான இனமென அடையாளப்படுத்தி எவரும் இருக்கக்கூடாதென்பதும் கற்றுக் கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் ஒன்றாகும். ஒட்டு மொத்த சிறுபான்மை இனங்களின் இருப்பினை கேள்விக் குறியாக்குவதாக இவ்விடயம் அமைந்திருக்கின்றது.

இதனால் இலங்கை அரசிற்குச் சொல்லிக் கொள்ளத்தக்கதாக எந்தவொரு பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. தனக்குத் தானே வெள்ளையடித்துக் கொள்ள இலங்கை அரசு உருவாக்கிக் கொண்ட நல்லிணக்க ஆணைக்குழுவில் என்ன விடயம் சொல்லப்பட்டிருக்குமென்பது அனைவருக்குமே புரியும். அதில் எஞ்சியிருத்தவை கூட தற்போது அமெரிக்கா மற்றும் இந்தியாவினால் சமரசமெ-னும் பேரில் இல்லாதாக்கப்பட்டுள்ளது. ஆனால் இப்போது இலங்கை அரசோ இறையாண்மை பற்றிக் கதைத்து நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளையே மறுதலிக்கத் தொடங்கியுள்ளது.

இலங்கை அரசைப் பொறுத்தவரையில் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதென்பது, சாதாரணமான விடயம். இதனைக் காரணம் காட்டி, தம்மீது ஏதாவது திணிக்கப்பட்டு விடக்கூடாது என்பதற்காக அது ஜெனிவாவில் முயற்சித்தது. ஆனாலும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவது என்ற பெயரில் ஐ.நா., மனித உரிமைகள் அமைப்பின் பிரதிநிதிகள் இலங்கைக்குள் காலடி எடுத்து வைத்தால் நிலைமை தர்மசங்கடத்துக்குள்ளாகுமென்பதை அரசு நன்கு புரிந்து கொண்டேயுள்ளது. இனி அத்தகைய பொறிமுறைகளுக்குள் சிக்காதிருக்க அது போராடப்போகின்றது.

இத்தகைய சூழலில் தமிழகத்தில் ஈழத் தமிழர் விடயத்தில் முன்னின்று செயற்பட்டு வரும் மே 17 இயக்கம் முதல் பல்வேறு அரசியல் தரப்புக்கள் வரை இலங்கையில் தமிழர் தாயகப் பகுதிகளில் சர்வஜன வாக்கெடுப்பொன்று நடத்தப்பட வேண்டுமெனக் குரல் கொடுக்கத் தொடங்கியுள்ளன. அது சுதந்திர தமிழீழமொன்றிற்கானதாக இருக்கவேண்டுமென அமைந்துள்ளது.இதனையே ஓபாமாவிற்கான தமிழர் அமைப்பும் றொபேட் ஓ பிளேக்கிடமும் கலாரியிடமும் கேட்டுள்ளன. பலவற்றிற்கு காலம் தான் பதில் சொல்லப்போகின்றது.

புதிய
லைக்காமொபைல்
ப்ள்ஸ்
சிம்முடன்!

# Lycamobile

சுவிட்சர்லாந்து

CHF 100.- வரை இலவசம்!

## சர்வதேச அழைப்புக்களுக்கு இணைப்புக் கட்டணம் இல்லை

இந்தியா

கனடா

அமெரிக்கா

சிங்கப்பூர்

வீட்டுத் தொலைபேசி + கைத் தொலைபேசி

CHF 0.01 /min

Lycamobile ப்ள்ஸ் இல் இருந்து Lycamobile ப்ள்ஸ் க்கு

CHF 0* /min



| | வீட்டுத் தொலைபேசி | கைத் தொலைபேசி |
|---|---|---|
| இலங்கை | CHF 0.09 /min | CHF 0.12 /min |
| ஐரோப்பா | CHF 0.01 /min | |

ஐரோப்பா: CHF 0.01 /min வீட்டுத் தொலைபேசி

*அனைத்து அழைப்புக்களும் நிமிடக்கணக்கீட்டில் கட்டணம் அறவிடப்படும். லைக்காமொபைல் ப்ளஸ்ஸில் இருந்து லைக்காமொபைல் ப்ளஸ்க்கு ஒரு இணைப்புக்கு 19ரப்பனில் 30 நிமிடம் வரை உரையாடலாம். மேலதிகமாக வரும் ஒவ்வொரு நிமிடத்திற்கும் 19ரப் என்கிற அடிப்படையில் கட்டணம் அறவிடப்படும்.

*கட்டணங்கள் மாறுதலுக்குட்பட்டவை.

மேலதிக விபரங்களுக்கு

**www.lycamobile.ch** 077 900 01 22
044 555 23 23

Lyca mobile
Call the world for less

Lycamobile வாங்கக்கூடிய இடங்கள்:

SBB CFF FFS · Media Markt · Inter Discount · k kiosk · SWISS POST · coop · Fust · TELEFONCORNER · NAVILLE · Press&web · RELAY

ஈழவிடுதலைப் போராட்டத்தின் பதிவுகள், ஈழமண்ணில் சிங்கள அரசாங்கத்தினால் அழிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் புதிய தலைமுறைகளிற்கான பாடமாக, தமிழீழமண்ணில் நடைபெற்ற விடுதலைப்போரின் அத்தியாயங்களைப்பதிவுசெய்வதன் மூலம், இனிவரும் சமுதாயம் எமது நியாயப்பாடுகளை இலகுவாக விளங்கிக்கொள்ளும் என்ற நம்பிக்கையில் அகரம் இதழ் இவ்வரைவுச் சித்திரங்களை வெளியிடுகிறது..!

தொகுப்பு - திரு. ஆ. புலேந்திரன்




தொடர்-02

*தொடரும்...*




இலங்கைத் தமிழரின் பூர்வீக வரலாறு கூறுவது என்ன?
"தொடக்க கால எழுத்துகள் களிமண் பாத்திரங்களில் அவற்றின் உரிமையாளர்களின் பெயர்களாகவும் உள்ளன. ஆயினும் அவை ஆட்களின் பெயர்களாக அல்லாது அவற்றில் வைக்கப்படும் பொருட்களின் பெயர்களாகவும் இருக்கலாம் என்ற கோணத்திலும் படித்தறிய முயற்சிகள் மேற்கொள்ளப் படுகிறது. கி.மு.450 முன்னரே நகர வாழ்வும் விவசாயம் வர்த்தகம் என அனுராதபுர நகரம் இருந்துள்ளது என்றால் விஜயன் வருகையோடு உருவான சிங்களம் எமக்கு இத்தீவில் உரிமை இல்லை எனக் கூற நாம் எப்படி அனுமதிப்பது?"

ஐ.நா.பிரசுரம் தரும் அதிர்சித் தகவல்கள்:
ஐ.நா.வின் கல்வி சமூக கலாசார அமைப்பு (unesco) மார்ச் 1984ல் வெளியிட்ட கூரியர் (பிர-சுரம்) ஸ்ரீலங்கா தமிழரின் பூர்வீகம் பற்றிய பல அதிர்ச்சி தரும் உண்மைகளை வெளிப்படுத்தியது. தமிழரின் வரலாற்றில் மைல்கற்கள் என்ற தலைப்பில் அந்தப் பிரசுரம் பின் வரும் தகவல்களை தந்துள்ளது.

"சிந்து வெளி நாகரீகம்.
தமிழ் மக்கள் ஒரு பழைமையான மக்கள். அவர்களின் வரலாற்றின் தொடக்கம் இந்தியத் துணைக்கண்டத்தின் தெற்கு முனையில் உள்ள வளம் நிறைந்த மண் கண்டமான இன்று ஸ்ரீலங்கா எனப்படும் தீவு உள்ளடங்கலான பகுதியாகும். அந்தத் தீவின் தாவரங்கள், விலங்கு உயிர்கள் (யானைகள் இருப்பது உள்ளடங்கலாக) முன்னர் துணைக் கண்டத்துடன் தொடர்பு கொண்டு இருந்தது என்பதற்கான ஆதாரமாக உள்ளன. அது போன்றே இந்தியத் துணைக் கண்டத்தின் தென் கிழக்கில் உள்ள தனுஷ் கோடிக்கும் தீவின் வட மேற்கில் உள்ள மன்னாருக்கும் இடையே கடலடியில் மூழ்கி உள்ள மண் அணைப் பாலம் பற்றிய செய்மதிப் படங்களும் சாட்சியங்களாக உள்ளன.

சில ஆய்வாளர்கள் இந்தத் தீவு இந்தியத் துணைக் கண்டத்திலிருந்து கி.மு. 6000 முதல் கி.மு.3000 ஆண்டு காலப் பகுதியில் இன்று பாக்கு நீரிணை என்று அழைக்கப்படும் ஆழமற்ற ஒடுங்கிய நீரால் பிரிக்கப் பட்டது என முடிவு செய்துள்ளனர்.

பல தமிழர் தமது பூர்வீகத்தை கி.மு.6000 ஆண்டுகட்கு முன் சிந்து நதிப் பள்ளத்தாக்கில் உள்ள மொகஞ்சதாரோவில் வாழ்ந்த மக்களுடன் தொடர்பு படுத்துகின்றனர். எனினும் தமிழரதும் முற்காலத் தமிழரதும் வரலாறு பற்றிய வரன் முறையான ஆய்வு அவசிய தேவையாக உள்ளது. "திராவிடர்கள்", அவர்களின் சந்ததியினர் இன்றும் தென் இந்தியாவில் வாழ்கின்றனர். அவர்களே உலகில் முதன் முதலாக நகர அமைப்புகளை சிந்து நதிப் பள்ளத்தாக்கில் நீரப்பாசனத் திட்டங்களை அறிமுகம் செய்தும், மட்பாண்ட உற்பத்தியும் நன்கு திட்டமிடப்பட்ட ஆட்சி அமைப்பையும் உருவாக்கினர்". (Reader's Digest Great World Atlas, 1970).

திராவிடரின் பூர்வீகம் பற்றி அதிக அளவில் எழுதியவரான கிளைட் அகமத் வின்ரேர்ஸ் (Clyde Ahmad Winters,) பின்வருமாறு தெரிவித்தள்ளார்.

"அகழாய்வு மற்றும் மொழியியல் ஆதாரங்கள் சிந்து நதிப் பள்ளத்தாக்கில் இருந்து வட கிழக்கு ஆப்கானிஸ்தான் ஊடாகத் துருக்கிஸ்தான் வரை பரவிய ஹரப்ப கலாச்சாரத்தை தோற்றுவித்தவர்கள் திராவிடரே என்பதை சுட்டி நிற்கின்றன. ஹரப்பா நாகரிகம் கி.மு. 2600- 1700ல் இருந்துள்ளது. அதன் பரப்பளவு பழைய எகிப்திய அரசை விடவும் இருமடங்கு பெரியது. அத்துடன் மெசப்பொட்டேமியா, ஈரான் நாடுகளுடன் மட்டும் வர்த்தகத் தொடர்புகள் வைத்ததும்

அல்லாது மத்திய ஆசிய அரசுகளோடும் தீவிர வர்த்தக உறவுகளையும் கொண்டிருந்தது."

புதிய சாட்சியங்கள்.
உலகளாவிய அளவில் வரலாற்றுத் தளங்களை ஆய்வு செய்ய பிரட்போட் அகழாய்வு அறிவியல் திணைக்களம் 1991ல் இத்தாலியில் (Pompei) பொம்பேயிலும் இலங்கையில் அநுராதபுரத்திலும் தெரிவு செய்து ஆய்வுகளை மேற்கொண்டது. அதன் பொது இலக்காக புராதன காலத்தில் நகர வாழ்வு மாற்றம் எவ்வாறு ஏற்பட்டது என ஆய்வு செய்து அறிவதே ஆகும். இவை இரண்டு நகரங்களுமே நவீன கால நகரங்களை விட முற்றிலும் வேறுபட்டவை:, அவை முதன் முதலில் உருவானவை. சிக்கல் மிக்க சமூகங்களாக இருந்த மக்கள் எப்படி இறுக்கமான நகர வாழ்வியலுக்கு வந்தனர் என்பது பற்றிய முக்கிய கேள்விகளை எழுப்புகின்றன.

இலங்கை ஆய்வுகள் எப்படி எப்போது முதன் முதலில் நகர வாழ்வு அடையாளப் படுத்தக் கூடியதாக உள்ளது என்பதைக் கண்டறிவதாகவே அமைந்தது. கற்று அறிந்தோர் பலரின் கருத்துப்படி அநுராதபுரம் கி.மு.250 ல் வட இந்திய நகரங்களுடன் ஏற்பட்ட நேரடித் தொடர்புகள் காரணமாகத் தோற்றம் பெற்றன என்பதாக இருந்தது.

அந்த வட இந்திய நகரங்கள் கூட அதற்கும் 200 வருடங்களுக்கு முன்பாகவேதான் கங்கை நதிக் கரைகளில் தோற்றம் பெற்றிருந்தன. ஆனால் எடுக்கப்பட்ட கூட்டாய்வுகள் இந்தக் கருத்தை முறியடித்ததோடு அநுராதபுர நகரம் தோற்றம் பெற்ற காலம் கி.மு.400 என்பதற்கான சான்றுகளை வெளிப்படுத்தின.

இதன்மூலம் வட இந்தியாவில் நகரங்கள் தோன்றக் காரணமான ஏதுநிலைகள் ஒரு பிரதேச அளவில் ஆனதாகவே அனுமானிக்க வேண்டி இருந்தது. எனவே முதல் நகரத்துக்கான முற்காரணிகள் அல்லது அநுராதபுரத்தின் தோற்ற காலம் இப்போது இரும்பு உலோக காலத்துக்கு முன்பே தோன்றி விட்டதாக அகழாய்வு ஆதாரங்கள் நீண்டு காணப் படுகின்றன.

ஆய்வுக் குழுவின் நோக்கம் இலங்கை அரசின் அகழாய்வுத் திணைக் களத்துக்கு பழைய நகரத்தின் பரப்பளவை அடையாளப் படுத்தி அதனைத் தகுந்த முறையில் பாதுகாத்து நிர்வகிக்க உதவி வழங்குவதாகவே இருந்தது. அங்கே அண்மைக் காலமாக அதிகரித்து வரும் தனியார் குடியேற்றங்களின் ஆக்கிரமிப்பும் விவசாய நடவடிக்கைகளும் இத்தகைய தேவையை ஏற்படுத்தி இருந்தன. ஆறு வார காலமே இப்பணிக்கு ஒதுக்கப் பட்டிருந்ததால் அகழாய்வு நில அளவையோடு மட்டுப்படுத்த வேண்டியதாயிற்று.

பழைய நில வரை படங்களையும் கைவசம் உள்ள மேற்றரை (Topograph Maps) ஆய்வுப் படங்களையும் ஒப்பிட்டுச் சுற்றாடலில் உள்ள வயல் நிலங்களில் காணப் பட்ட தாழ்வு (Ground Depressions) நில வரை கோடுகளைக் கொண்டு பழைய அகழியைக் கண்டறிந்து அங்கே கைத் துறப்பணங்களால் நிலத்தைத் துளை போட்டு அவை அகழியின் அடிப் பகுதிதான் என உறுதிப் படுத்தினோம். சுற்றிலும் மண் அணை இருப்பதைக் கண்டு அவற்றை மூடி உள்ள பற்றைக் காடுகளை வெட்டி அவை வயல் நிலங்கள் வரை பரந்துள்ளதைக் கட்டைகள் நிறுவி அடையாளம் இட்டோம்.

துறப்பணத் துளைகள் மூலம் நகரைச் சுற்றிக் காணப் பட்ட அகழியின் அகலம் 40 மீட்டரும், ஆழம் 5 மீட்டரும் எனக்கண்டு அறிந்து உறுதிப் படுத்தப்பட்டது. அநுராதபுரம் அல்லது அனுராவின் நகரம் இலங்கையின் மிகப் பழைமையான தலைநகரம். கி.மு.437 முதல் கி.பி. 1017 வரை அது அரசர்களின் உறைவிடமாகவும் இருந்தது. அது ஒரு நகரம் மட்டும் அல்ல தென் கிழக்கு ஆசியாவில் உள்ள மிகப் பெரிய புத்த மதத் தலமாகவும் வருடந்தோறும் பல்லாயிரம் பௌத்த யாத்திரிகர்களும் உல்லாசப் பயணிகளும் வந்து போகும் இடமாகவும் உள்ளது.



அங்கே காடுகளுக்கு மத்தியில் 10 மீட்டர் உயரமான மண் திட்டு பழைய நகர அமைப்பின் மையப் பகுதியின் அடையாளமாகக் காணப்படுகிறது. அதனைச் சுற்றிலும் 30 சதுரக் கிலோ மீட்டருக்கும் அதிகமான பரப்பளவில் பௌத்த பள்ளிகளும் பாரிய பாசன நீர்க் குளங்களும் உள்ளன. அவற்றுக்கு மத்தியில் பிரமாண்டமான மண்ணாலும் செங் கற்களாலும் பௌத்த சின்னத்தின் மீது 80 மீட்டர் உயரம் வரை கட்டப்பட்ட 4 பௌத்த தூபிகள் தென்னை மரங்களும் வயல் வெளிகளும் சூழக் காணப் படுகின்றன. இவை அகழாய்வுகளின் அடிப்படையில் அனுராதபுரத்தின் தோற்றம் இரும்பு உலோக காலத்தைச் சேர்ந்தது எனவும், முதல் நகரம் இது என்பதற்கான ஆதாரங்களையும் கொண்டுள்ளது. இதனால் யுனெஸ்கோ உலகப் பாரம்பரிய தலமாக அனுாதபுரத்தை அடையாளப் படுத்திப் பாதுகாக்க வழிவகை செய்யப் பட்டது.


150 வருடங்களுக்கு மேலாகக் கல்விமான்கள் தென் கிழக்காசியாவில் எழுத்துகள் கி.மு. 250 அளவில் பாரசீகத்துடன் ஏற்பட்ட தொடர்பால் வடஇந்தியாவில் வளர்ச்சி பெற்றன எனக் கருதி வந்துள்ளனர். அப்படி உருவான எழுத்துக்கள் முதலில் அரசர்களுக்கும் பின்னர் வர்த்தகர்கள் மத்தியிலும் பயன் படுத்தப்பட்டன எனவும் கற்றறிந்தோர் நம்பினர். வடக்கில் நிகழ்ந்த வளர்ச்சி தெற்கே பரவி இலங்கையை 100 ஆண்டுகளின் பின்னர் அடைந்தது எனவும் ஊகிக்கப் பட்டது.

ஆயினும் அனுராதபுரத்தில் நடத்தப் பட்ட ஆய்வுகள் இவற்றைத் தலைகீழாகப் புரட்டி விட்டன. கி.மு.450க்கு முன்னமே பிராமி எனப்படும் எழுத்து இலங்கையில் இருந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. மேலும் எழுத்துக்கள் பழைய பெரிய சீரற்றவை போல் இல்லாமல் சிறிய நன்கு உறுப்பு அமைந்தும் காணப்பட்டன. இந்தத் தொடக்க கால வளர்ச்சி முறையானது எழுத்துக்களும் அவற்றின் படிமுறை வளர்ச்சியும் அவை இங்குதான் ஏற்பட்டிருக்கும் எனக் காண்பது போல் உள்ளது.

தொடக்க கால எழுத்துகள் களிமண் பாத்திரங்களில் அவற்றின் உரிமையாளர்களின் பெயர்களாகவும் உள்ளன. ஆயினும் அவை ஆட்களின் பெயர்களாக அல்லாது அவற்றில் வைக்கப்படும் பொருட்களின் பெயர்களாகவும் இருக்கலாம் என்ற கோணத்திலும் படித்தறிய முயற்சிகள் மேற்கொள்ளப் படுகிறது.

கி.மு.450 முன்னரே நகர வாழ்வும் விவசாயம் வர்த்தகம் என அனுராதபுர நகரம் இருந்துள்ளது என்றால் விஜயன் வருகையோடு உருவான சிங்களம் எமக்கு இத்தீவில் உரிமை இல்லை எனக் கூற நாம் எப்படி அனுமதிப்பது?




"எல்லோரும் வாருங்கோ சாப்பிடுவோம் என்று அழைத்தாள் கீதா. வீட்டுத் தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருந்த சிவாவும் பிள்ளைகளும், ஓடி வந்து உட்கார்ந்து கொண்டார்கள் காலை உணவை சாப்பிடுவதற்கு. கீதா உணவை பரிமாரிக்கொண்டு கணவரிடம் கூறினாள்," காலையில் மாமா தொலைபேசியில் அழைத்து, நாளைக்கு 10.30 க்கு விமான நிலையத்தில் வந்து இறங்குறாராம், உங்களை வரச் சொன்னார் ஏத்துவதற்கு. "அப்பா வாராரா? ஏனாம்? திடீரென்று? கனடா வெருத்து போய் விட்டதாமா ? என்றார் சிவா. "ஏனப்பா தாத்தா வந்தால் நல்லம் தானே? நாங்களும் இன்னும் அவரை காணவில்லை, வரட்டும், என்றார்கள் பிள்ளைகள்". அப்படியே அன்றைய பொழுது தாத்தாவின் கதையோடு இருளை கவ்வியது. மறு நாள் வழமைப் போல் கீதாவும் தங்கள் வேலைகளில் ஈடுபட்டனர். சிவா தந்தையாரை அழைத்து வர, விமான நிலையத்துக்குச் சென்று விட்டார். கீதாவும் அன்று வேலைக்கு விடுமுறை எடுத்துக்கொண்டு, மாமாவுக்காக விசேசமான சமயலில் ஈடுப் பட்டுக் கொண்டிருந்தாள். வீட்டு மணிசத்தம் கேட்டது. கீதாவும் பிள்ளைகளும் வாசலிற்கு விரைந்துச் சென்று, மாமாவை வரவழைத்தனர். "மாமா வாங்கோ வாங்கோ என உள்ளே அழைத்து, எல்லோருமாக சாப்பாட்டு மேசையிலே அமர்ந்து கொண்டார்கள். "களைத்துப் போய் வந்திருப்பீர்கள் மாமா சாப்பிட்டுக் கொண்டே உரையாடுவோம்! என்றாள் கீதா. அப்போது குருக்கிட்டார் சிவா. அது சரி, ஏன் திடீர் என்று இந்த முடிவெடுத்து வந்திருக்கிங்க ? முக்கியமான விடையம்தான் தம்பி. நான் வேலை செய்யிர அலுவலகத்தில, ஒரு கருத்தரங்கு நடத்தினோம். அதில் ஏரக்குறைய 15 நாட்டுக்காரர் கலந்து கொண்டனர். இந்த முறை, எங்கள் தமிழர்களின் வாழ்வும் அரசியல் நோக்கும் என்ற முக்கியமான விடையமும், இன்றைய காலகட்டத்துக்கு ஏற்ற செயல்ப்பாட்டுகள் பற்றியும், அங்கே பேசப்பட்டது. ஆகவே, எங்கள் அமைப்பின் செலவில் உலகெங்கும் வாழும் தமிழர்களிற்கு இந்த கருத்தரங்கை எடுத்துரைப்பதற்கு என்னை அனுப்பி வைத்தார்கள். அதனால் தம்பியோட கதைச்சுப் போட்டு, இன்று பரிசிலச் செய்யலாம் என்று வந்துள்ளேன் என்றார் அகிலனாதன். "ஓ, நல்ல விசயம்தானே. உங்களைப் போல் எல்லோரும் நினைத்தால், நல்லம்தான். ஆனால் இப்ப எல்லாரும் தங்க தங்க தொழிலோடையும், சோலியோடையும் ஒதுங்கி இருக்கினும். ஒன்றுக்கும் வருவதில்லை, என்றாள் கீதா. அப்போது சிவா குருக்கிட்டார். "பிரைச்சனையில்லை, முடிந்த வரை அறிவிப்போம். வாறவை வரட்டும். வருகிற சனிக்கிழமைச் செய்யிரமாதிரி ஒழுங்குப் படுத்துகிறேன் என்றுக் கூறிவிட்டு வெளியே புறப்பிட்டுவிட்டான், சிவா. தாத்தா வந்திருந்ததால் ஒரு வாரம் எப்படி ஓடியதென்று, தெரியவில்லை. அன்று காலை சிவா தகப்பனை அழைத்துக் கொண்டு, ஒழுங்குப் படுத்திய மண்டபத்திற்கு சென்றார். அதிசயம்தான்! ஒரு நாளும் இல்லாதவாறு, இன்று அவ்வளவு கூட்டம். கூடுதலானவர்கள் வந்தார்கள். என்னவாம் திடீரென்று ஒரு கூட்டம் என்றார் வந்தவர்களில் ஒருவர். "யாருக்கத் தெரியும், நானும் உன்னைப் போலத்தானே என்றார் மற்றொருவர். சில நிமிடம் கழிந்து, கூட்டம் ஆரம்பித்தது. சிவாவின் தந்தையார், தன் அமைப்பைப் பற்றியும், தன்னைப் பற்றியும் அறிமுகப்படுத்திக் கொண்டார். இரண்டு நிமிடம் மௌன அஞ்சலியுடன், நிகழ்வு ஆரம்பித்தது. "இவர் நம்மிட ஆள்தான், என்றார் ரகசியமாக ஒருவர் , தன் நண்பரிடம். "எப்படி சொல்கிராய் என்றார் மற்றவர். மாவீரருக்கு அஞ்சலி செலுத்துகிறார், அதனால்தான் சொல்கிறேன்.

அகிலனாதன் ஆரம்பித்தார். வணக்கம்! அன்பான எம் தமிழ் உறவுகளே! இன்றைய காலக்கட்டத்தில் ஓர் முக்கியமான தேவைகளோடும், கவனமாகவும், நிதானமாகவும், துரிதமாகவும், சிந்தித்தும் செயற்பட வேண்டிய காலம். இந்த ஆண்டும் எமக்காக, நமது தேசத்தின் விடுதலையை, எமது உரிமைகளை, இறுதிப் போரில் நடந்த மனிதஉரிமைமீறல்களை, உலகத்திற்கு எடுத்துக்காட்ட ஓர் சந்தர்ப்பம் அமைந்த ஆண்டாக இந்த ஆண்டு மலந்திருக்கின்றது. உலகம் எமக்காக, எங்கள் உரிமைக்காக குரல் கொடுக்குறார்கள் என்றுதான் நாம் நம்பினோம். இங்கேதான் மகா தவறு நடந்திருக்கிறது.

இந்தியா முதல் அமேரிக்கா வரை, எங்கள் இழப்புக்களை மையமாக வைத்து, தமிழினத்தை விளையாட்டுக் கருவிகளாகவும் அவர்களின் அரசியல் சாதனங்களாகவும் பயன்படுத்துகிறார்கள் என்பதுதான் உண்மை. ஆகவே, அரசியல் வேலைகளைப் பார்க்க, எங்கள் அமைப்புகள் இருக்குறார்கள். ஆனால் எங்கள் மக்களின் வாழ்வுனிலை சீரற்ற நிலையில் இருப்பதாக, மனிதவாழ்வியல் ஆய்வாளர்களினால் கூறப்படுகிறது. எனவே நாமும் எமது எதிர்காலச் சந்ததியும் எப்படி வாழ்வது? வாழ்வில் நாம் எதை இழந்து வாழ்கிறோம் என்பதை, விளக்கவே இந்த கருத்தரங்கை ஒழுங்கு செய்துள்ளேன். வாழ்க்கை ஒரு கலை. மக்கள் எப்படி வாழ வேண்டும் என்று, ரிக்யஜிர்- சாம அதர்வ வேதங்கள் வகுத்துள்ளன.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - வானுரையும் தெய்வத்துள் வைக்கப்படும் , என்று திருக்குறள் மிகவும் தெளிவாக தெரிவிக்கின்றது. இந்த உலகில் வாழ வேண்டி முறைப்படி வாழ்பவர், மனிதனாக இருந்தாலும், வானுலகில் வாழும் தேவர்களில் ஒருவராக வைத்து மதிக்கப் படுவர் என்பது, இந்த குறளிற்கு பொருள் இன்றைய மனிதன் வாழ்க்கையென்ற கலையைத் தெரிந்தோ தெரியாமலோ, வேகமாக இழந்து வருகிறான் மனிதன் உலகில் பல நாடுகளில் அழிவை நோக்கி வேகமாக போய்க்கொண்டிருக்கிறான். அந்த அழிவு பயணத்தை தடுக்கும் முயற்சியாக எதுவும் நடைபெறவில்லை. அதிகப் படுத்தும் நடவடிக்கைகளே நிகழ்கின்றன. இது மிகவும் கவலை தரும் நிலவரம். என்று அறிவியல் வல்லுணர்களும், பிற அறிஞர்களும் எச்சரிக்கை செய்கிறார்கள். வன்முறை, வாழ்க்கையில் ஒரு இயல்பாகவே ஆகிக்கொண்டு வருகிறது. சமுதாயத்தில் எல்லாத் துறைகளிலும் வன்முறை பரவியுள்ளது. கொலை கொள்ளை, கடத்தல், கற்பளிப்புப் போன்றவை பண்டைய காலத்திலும் நிகழ்துள்ளன, எனினும் இப்போது அவற்றின் பரிமாணமும் அதன் அளவும், பயப்படவைக்கும் அளவிற்கு அதிகரித்துள்ளன. பத்திரிக்கைகளை அன்றாடம் வாசிப்பவர்கள், இந்த நிலை அறிவார்கள். இன்றைய இளம் சமுதாயத்திலும் வன்முறை மிக வேகமாக பரவி வருகிறது. உலகில் மிக முன்னேற்றம் அடைந்த நாடுகளிலும் மிகவும் வலிமை கொண்டதாகவும் வன்முறை வளர்ந்து வருகிறது. இந்த வகையில்தான் கடத்தல்களும் இணைக்கப் படுகின்றன. பொருட்களை கடத்துவது, ஆட்களை கடத்துவது என்று பல வகைகளில் இக் காரியங்கள் நிகழ்கின்றன. இப்படியான செயல்கள் உலகில் பரவி வருவதற்கு, அரசியல்வாதிகள், அதிகாரிகள் ஆகியோரே பெருமளவில் பொறுப்பாவார்கள். இதற்கு இலங்கை அரசாங்கம் நல்ல உதாரணம். புதிதாக ஒரு சொல் இலங்கையில் இடம்பெறத் தொடங்கியிருக்கின்றது. வெள்ளை வான் - அந்தச் சொல் குற்றங்களை ஒரு தொழிலாகத் தைரியமாகவும், தயக்கமில்லாகவும் பெரும்பாலும் அரசில்யவாதிகள் அதிகாரிகளின் துணையோடும் நடைபெறுகின்றது. உலகில் பல அரசியல்வாதிகள் பொதுமக்களின் நலன்கள் குறித்து ஒருபோதும் சிந்திப்பதில்லை. அவர்கள் மக்களிடமிருந்து வெகு தூரம் சென்றுவிட்டனர். அதற்கு உதாரணம், எமது ஈழப்போரின் முடிவும் முள்ளிவாய்காலில் நடந்த மனிதஉரிமை மீறல்களும், சென்ற மாதம் ஜெனிவாவில் அவர்கள் எமக்காக வைத்த தீர்மானங்கள். இக்காலத்து அரசியவாதிகள் தர்மம், நீதீ, நியாயம், மனித-உரிமைகள் ஆகியவை குறித்து சிறிதுகூட கவலைப் படுவதில்லை. அமெரிக்கா முதல் இந்தியா வரை சுயனலம் தான் அவர்களின் குறிக்கோள், இலட்சியம். ஒருவர் அல்லது இருவர் இதற்கு விலக்காக இருக்கக் கூடும். இப்படி எத்தனையோ பிரைச்சனைக்கு மத்தியில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எப்படியோ வாழ்க்கை போகிறது, அப்படியே வாழ்ந்து விடுவோம் என்று, இருந்து விட முடியாது. தயவு செய்து எம் தமிழ் உறவுகளே! எம் முன்னே, எவ்வளவோ வேலைகளும், தெரிந்து கொள்ளவேண்டிய விடையங்களும் தயாராகிக் கொண்டிருக்கின்றன. மறுபடியும் கேட்கிறேன். தயவு செய்து எங்கள் அமைப்பினருடன் கலந்துரையாடி, அவர்களின் ஆக்கங்களை அறிந்து, உங்களது முழுமையான ஒத்துழைப்பை குடுத்தால்தான், எமது இலட்சியத்தை நாம் அடைய முடியும். கடைசியாக ஒன்றை கூறுகிறேன். சமுதாயத்தில் நிகழக்கூடிய பாவங்கள் ஏழு, என்று காந்தியடிகள் குறிப்பிட்டார். அதாவது கொள்கை இல்லாத அரசில், உழைப்பு இல்லாத செல்வம், ஒழுக்கம் இல்லாத வாணிகம், நன்னடத்தை இல்லாத கல்வி, மனட்சாட்சி இல்லாத இன்பம், மனிதத்தனம் இல்லாத விஞ்ஞானம், தியாகம் இல்லாத வளிபாடு.

இந்த 7 பாவங்களும் தினசரி உலகில் நடந்துக்கொண்டிருக்கின்றது, என்பது வருத்தமான ஓர் உண்மை. இந்த மோசமான நிலவரத்துக்கு ஈழத்தமிழர்களின் அரசியலும், வாழ்க்கையும் ஆகி விடக் கூடாது என்பதே எங்கள் வேதமாக நான் கருதுகிறேன். தமிழரின் தாகம் தமிழீழ தாயகம்!

என்று கூறி விடைப் பெற்றுக் கொண்டார் - அகிலனாதன்.

# மின்னஞ்சல் முறையை உருவாக்கியவர் ஒரு 16 வயது தமிழ் இளைஞரே!



கண்டு பிடிப்புகள் என்றாலே எல்லாம் மேல் நாட்டவராலும் அமெரிக்கர் ஜப்பானியராலும்தான் முடியும் என்ற நினைப்பு எம்மில் பலருக்கு உண்டு. ஆனால் கணிணி மென் பொருள் வடிவமைப்பில் கணிசமான தொகையினர் தமிழர், குறிப்பாகத் தமிழ் நாட்டைச் சேர்ந்த தமிழரின் பங்களிப்பும் உள்ளது என்பது மிக அரிதாகவே வரும் செய்திகளாக உள்ளன. காரணம் கண்டு பிடிப்பவருக்கு அதனை வர்த்தக மயப்படுத்தும் வசதிகள் இருப்பதில்லை. அமெரிக்கர்கள் எங்கு எவரிடம் என்ன திறமை வெளிப் பட்டாலும் உடனே அதனைத் தாமே தமது நிறுவனத் தயாரிப்பாக வெளியிட்டுப் பணமும் புகழும் தேடிக் கொள்வர்.



1978ல் 14 வயதில் வி.ஏ.சிவா ஐயாத்துரை மின் அஞ்சலில் யாருக்கு, யாரிடம் இருந்து,பிரதிகள், இரகசிய பிரதிகள் ( to, from, cc, bcc) என்பன போன்ற வழி முறைகளை வடிவமைத்துத் தமது கண்டு பிடிப்பைக் காப்புரிமை செய்ய முடியாது இருந்த காரணத்தால் வெளி உலகில் அறியப்படாமல் இருந்து வந்துள்ளது

அமெரிக்க சிமித்சோனியன் நிறுவனத்தின் இணையத்தில் தொடர்ச்சியான கட்டுரைகளின் மூலம் தபால் திணைக்களத்தின் செயல் திறனை வளர்த்தெடுக்க சிறுவனாக இருந்த சிவா ஐயாத்துரை அந்த நிறுவனத்துக்கு 1978ல் அறிமுகமானார். அப்போது அவர் வடிவமைத்த மின்னஞ்சல் செயல்முறையே இப்போது உலகமெங்கும் பெரும் தகவல் புரட்சியைச் செய்து வருகிறது.

சிமித்சோனியன் நிறுவனம் இது தொடர்பாக 50,000 வரிகளைக் கொண்ட சங்கேதக் குறிகளை 14 வயது சிவா ஐயாத்துரை பெயரில் காப்புரிமை செய்து அதனை அமெரிக்கத் தேசிய வரலாற்று ஆவணக் காப்பகத்தில் பாதுகாக்கவும் அதனை இணையத்தில் காட்சிப் படுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது பற்றிய தமது நினைவுகளை மீட்டிய சிவா தாம் அமெரிக்கா வந்த காலத்தில் றேகன் ஆட்சியில் இன வெறி பெரிய தடையாக இருந்தது எனவும் அதனால் மிகவும் சிரமங்களுக்கு மத்தியில்தான் சமுதாயத்தோடு இணைய முடிந்தது என்றார். பல்கலைக்கழக வளாகத்தில் ஏனையோர் நல்ல வரவேற்புத் தர மறுத்தனர் எனவும் தெரிவித்தார்.




Bern மாநகரில்

SIVA SALON

Herren Coiffeur

Öffungszeiten:
Mo - Fr: 10:00 - 19:00
Sa: 08:30 - 17:00



ஆண்களுக்கான சிகை அலங்காரம்.

Konizstrasse 70
3008 Bern

Tel: 031 381 0287
Natel: 078 318 31 45
079 595 41 32

மின்னஞ்சல் முறையை வடிவமைத்த பின்னர் வகுப்பில் வெறுப்பும் தீவிர அரசியலில் நாட்டமும் ஈடுபாடும் கொண்டிருந்ததாகவும் கூறினார். இந்தியாவில் இருந்து இறுக்கமான சாதிக் கட்டுப் பாடுகளுக்குள் இருந்து வந்த நிலையில் கறுப்பு இனத்தவருடனும் வறிய வெள்ளை இனத்தவரோடும் அடையாளப் படுத்தப்பட்டேன். இத்தகைய அமைப்பு முறையை எப்படி மாற்றுவது என்ற திகைப்பில் எனது நேரத்தைத் தொழில் நுட்பக் கல்வியிலும் அரசியலைக் கற்கவும் பயன் படுத்தினேன் என்றார்.

பல விடயங்களுக்கு மத்தியில் இன்றைய பிரச்சினையாக உலகம் கணிப் பொறியை அல்லது மென்பொருளை எப்படிச் சிறப்பாகச் செய்வது என்பதல்ல. அவை பெரிதும் வெளியிலிருந்து செயற் படுத்தப் படுகின்றன. மிகப் பெரிய பிரச்சினையாக இருப்பது பாரிய அளவிலான செயல் வடிவத் திட்ட அமைப்புகளே. கல்வி, போக்குவரத்து மற்றும் உறவு முறைகளை நினைத்துப் பாருங்கள் என்று கண்டு பிடிப்புகளுக்கான பாரிய தேவைப் பரப்பை நினைக்க வைக்கும் இவரது தெளிவான சிந்தனை ஓட்டம் மூலம் வியக்க வைக்கிறார். 14 வயதில் மின் அஞ்சலின் தந்தை ஆனவர் அல்லவா? அவருக்கு அகரம் சகல வளமும் புகழும் பெற்று நீண்ட காலம் நலமுடன் வாழ வாழ்த்துகிறது.





சிவராம் நினைவுக் கருத்தரங்கு - 4

*சிறி லங்காவுக்கு எதிரான ஐ.நா. தீர்மானமும் தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலமும்*

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்**

த.தே.கூ. நாடாளுமன்ற உறுப்பினர் (வன்னி மாவட்டம்),
தலைவர், தமிழீழ விடுதலை இயக்கம்

இடம்

**Swiss Universal college conference hall**

**Bahnhofstrasse 6, 8952 Schlieren (ZH)**

காலம்

**ஞாயிறு, ஏப்ரல் 29 பி.ப. 03:00 மணி**

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

ஏற்பாடு: சிவராம் ஞாபகார்த்த மன்றம், சுவிஸ்

தொடர்புகளுக்கு: 078 736 18 38, 076 260 02 35

sivarammemorialsociety@gmail.com

http://dsivaram.blogspot.com

ஜேர்மன் நாட்டில் ஆடைகளின் ராணி நவநாகரிகத்தில் மகாராணி

**Jasmine Silk House**

சிறியவர் முதல் பெரியவர்கள் வரை
அனைவருக்குமான ஆடைகளை
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.




Fester Str. 50, 40882 Ratingen
Tel: 021 028 447 44 Mobile:0173 1937 325



# நயினாதீவு

வண்ணை தெய்வம்

கடந்த இதழின் தொடர்ச்சி...

இந்தத் தீவின் தொன்மை பற்றிய வரலாற்றில் சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற இலக்கிய நூல்களில் மணிபல்லவம் எனக் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில்த்தான் இன்றைய விகாரை அமைந்திருக்கும் இடமென குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இன்று பௌத்த சமய மக்கள் இத்தீவினை நாகதீபம் என்றே அழைக்கின்றார்கள்.

வடபகுதியில் போர்ச்சூழல் இடம்பெற்ற காலங்களில் யாழ்ப்பாணத்தில் உள்ள விகாரைகூட இடிக்கப்பட்டு விகாராதிபதிகள் தங்கள் ஊர்களுக்குச் சென்றிருந்தபோதும்கூட நயினாதீவில் உள்ள விகாரை மட்டும் எந்தவிதமான அசம்பாவிதத்திற்கும் உட்படாது வழமைபோல இயங்கி வந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கையின் முதலாவது வரலாற்று ஆசிரியரான சைமன் காசிச்செட்டி என்னும் அறிஞர் 1834ம் ஆண்டு எழுதிய நூல் ஒன்றில் குறிப்பிடும்போது மகோதரன், குலோதரன் என்ற அரசர்களுக்கிடையே இங்குள்ள மணிப்பீடம் ஒன்றிற்காக ஏற்பட்ட தகராறை தீர்த்து வைப்பதற்காக கௌதம புத்தர் இத் தீவிற்கு வந்து அந்த இரத்தினங்கள் பதித்த மணியாசனத்தில் அமர்ந்து இந்த ஆசனம் தனக்குரியதே எனக் கூறியதாக விபரித்திருக்கின்றார்! ஏனத் தற்போதைய ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள். மேலும் அந்த நூலில் இத் தீவின் விபரங்களைக் குறிப்பிடும்போது பனந்தோப்புகள், வயல்கள், பாம்புகள் உள்ள இத்தீவில் அறுபது குடும்பங்களே வாழ்ந்திருந்ததாகக் குறிப்பிட்டிருந்ததாகவும் தற்போதைய ஆய்வாளர்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது. ஆனால் தற்பொழுது நாநூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றார்கள்.

இதே நேரத்தில் இலங்கையின் சரித்திரத்தை நோக்கினால் வடபகுதியில் நாகர் என்னும் ஓர் இனத்தவர்கள் வாழ்ந்ததாகவும், இந்த நாகர் இன மக்களின் வழிபாடு நாகபாம்பே என்றும் அந்த நாகபாம்புகள் இத்தீவில் அதிகமாக வாழ்ந்ததால் இத் தீவிற்கு நாகதீவு, நாக நயினாதீவு எனப் பெயர்கள் வந்ததாகவும் கூறப்பட்டிருக்கின்றது.

சரித்திர ஆராய்ச்சிகள் எவ்வாறு இருப்பினும் ஆண்டுதோறும் இங்கு வரும் பௌத்த, சைவ யாத்திரிகர்களை நோக்கும்போது அவர்களையெல்லாம் தன்பால் ஈர்க்கும் பெருமை இந்த நயினாதீவிற்கு இருக்கின்றது என்பதை உணர முடிகின்றது.

தற்பொழுது புளியந்தீவு என்னும் இடத்தில் நாகதம்பிரான் ஆலயம் என்னும் பெயரில் ஒரு ஆலயம் இருக்கின்றது. இது போர்த்துக்கீசர் இலங்கைக்கு வந்தகாலத்தில் நயினாதீவிலும் அவர்களுடைய அதிகார மையம் இருந்ததாகவும் அவர்கள் அங்கிருந்த நாகதம்பிரான் ஆலயத்தை இடித்தபோது அனலைதீவு மக்களால் அங்கிருந்த விக்கிரகம் எடுத்துச்செல்லப்பட்டு புளியந்தீவில் அந்த ஆலயத்தை உருவாக்கியதாகவும் வரலாறுகளில் கூறப்பட்டிருக்கின்றது. பின்னர் போர்த்துக்கீசர் இலங்கையை விட்டு வெளியேறிய பின்னரே மீண்டும் நாகபூசணி அம்மன் ஆலயம்

HMH
Asianshop
&
Trinkhalle
குறைந்த விலையில் தரமான பொருட்களை பெற்றுக்கொள்ளலாம்
Heinrich Gustav Str. 82
Bochum Werne
Germany
Tel.: 0234 52 84 783

புதிதாகக் கட்டப்பட்டு நயினாப்பட்டர் என்னும் பூசகர் இவ் ஆலயத்தின் பிரதான பூசகராக இருந்ததாகவும் வரலாறுகள் சொல்கின்றன.

இதே காலத்தில் நயினை நாகபூசணி அம்மனின் மரகதத் தேரை போர்த்துகீசர் கடலுக்குள் இறக்கி மூழ்கடித்ததாகவும், அதன் பின்னர் புதி-தாகக் கட்டப்பட்ட நயினை அம்மனின் தேர் வீதிவலம் புறப்படும்போது கடல் நீர் ஆழம் குறைந்து மூழ்கடிக்கப்பட்ட அந்தத் தேரின் முடி மக்களுக்குத் தெரிவதாக ஒரு ஐதீகம் இப்பொழுதும் சிலரால் பேசப்படுகின்றது!...

ஈழத்துப் புலவர்கள் என்னும் சரித்திரப் புத்தகத்தில் குறிப்பிடப்படும் "வரகவி நாகமணிப் புலவர்" நயி-னாதீவிலேயே பிறந்தவராவார். இப்புலவர் எழு-திய "நயினை நீரோட்டயமக அந்தாதி" என்னும் நூல் பலரின் பாராட்டுதல்களைப் பெற்ற நூலா-கும்.

பெரிய வைத்தியமனையோ, நிர்வாக அலுவலகங்களோ இல்லாத இத்தீவில் அன்றாட உணவுப் பொருட்கள்கூட யாழ்ப்பாணத்தில் இருந்தே கொண்டு செல்லப்படும். அதே நேரத்தில் அங்கு நயினை மகாவித்தியாலயம், நயினை கணேச வித்தியாலயம், நயினை நாகபூசணி வித்தியாலயம் என மூன்று வித்தியாலயங்கள் இருந்தபோதும் அங்குள்ள கல்விமான்கள் அன்று தங்களது உயர் கல்வியை தொடர்வதற்காகத் தினமும் கடற்பயணமும், தரைப்பயணமுமாக நீண்டதூரம் பயணம் செய்தும் யாழ்ப்பாணத்து பாடசாலைகளின் விடுதிகளில் தங்கியிருந்துமே கல்வி கற்றார்கள்.

நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்டு யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலுமாக வர்த்தகத்தில் புகழ் பெற்றவர்கள் ஏராளம் பேர்! யாழ்ப்பாணத்தில் உள்ள பூபாலசிங்கம் புத்தகசாலையின் உரிமையாளர் ஆர்.ஆர். பூபாலசிங்கம் அவர்களின் பூர்வீகம் நயினா தீவுதான்! இதேபோல யாழ்ப்பாணம் பொலிஸ் எஸ்.பி.யாக இருந்து பின்னர் இண்டர்போல் பொலிஸ் திணைக்களத்தில் பணியாற்றிய திருவாளர் சுந்தரலிங்கம் அவர்களின் பூர்வீகமும் நயினாதீவுதான். இவர்களுடன் வித்துவான் ப.க.காமாட்சிசுந்தரம், வித்துவான் குமாரசாமி, பண்டிதர் நா.கந்தசாமி, பண்டிதர் ப.க.குகதாசன், பண்டிதை திருமதி.பாலசுந்தரம், வித்துவான் நா.க.சண்முகநாதம்பிள்ளை, வித்துவான் இ.ச. செல்லத்துரை, ஆகியோர்களுடன் ஆயள்வேத வைத்தியர் தம்பையா-சோமசேகரமும், இன்னொரு ஆயுள்வேத வைத்தியரான கஸ்தூரி ஆ.இராமுப்பிள்ளை ஆகியோருமாக நயினாதீ-வின் பேர்சொல்வதற்கென இன்னும் நிறையவே கனவான்கள் இருக்கின்றார்கள்.

இந்தச் சின்னஞ் சிறிய தீவு விவசாயம் செய்வதற்குரிய சிறந்த நிலமாக விளங்காத போதும் மக்களின் உழைப்பாலும், விடா முயற்சியாலும் இயற்கை வளங்களான பசளைப் பொருட்களைப் பயன்படுத்தி விளை நிலங்களாக மாற்றி புகையிலை, மிளகாய், வெங்காயம் போன்ற வர்த்தகப் பொருட்களையும், சிறு தோட்டப் பயிர்களாக கத்தரி, வெண்டி, தக்காளி போன்ற ஏனைய மரக்கறி வகைகளையும் பயிரிட்டு தங்களது சுய தேவைகளைப் பூர்த்தி செய்து வந்துள்ளனர்.

நயினாதீவு என்னும் இந்த சின்னஞ்சிறிய தீவி-ல் இத்தனை பெரிய வரலாற்றுப் பொக்கிசங்கள் புதைந்திருப்பது நம்மையெல்லாம் ஆச்சரியப்பட வைக்கின்றது.

***இக் கட்டுரையை முழுமைப் படுத்துவதற்காகப் பல தரவுகளைத் தந்துதவிய நயினை மண்ணின் மைந்தரும், பிரான்ஸ் நயினை அபிவிருத்திக் கழகத்தின் செயலாளரும், பாரிஸ் எம்.ஜி.ஆர் வீடியோக் கழக உரிமையாளருமான திரு. கோபாலபிள்ளை-இரத்தினசபாபதி அவர்கட்கு நன்றி!***

**தினமும் ஆட்டுப் பங்கு இறைச்சி அத்துடன்**
**ஆடு, மாடு, கோழி இறைச்சி வகைகள்**
**மொத்தமாகவும் சில்லறையாகவும்**
**பெற்றுக்கொள்ள**

195, rue du Fbg. St-Denis
75010 Paris
Tél.: 01 42 05 23 78
M°: Lachapelle ou Gare du Nord

**ASI Boucherie**
PARIS, FRANCE

**தினமும் நூற்றுக்கணக்கான வாடிக்கையாளர்களிட் தேவையை பூர்த்தி செய்வதால் எமது ஸ்தாபனத்தில் தினமும் புதிதான இறைச்சி வகைகளே விற்பனை செய்யப்படுகின்றது.**

# Milin Impex

*Asiatische Lebensmittel Groß und Einzelhandel*

ஜேர்மனி டோட்முண்ட் மாநகரில் தலைமுறை தலை
முறையாக தரமான ஆசிய, ஆபிரிக்கா உணவுப்பொருட்களின்
இறக்குமதியாளரும் மொத்த, சில்லறை விநியோகஸ்தர்களும்.

யேர்மனியில் உங்களுக்குத் தேவையான எல்லா விதமான
தரமான இலங்கை, இந்திய, மற்றும் ஆபிரிக்கா உணவுப்
பொருட்களைச் சிரமம்மின்றி ஒரே இடத்தில் மலிவாகவும்,
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஒரே
ஒரு 20 வருட அனுபவமிக்க நிறுவனம்.

Web: www.milinimpex.de E-Mail: info@milinimpex.de

Dortmund நகரில்
Westendorfstr. 41
44287 Dortmund
Tel: 0231 459617/28
Fax: 0231 1815288

Wuppertal நகரில்
Aue – 94
42103 Wuppertal
Tel: 0202/29995869

Lüdenscheid நகரில்
Höchstr. 8a
58511 Lüdenscheid

அத்துடன் உங்கள் வசதிக்கு ஏற்ப
நீங்கள் வீட்டில் இருந்தபடியே எம்மிடம்
பொருட்களை மொத்தமாகவும்
சில்லறையாகவும் ஓடர் செய்து
பெற்றுக் கொள்ளலாம்!

**Tel: 0231 45 96 17 / 28**

எமது வாடிக்கையாளர்களுக்கு
இனிய சித்திரைப் புத்தாண்டு
வாழ்த்துக்கள்

Geschäftszeiten:
Dienstag, Mittwoch, Freitag
10:00 bis 19:00 Uhr
Montag & Donnerstag
07:00 bis 17:00 Uhr
Samstags 09:00 - 16:00 Uhr




MoneyGram. P.S. Jewellers 100% Guarantee P.S. Annachi Exclusive Textile Showroom
பிரமாண்டமான... மூன்று காட்சி அறைகள்
தங்க நகைகளின் சமுத்திரம்
உயர்தர பட்டு ஆடைகளின் ஆலயம்
ரெடிமேட் ஆடைகளின் சிகரம்
P.S.
உங்கள் முல்லைகம் P.S. பவான் அண்ணாச்சி
Indische Textilien & Schmuck
Tel : 0208-444 89 53 Mobil : 0172-2607388
Saarbrucken (Saarland) மாநகரில்
நாள் : 2012 ஏப்ரல் 27, 28, 29
மிக பிரமாண்டமான
அதிரடி மலிவு விற்பனை
Parking
50 Parkplätze vor dem Laden
Öffnungszeiten Mo.-Sa. 10.00 - 20.00
ஐரோப்பாவில் மலிவு விற்பனையில்
வெற்றி நடைபோட்டுக் கொண்டிருக்கும்
உங்கள் முல்லைகம்
P.S.பவான்®
அண்ணாச்சி
இப்போது முதல்முறையாக
Saarbrucken மாநகரில்
2012 ஏப்ரல் 27 வெள்ளி, 28 சனி,
29 ஞாயிறு ஆகிய திகதிகளில்
உங்கள் தேவைகளை அறிந்து
உங்களை நாடி வருகிறார்
இடம்
ஸ்ரீ மஹா மாரியம்மன் ஆலயம்
Sri Maha Mariamman Tempel
Grubenstr.41. 66280
Sulzbach / altenwald
Saarbrucken Saarland
மேலதிக விபரங்களுக்கு
www.lankasri.com
www.ps-import-export.com
Tel : 0208 4448958
H.P : 01722607388
அக்ஷய திருதியை
24-04-2012 அன்று
தங்க பரிசு வழங்கப்படும்
MoneyGram. P.S. Jewellers 100% Guarantee P.S. Annachi Exclusive Textile Showroom

# Lycamobile



## ஜெர்மனி

சர்வதேச நாடுகளுக்கான தரம் வாய்ந்த அழைப்புக்கள் மிக குறைவான கட்டணத்தில்..!

- மலேசியா
- இந்தியா
- கனடா
- அமெரிக்கா

வீட்டு தொலைபேசி + கைத் தொலைபேசி

**1ct/min**

Lycamobile இல் இருந்து Lycamobile க்கு

**இலவச அழைப்புக்கள்**

---

| | வீட்டு தொலைபேசி | கைத் தொலைபேசி |
|---|---|---|
| இலங்கை | 1ct/min | 12ct/min |
| ஐரோப்பா | 1ct/min இல் இருந்து | |

* வெளி நாடு இணைப்புக்கட்டணம் 15 ct
இச் சலுகை 30/04/2012 வரை செல்லுபடியாகும்.

*சலுகை கட்டணங்கள் கால வரையறைக்குட்பட்டவை. மேலதிக விபரங்களுக்கு www.lycamobile.de

www.lycamobile.de 069 33399-322

Lyca mobile
Call the world for less

Lycamobile வாங்கக்கூடிய இடங்கள்:

Westfalen AG · Agip · JET · AVIA · ICP COMPANIES · LOTTO Sachsen-Anhalt · LOTTO Baden-Württemberg · LOTTO SAARTOTO · LOTTO Hessen · LOTTO Thüringen